உதயன்

விலை ரூபா 20

பக்கங்கள் 28

34c - 27c

தெளிவான காலநிலை

கூடர் 31 | கதிர் 194 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 25, செவ்வாய்க்கிழமை 07.06.2016

பலூஜா நகரின் ஆற்றை கடந்த பலர் உயிரிழப்பு

பக்கம் 14-15

தரைமட்டமானது ராணுவ முகாம்

- போர் வலயமாகக் காட்சி தருகின்றது கொஸ்கம
- நாலாபுறமும் சிதறிக் கிடக்கின்றன வெடிபொருள்கள்
- ஒருவர் சாவு; 47 பேர் படுகாயம்; 70 வீடுகள் சேதம்

கொழும்பு, ஜூன் 7
கொஸ்கம சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடி விபத்தால் முகாம் முற்றாகவே அழிந்து போயுள்ளது. வெடிபொருள்கள் சேமிக்கப்பட்டிருந்த கட்டடங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து தரை மட்டமாகியுள்ளன.
ஆயுதக் கிடங்கில் பற்றிய தீ கடும் போராட்டத்துக்கு மத்தியில் நேற்றுப் பிற்பகல் அணைக்கப்பட்டாலும், முகாமைச் சுற்றியுள்ள பிரதேசமே அழிவுப் பிரதேசமாகக் காட்சியளிக்கின்றது. இந்த வெடி விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர்

பக்.24

மேலும் செய்திகள், படங்கள் 2ஆம், 10ஆம், 11ஆம் பக்கங்களில்

ஆயுதக் கிடங்கு விபத்து விவகாரம் இன்று சபைக்கு

கொழும்பு, ஜூன் 7
கொஸ்கம - சலாவ இராணுவ முகாம் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்து தொடர்பில் மகிந்த ஆதரவு அணியினர் நாடாளுமன்றத்தில் இன்று கேள்வி எழுப்பவுள்ளனர்.

பக்.25

தேசிய பாதுகாப்பை அச்சுறுத்தும் சம்பவம் - மகிந்த

கொழும்பு, ஜூன் 7
சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவம் தேசிய பாதுகாப்புத் தொடர்பான அச்சுறுத்தலுடன் தொடர்புடைய விடயம்.
இவ்வாறு

பக்.06

நெடுந்தீவில் கரை ஒதுங்கிய ஆணின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
நெடுந்தீவுக் கடற்கரையில் நேற்று உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
நெடுந்தீவுக்

பக்.06

போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றமே தேவை

2017 மார்ச்சுக்கு முன்னர் அதனை நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. நிபுணரிடம் 6 சிவில் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 7
போர்க்குற்ற விசாரணையை நடத்தவும், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கவும் கலப்பு நீதிமன்றத்தை 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னர் இலங்கையில் நிறுவுமாறு 6 சிவில் அமைப்புகள் கூட்டாக இணைந்து, ஐ.நா.வின் நிலைமாற்று நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசேட அறிக்கையாளரான பப்லோ டி கிரீப்பிடம் நேற்று நேரில் வலியுறுத்தியுள்ளன.
பப்லோ டி கிரீப் இலங்கைக்கு நேற்றையதினம் வருகைதந்தார். இவர், கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் சிவில் சமூகத்தினரை நேற்று பிற்பகல் 3 மணிக்குச் சந்தித்தார். சந்திப்பில் கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதியும் சட்டத்தரணியுமான நிரான் அங்கிற்றல் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை

பக்.23

ஆயுதக் கிடங்கு வெடிப்பு நன்கு திட்டமிட்ட ஒரு சதி

வெளிநாட்டு நிபுணர்கள் கருத்து

கொழும்பு, ஜூன் 7
கொஸ்கம - சலாவ இராணுவ முகாமில் இரண்டு ஆயுதக் கிடங்குகள் முற்றாக எரிந்து நாசமடைந்துள்ளமை வேண்டுமென்றே செய்யப்பட்ட சூழ்ச்சியாக இருக்கலாம் என்று வெடி

பக்.25

பாதுகாப்புப் பிரதேசமாக உறுதி வழங்க முடியாது

இராணுவம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 7
சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட விபத்தால் முகாமை அண்மித்துக் காணப்படும் பிரதேசத்தை பாதுகாப்பான பிரதேசம் என்று தற்போதைக்கு உறுதிப்படுத்திக் கூற முடியாது.
இவ்வாறு இராணுவ ஊடகப் பேச்சாளர்

பக்.25

கொஸ்கமவில் வீடிழந்தோருக்கு புதிய வீடுகளை அரசு வழங்கும்

சலாவ இராணுவ முகாமுக்கு சென்ற பிரதமர் ரணில் உறுதி

கொழும்பு, ஜூன் 7
கொஸ்கம - சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சிய தீ விபத்தால் முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள் வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

பக்.25

மனிதப் புதைகுழி வழக்கை இழுத்தடிக்கும் சி.ஐ.டியினர்

மனித எச்சங்களின் ஆய்வுக்காக சட்டத்தரணிகள் பரிந்துரைத்த நிறுவனங்களை நிராகரித்தனர்

மன்னார், ஜூன் 7
மன்னார் - திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி எனச் சந்தேகிக்கும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களைப் பரிசோதனைக்காகச் சட்டத்தரணிகள் பரிந்துரைத்த நிறுவனங்களைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நிராகரித்துள்ளனர்.
பதிலாக அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் உள்ள நிறுவனத்துக்கு அனுப்புவது சிறந்தது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளதோடு, அதற்கான அனுமதியையும் நீதிமன்றிடம் கோரியுள்ளனர்.
எனினும் அந்த நிறுவனத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள்

பக்.23

கடற் பாறையில் சிக்குண்டிருந்த 101 கிலோ கஞ்சா நேற்றிரவு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7
இலங்கைக்குக் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 101 கிலோ கிராம் கேரள கஞ்சா கடலில் மிதந்து பாறையில் சிக்குண்ட நிலையில் நேற்றிரவு மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
காங்கேசன்துறைக் கடலில் உரப்பை ஒன்றி
ளுள் கைக்கற்

பக்.24

வவுனியா விகாரைகளுக்கு சீனா தலா 5 இலட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஜூன் 7
வவுனியா மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட 21 பௌத்த விகாரைகளுக்குச் சீன அரசினால் தலா 5 இலட்சம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.
வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 29 பௌத்த விகாரைகள் உள்ளன. இவற்றின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவுமாறு குறித்த விகாரைகள் கடந்த காலங்களில் மாவட்டச் செயலகங்களின் ஊடாக விண்ணப்பித்திருந்தன. இந்த நிதிக் கோரிக்கை தொடர்பில் கண்டி தலதா மாளிகையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.
மேற்படி வேண்டுகோள்கள் தொடர்பில் கவனம் செலுத்திய தலதா மாளிகை நிர்வாகம், இது தொடர்பில் சீன அரசிடம் நிதியுதவி கேட்டு அறிவித்தல் அனுப்பியிருந்தது. இவற்றைப் பரிசீலித்த சீன அரசு, 29 விகாரைகளில் 21 விகாரைகளுக்கு தலா 5 இலட்சம் ரூபா

பக்.23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இராணுவ முகாம் தீ விபத்தால் 1000 பேருக்கு மேல் இடம்பெயர்வு

கொழும்பு, ஜூன் 7
சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தால் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் - இவ்வாறு இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி தெரிவித்துள்ளார்.
குண்டு வெடிப்பின் பின்னர் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இடம்பெயர்ந்த மக்கள் ஐந்து பொது இடங்களில் பாதுகாப்பான முறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.
இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்குத்தேவையான அனைத்து உதவிகளையும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வழங்கி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.
இராணுவ முகாமிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரையுள்ள மக்களே இவ்வாறு பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
(ற-ஐ-5)

வெடி விபத்தால் வெளியேறியோரை மீள வருமாறு இராணுவம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 7
சலாவ இராணுவ முகாமிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்குப் அப்பால் வீடு கள் உள்ள மக்களை மீண்டும் அவர்களது வீடுகளுக்குத் திரும்புமாறு இராணுவம் அறிவித்துள்ளது. அத்துடன் வெடிபொருள்கள் வெடிக்காத நிலையில் காணப்பட்டால் உடனடியாக அறியத் தருமாறும் இராணுவத் தினர் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.
சலாவ இராணுவ முகாமில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து முகாமை அண்டிய பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டனர். தற்போது சலாவ இராணுவ முகாமிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் வீடுகள் இருந்தால் மீண்டும் திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் இராணுவ முகாமிலிருந்து வெடித்துச் சிதறிய வெடிபொருள்கள் கீழே கிடக்கும் பட்சத்தில் அவற்றை எடுக்க வேண்டாம் எனவும் இராணுவம் அறிவித்துள்ளது.
வெடிக்காத வெடிபொருள்கள் காணப்படும் பட்சத்தில் அது தொடர்பாக 0113 818 609 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் இராணுவம் கேட்டுக்கொண்டுள்ளது.
(ற-ஐ-5)

வெடி விபத்து சம்பவத்தை அரசியலாக்க வேண்டாம்

கட்சிகளிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 7
அவிசாவளை கொஸ்கம - சலாவ இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தை வைத்து எந்தவொரு அரசியல் கட்சிகளும், அரசியல் இலாபம் தேடக் கூடாது என்று அரசு கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித. இலங்கையில் மாத்திரமல்ல உலக நாடுகளில் உள்ள இராணுவ முகாம்களிலும் இது போன்று வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அண்மையில் இந்தியாவிலும் இதுபோன்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது- என்று குறிப்பிட்டார்.
அரசியல் கட்சிகள் இந்தச் சம்பவத்தை அரசியலாக்காமல் இருப்பதோடு, அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகளுக்கு அரசு முழுமையான ஆதரவை வழங்கும் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
(ற-ஐ-5)

ராணுவ முகாம் வெடிப்புச் சம்பவம் சலாவ வைத்தியசாலைக்கும் சேதம்

கொழும்பு, ஜூன் 7
இராணுவ முகாம் வெடிப்புச் சம்பவத்தால் சலாவ வைத்திய சாலைக்கு அதிகளவான சேதம் ஏற்பட்டுள்ளது என்று வைத்திய சாலையின் வைத்தியர் ஜே.பீ. சுபசிங்க தெரிவித்துள்ளார்.
வெடிப்புச் சத்தங்கள் கேட்கத் தொடங்கியதும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் அங்கிருந்து ஓடி விட்டனர். நான் நோயாளர் காவு வண்டியைக் கொண்டு வந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் விட்டுச் சென்றேன் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
எங்களை அந்தப் பிரதேசங்களில் இருந்து அப்புறப்படுத்தி விட்டனர். நேற்றுக் காலை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்த வேளை வைத்தியசாலையின் கட்டடங்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதைக்காண முடிந்தது. வைத்திய சாலையை பழைய நிலைக்குக் கொண்டு வரக் குறைந்தது 6 மாதங்கள் செல்லும் - என்றார்.
அதேவேளை சலாவ வைத்திய சாலையில் நோயாளிகள் எவரும் தங்கியிருந்து சிகிச்சை பெறாததால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஐ-5)

முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவித் திட்டம்

25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் தகவல்

முல்லைத்தீவு, ஜூன் 7
முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் செயல் திட்டம் வடக்கில் இந்த ஆண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா டெனீஸ்வரன் தெரிவித்தார்.
கடந்த வருடம் தவற விடப்பட்ட முன்னாள் போராளிகளுடைய குடும்பங்கள் உட்பட ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து இறந்த அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கும் இந்த உதவித்திட்டம் வழங்கப்பட உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கான தேவை மதிப்பீடுதொடர்பான முதலாவது ஒன்று கூடல் நேற்று கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
வடக்கு மாகாணத்தில் உள்ள புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், போரில் தமது பிள்ளைகளை இழந்த குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சால் கடந்த ஆண்டு 43 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன - என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இந்தத் திட்டத்தில் வடக்குக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக, வடக்கு மாகாணம் முழுவதும் மொத்தமாக 12 ஆயிரத்து 494 குடும்பங்கள் விசேட தேவைகள் உடையவர்கள் என்னும் அடிப்படையில் பயனாளிகளாகப் பதிவு செய்யப்பட்டனர்.
இதன்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 147 குடும்பங்கள் வீதமும், சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் 125 குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 860 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.
அந்த வகையிலே மீதமாக உள்ள பதிவு செய்த குடும்பங்களுக்கும் கடந்த ஆண்டு பதிவு செய்யத் தவறிய நிலையில் இந்த ஆண்டு பதிவுகளைச் செய்த குடும்பங்களுக்கும், ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து இறந்த அங்கத்தவர்களின் குடும்பங்களுக்குமான வாழ்வாதாரக் கொடுப்பனவுகளுக்காக இந்த ஆண்டு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் வீதம் வழங்கப்படவுள்ளது. வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு பயனாளிகளின் வாழ்வாதாரத் தேவைகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.
அதன் முதற்கட்டமாகவே இன்று (நேற்று) விசேட கூட்டம் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் விசேட தெரிவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கான தேவை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
இதேபோன்று தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான தேவை மதிப்பீடு செய்யும் கலந்துரையாடல்கள் மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் நடத்தப்படவுள்ளன.
மன்னார் மாவட்டத்தில் இன்று செவ்வாய்கிழமை மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்திலும், யாழ் மாவட்டத்தில் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சரது அலுவலகத்திலும், வவுனியா மாவட்டத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை வவுனியா உள்ளக சுற்றுவட்ட வீதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திலும், கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளது.- என்றார்.
இந்த விசேட ஒன்றுகூடலில் முல்லைத்தீவு மாவட்ட பங்குத் தந்தை, இந்துமத குருக்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சி.குணபாலன், முல்லைத்தீவு மாவட்ட மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
(ற-ஐ-21)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கொடியேற்றத் திருவிழாவில் பெரும் திரளான பக்தர்கள் திரண்டு அம்மனின் அருளை வேண்டினர்.
(ற-21)

தேசிய போசனை மாதம் - ஜூன் - 2016
சுறு சுறுப்பற்ற வாழ்க்கை முறையும்
[illegible] வழக்கங்களும்
[illegible] தொற்றா நோய்களையே

கொஸ்கம கிணறுகளை மூடி பாதுகாக்குமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 7
கொஸ்கம - சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட தீ விபத்தையடுத்து, குறித்த பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது கிணறுகளை மூடி வைக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார்.
அதேவேளை, சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பொழியும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.
சலாவ இராணுவ முகாம் வெடிப்புச் சம்பவத்தில் அந்தப் பிரதேசம் புகைமண்டலமாகக் காணப்படுகிறது. இந்தநிலையில் அந்தப் பிரதேசத்தில் மழை பொழிந்தால், புகை மண்டலத்தில் காணப்படும் நச்சுப் பதார்த்தங்கள் நீருடன் கலக்கும் வாய்ப்புக் காணப்படுகின்றது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
(ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டன் இராஜதந்திரிகள் கொழும்பில் முக்கிய பேச்சு

கொழும்பு, ஜூன் 7

பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் நிரந்தர கீழ்நிலைச் செயலர் சைமன் மக்டொனல்ட் மற்றும் பிரிட்டன் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தின் நிரந்தரச் செயலாளர் மார்க் லொக்கொக் ஆகியோர் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டு கொழும்புக்கு நேற்று வருகை தந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் இவர்கள் நேற்று முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டனர்.

இலங்கைக்கான இந்தப் பயணத்தின் போது நல்லிணக்க செயற்பாடுகளில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் மற்றும் பிரிட்டன் - இலங்கை ஒத்துழைப்பு குறித்து ஆராய்ந்தனர் என்று பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது. (த-வ-5)

ஹாட்லிக் கல்லூரிக்கு சொகுசு பஸ் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்றைய தினம் அலரி மாளிகையில் வைத்து 7.4 மில்லியன் ரூபா பெறுமதியான அதி சொகுசு பஸ் ஒன்று வழங்கப்பட்டது.

இது தொடர்பில் கல்லூரி அதிபர் த.முகுந்தன் தெரிவித்ததாவது:- 2015 ஆண்டு மார்ச் 27 அன்று எமது கல்லூரிக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எமது கல்லூரியின் தேவை தொடர்பில் கோரிக்கை மனு ஒன்றைக் கையளித்திருந்தோம். அந்த மனுவில் குறிப்பாக எமது கல்லூரியின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுக்காக பஸ் ஒன்று தேவை என வலியுறுத்தியிருந்தோம்.

அதன்பிரகாரம் எமது கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்த பிரதமர், அதனை ஏற்றுக் கொண்டு கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து குறித்த பஸ்ஸை நேற்று எமது கல்லூரி சார்பில் அதிபர், ஆசிரியர்கள் மூவர், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் , அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுடன் வட மாகாண கல்வி அமைச்சின் ஊடாக அழைக்கப்பட்டிருந்தோம்.

குறித்த கையளிப்பு நிகழ்வில் பிரதமருடன் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன், சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் - என்றார். (வ-101)

ராணுவ முகாமைக் கூட பாதுகாக்க முடியாத அரசு

கூறுகின்றார் நாமல் எம்.பி.



கொழும்பு, ஜூன் 7

நாட்டில் போர் நடைபெற்ற காலத்தில் கூட நாம் பாதுகாத்த இராணுவ முகாமை இன்றைய அரசால் பாதுகாக்க முடியாத நிலைமையே காணப்படுவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், யோசித ராஜபக்ச தமக்கு அனுப்பிய பணம் சம்பந்தமான மின்னஞ்சல் தொடர்பில் வாக்கு மூலம் பதிவு செய்வதற்காகப் பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்கு நாமல் நேற்று அழைக்கப்பட்டிருந்தார். விசாரணை முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தேவைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவொன்றை அமைத்து எங்களைப் பழிவாங்குகின்றனர். ராஜபக்ச குடும்பத்தைப் பழிவாங்குவதை விட்டு, அரசு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்-என்றார்.

மேலும் பொய்களைக் கூறிக் கொண்டு அரசைத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாது எனவும் இதன்போது நாமல் ராஜபக்ச தெரிவித்தார். (த-வ-5)

மீண்டும் மீண்டும் கைதாகிறார் பசில்

நேற்றும் கைதாகிப் பின்னர் பிணையில் வெளிவந்தார்

கொழும்பு, ஜூன் 7

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச மூன்றாவது முறையாகவும் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். எனினும் கைதாகிச் சில மணி நேரத்தின் பின்னர் பூகொட நீதிவானால் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொம்பே, மபிரிகம பகுதியில் உள்ள 16 ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்ததில் நிதி மோசடி இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பசில் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு விசாரணைக்காக நேற்று அழைக்கப்பட்ட அவர், விசாரணைகளின் முடிவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து, அவரைப் பூகொட நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். இதன்போது பசில் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

20 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகள் இரண்டு மற்றும் ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் பசில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே திவிநெகும நிதி மோசடி, மாத்தறை காணி கொள்வனவு மோசடி ஆகிய வழக்குகளில் கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்ச கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

ரவிக்கு எதிரான பிரேரணைக்கு ஜே.வி.பி. ஆதரவு

கொழும்பு, ஜூன் 7

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த ஆதரவு அணியினரால் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அடங்கும் சில காரணிகளுக்கு மாத்திரம் தமது கட்சி ஆதரவு வழங்கும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை 8 ஆம் திகதி நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் நாளைய தினம் நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வது கட்டாயமாகப் பட்டுள்ளதாகக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

உயிரிழந்த சிப்பாய்க்கு ஜனாதிபதி இரங்கல்

கொழும்பு, ஜூன் 7

அவிசாவளை கொஸ்கம - சலாவ இராணுவ முகாமில் இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்த இராணுவச் சிப்பாய்க்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி தனது டுவிட்டர் வலைத்தளத்தில் இந்த இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் பாதுகாப்புக்கு தேவையான ஏற்பாடுகளை விரைவாக செய்யுமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

மேசன், கூலி ஆள்கள் தேவை

பிரபல்யமான நிறுவனமொன்றிற்கு மேசன், கூலி ஆள்கள் தேவை. தொடர்பு: 076 660 1600
076 720 4808

அறைகள் வாடகைக்கு

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் அறைகள் வாடகைக்கு உண்டு.
(J 1959)(12.18)
077 9574580

வேலையாட்கள் தேவை

01. மேசன்.
02. மேசன் உதவியாளர்.
03. வெல்டர். (Welder)
04. அலுமினிய பிற்றிங் தெரிந்தவர்கள்.
05. வயரிங், பிளமிங் தெரிந்தவர்கள்.
தொடர்பு: 077 262 3944

பெருமைமிகு கணக்காய்வு பரீட்சகர் சேவையில் இணையுங்கள்

இலங்கை கணக்காய்வு பரீட்சகர் சேவையில் இணைந்து கொள்ள விண்ணப்பிக்கும் இறுதி தினம் இன்றாகும். கணக்கியல் துறையில் தகைமை கொண்டோர் உடன் விண்ணப்பியுங்கள். இலவச வழிகாட்டல் கருத்தரங்கு விரைவில் நடத்தப்படும்.
தொடர்புகளுக்கு:- fb: ipfdl
பொது நிதி மற்றும் தலைமைத்துவ அபிவிருத்திக்கான நிறுவனம். (IPFDL)
ipfdlsl@gmail.com

வீடு வாடகைக்குண்டு

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் பகுதியிலமைந்துள்ள மாடி வீட்டின் மேற்தளம் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 444 0300
077 515 2744

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 013 சீட்டிழுப்பு திகதி 2016.06.06
வெற்றி இலக்கங்கள் 15 20 21
இலட்சாதிபதி தங்க இலக்கம் 71450
இவ்வார இலட்சாதிபதிகள் 059
வழங்கப்பட்ட மொத்த பரிசு 11,901,960/=
தொ.கு: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk SMS: DLB<space>LOT<space>SL என அடிப்பு செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர தகவல் அழைப்பு 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 1268 சீட்டிழுப்பு திகதி 2016.06.06
வெற்றி இலக்கங்கள் 08 27 46 50 V
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 16,637,740/=
தொ.கு: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk SMS: DLB<space>LOT<space>V என அடிப்பு செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர தகவல் அழைப்பு 1919

SUPER BALL சுபர் போல் சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 507
சீட்டிழுப்பு திகதி 2016.06.06
வெற்றி இலக்கங்கள் 16 28 61 64 U
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 58,143,660/=
தொ.கு: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk SMS: DLB<space>LOT<space>SB என அடிப்பு செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர தகவல் அழைப்பு 1919

சேவை நிலையம் இடமாற்றம்

No.320B, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த Micromax Service Centre மற்றும் Singer Digital Service Centre (Huawei, Sony Phone) இன்று (07.06.2016) செவ்வாய்க்கிழமை முதல் இல. 62/31, 1/1, Stanly Road (Link Road), யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் என்பதை அன்புடன் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
(தனியார் பஸ்தரிப்பு நிலையத்துக்கு எதிரில் (வெளிமாவட்டம்))
சேவை முகவர்
021 221 7745, 077 360 8642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையும், ஒற்றையாட்சியும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை

வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 7

ஒற்றுமை என்பதும், ஒற்றையாட்சி என்பதும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. அதனை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். – இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக மக்களின் கருத்துக்களை அறிவதற்கு நியமிக்கப்பட்ட குழு, அரசிடம் கையளித்துள்ள இறுதி அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகள் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன? சிங்களத்தில் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்றும் தமிழ் மொழியில் ஒற்றுமை என்றும் ஆங்கிலத்தில் யுனைற்றெட் என்றும் முரணான பரிந்துரைகளை முன்மொழிந்துள்ள விடயத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது–

ஒற்றையாட்சிவேறு, ஒற்றுமை வேறு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரம் தனிப்பட்ட ஓர் இனத்துக்கு அதாவது பெரும்பான்மை இனத்துக்குப் போய்ச் சேரும். இதன்மூலம் அவர்கள், சட்டங்களைக் காலத்துக்கு ஏற்ப அவர்களின் தேவைக் கமைய மாற்றம் செய்வார்கள்.

இதற்கு அமையவே 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம்செய்து, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக கொண்டு வரப்பட்ட மாகாணத்துக்கான அதிகாரங்கள், 1992 ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவினால் மாற்றப்பட்டது. ஒற்றையாட்சியினால் இவ்வாறான சில சட்டங்களை மாற்றக்கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்கு ஏற்பட்டது.

ஒற்றுமை எனப்படும் போது அது வேறு மாதிரியானதாகும். அதாவது ஒற்றையாட்சி இல்லாமல் சகலரும் இணைந்து ஒற்றுமையாக செயற்படுவதாகும். இதன் போது ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி முறைமை நடைமுறைப் படுத்தப்படும் – என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

கடந்த 5 மாதங்களில் முகநூல் தொடர்பாக 925 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 7

கடந்த 5 மாதங்களில் முகநூல் தொடர்பில் 925 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இணையத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் இந்த முறைப் பாடு செய்யப்பட் டுள்ளது.

925 முறைப்பாடுகளில் சுமார் 95 வீதமான முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை கணினி குற்றச் செயல் விசாரணைப் பிரிவின் பிரதம தகவல் பாதுகாப்புபொறியியலாளர் ரொசான் சந்திரகுப்தா தெரிவித்துள்ளார்.

தனிப்பட்டவர்களின் அந்தரங்கத்தைப் பாதுகாக்கும் வகையில் முகநூல் கணக்குகள் உருவாக்கப்படாமையே இதற்கான காரணமாகும்.

காதலன், காதலி அல்லது நண்பர்களுக்கு இடையிலான பிணக்குகள் முகநூல் வழியாக மோசமாக பிரதிபலிக்கின்றது என்றும் ஒருவரை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் ஒளிப்படங்கள், தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இணைய சமூக ஊடகங்களை பொறுப்புணர்ச்சியுடன் பயன்படுத்த வேண்டியது அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

காணி விற்பனைக்கு உண்டு

பெரியவிளான் ¼ km அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின் றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ்
கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

கிழமைநாள் பிரிவுகள்: 10.06.2016 (வெள்ளி)
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 11.06.2016 (சனி)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
ஏலவிற்பனை**

யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் விவசாயப்பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 15.06.2016 புதன்கிழமையன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆடுகள்:-

இல	இனம்	பால்	வயது
01	ஜமுனாபாரி கலப்பு	ஆண்	04 – 05 வருடங்கள்
02	ஜமுனாபாரி கலப்பு	ஆண்	02 – 03 வருடங்கள்
03	ஜமுனாபாரி கலப்பு	ஆண்	18 – 24 மாதங்கள்
04	உள்ளூர்	ஆண்	12 – 18 மாதங்கள்
05	ஜமுனாபாரி கலப்பு	பெண்	03 – 04 வருடங்கள்
06	ஜமுனாபாரி கலப்பு	பெண்	04 – 05 வருடங்கள்
07	உள்ளூர்	பெண்	18 – 24 மாதங்கள்

மாடுகள்:-

இல	இனம்	பால்	வயது
01	ஜெர்சி கலப்பு	பெண்	05 வருடங்கள்
02	ஜெர்சி கலப்பு	ஆண்	05 வருடங்கள்
03	ஜெர்சி கலப்பு	ஆண்	05 வருடங்கள்
04	ஜெர்சி கலப்பு	ஆண்	05 வருடங்கள்

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 13.06.2016 திங்கட் கிழமையன்று காலை 10.00 தொடக்கம் 11.00 வரை ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம்.

ஏலவிற்பனையானது 15.06.2016 புதன்கிழமை காலை 10.00 ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றி பெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

**பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
(ஏ.ஜ.ஜ)
(17,17)

தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறி
மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள்
விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சிநெறி

தேசிய தொழில் தகைமை மட்டம் 4

ஒரு வருட கால பயிற்சி நெறி. இதில் 6மாதகாலம் தொழிலுடனான பயிற்சி (On - the -job training) வழங்கப்படும். இப்பயிற்சி நெறியின் பின்னர் பல்கலைக்கல்லூரி, விவசாயக்கல்லூரி மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றில் NVQ மட்டம் 5 - 6 ஐ தொடரமுடியும்.

NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாயபாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். 16 - 26 வயதுக்குட்பட்டவராக இருத்தல்.

பயிற்சிக்கட்டணம் இலவசம்.

பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 15.06.2016 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்புஅத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு: அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்.
மருதனார்மடம், சுன்னாகம்.
021 224 1420
(J/1956),
(14,17)

HOTEL MANAGEMENT
Study in Bulgaria (Europe)
Schengen Visa (Valid For 25Countries)

- G.C.E O/L (ஆங்கில பாடசித்தி அவசியம்)
- முற்கொடுப்பனவுகள் எதுவுமில்லை.
- இலகு Visa நடைமுறைகள்.
- குறைந்த பாடநெறிக்கட்டணம்.
- குறைந்த வாழ்க்கைச் செலவுக் கட்டணம்.
- கற்கை நெறிக்காலத்தில் பகுதிநேர வேலைவாய்ப்பின் மூலம் இலங்கை ரூபா 150,000 - 200,000 வரை வருமானம் பெறுவதற்கான வாய்ப்பு.
- பாடநெறியை பூர்த்தி செய்தவர்கள் ஐரோப்பிய நாடுகளில் Hotel Management துறையில் ஆகக்குறைந்த (ஆரம்ப) சம்பளமாக இலங்கை ரூபாயில் 8இலட்சம் (800,000/=) வருமானத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு.

விண்ணப்ப முடிவுதிகதி 2016 யூன் 15

Vinglinkz Global Service

Admission Help Line
077 340 0669, 076 726 6899
இல.66, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில் 20 சதவீதமான பகுதிகளில் நிலச்சரிவு அபாயம்

இடர் முகாமைத்துவ அமைச்சு தகவல்

கொழும்பு, ஜூன் 7

இலங்கையில் மலையகத்தில் 20 சதவீதமான பகுதிகளில் நிலச் சரிவு அச்சுறுத்தல் உள்ளது என்று இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய கட்ட ஆய்வு மையத்தால் இந்த இடங்கள் அடையாளம் காணப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத் திட்டமொன்று பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன என்று இடர் முகாமைத்துவ அமைச்சரான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அடையாளம் காணப்பட்டுள்ள இடங்கள் அனைத்திலும் நிலச்சரிவு ஏற்படும் என்று அர்த்தம் அல்ல. மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. ஓர் அனுமானத்தின் அடிப்படையில்தான் நிலச்சரிவுக்கு வாய்ப்பு இருக்கின்றது என்று கருத வேண்டியுள்ளது.

> அடையாளம் காணப்பட்டுள்ள இடங்கள் அனைத்திலும் நிலச் சரிவு ஏற்படும் என்று அர்த்தம் அல்ல. மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை

நிலச்சரிவு ஆபத்து கூடியது, குறைந்தது, சாதாரண ஆபத்து என்று மூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ள அந்தப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளும் உள்ளன. மக்கள் குடியிருப்புகள் இல்லாத பகுதிகளும் அடங்குகின்றன.

கூடுதலான நிலச்சரிவுகளுக்கு மனித செயற்பாடுகளே காரணமாக அமைகின்றது. அதாவது மலைகளின்மேல்பகுதியில்பயிர்ச் செய்கை, நீரோடும் பாதைகளை தடுத்தல், மண் அகழ்வு மற்றும் வீடு கட்டுதல் போன்றவை. இந்த விடயங் களில் உரிய முறைகள் பின்பற்றப்படாததே இதற்குக் காரணமாக அமைகின்றது.

நிலப் பகுதியின் முகாமைத்துவம், மண் பாதுகாப்பு, மலைகளிலிருந்து நீரோடும் பாதைகளைச் சீராக்கல் போன்ற விடயங்களில் மக்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இது தொடர்பாக தற்போது மக்கள் மத்தியில் அறிவுறுத்தும் வகையிலான சிறப்பு வேலைத் திட்டமொன்று பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மலைகளிலிருந்து நீரோடும் பாதைகளைத் தடுக்கக் கூடாது. மக்கள் சுற்றாடல் பற்றி நன்கு தெரிந்திருத்தல், மழை காலங்களில் அவதானமாக இருத்தல், வீடுகள், கட்டடங்கள் கட்டும் போது தேசிய கட்டட ஆய்வு மையத்தின் ஆலோசனைகளை பெறுதல் போன்றவற்றை மையப்படுத்தியதாக இடர் முகாமைத்துவ அமைச்சால் இந்த வேலைத் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது – என்றார்.

(ற-ஜ-5)

பொது இடத்தில் புகை பிடித்த வர்த்தகருக்கு எதிராக வழக்கு

சாவகச்சேரி, ஜூன் 7

ஆலயத் திருவிழாவின்போது சனக்கூட்டம் நிறைந்த கடைக்குள் பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் புகை பிடித்த வர்த்தகரொவருக்கு எதிராகக் கொடிகாமம் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை இடம் பெற்றபோது, அங்குள்ள வர்த்தக நிலையமொன்றில் இருந்தவாறு புகைபிடித்த வர்த்தகருக்கு எதிராக கடமையிலிருந்த பொது சுகாதாரப் பரிசோதகர் நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளார். அவ்வேளையில் வர்த்தகர் அவருடன் முரண்படவே அங்கு கடமையிலிருந்த கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் வரவழைக்கப்பட்டு, குறித்த வர்த்தகருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது. பின்னர் அவருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஆலயச் சுற்றாடலில் விற்பனை செய்யப்பட்ட ஐஸ்கிறீம் மற்றும் கோண் ஆகியவை சுகாதாரப் பரிசோதகரால் சுகாதாரத்துக்கு ஏற்றதா என்பதைப் பரிசோதிப்பதற்காகக் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை சுகாதாரத்துக்கு ஏற்றவையல்ல என அறிக்கை கிடைக்கும் பட்சத்தில் நடமாடும் வாகன வியாபாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

ஆலயத் திருவிழாக்களில் விற்பனைக்கு கொண்டு வரப்படும் ஐஸ்கிறீம் மற்றும் அவற்றுக்குப் பயன்படுத்தும் கோண் மற்றும் உணவுப் பொருள்கள் போன்றவை அந்தந்தப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டு சான்றுக் கடிதம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், அவ்வாறான சான்றுக் கடிதம் கொண்டு வராதபட்சத்தில் திருவிழாக்களில் நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்வது தடை செய்யப்படும் என்றும், அதில் கடமை புரிவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆலயத் திருவிழாக்களின் போது தண்ணீர்ப்பந்தல் நடத்துவோர் பயன்படுத்தும் தண்ணீர், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதற்கான சான்றிதழ் வைத்திருக்க வேண்டும் என்றும் தண்ணீர்ப்பந் தலுக்கான நீர் பெறும் கிணறு பொது சுகாதாரப் பரிசோதகரால் பரிசோதனை செய்யப்பட்டு பரிந்துரைக் கடிதம் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், தவறின் தண் ணீர்ப் பந்தல் நடத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-9)

பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு கவனவீர்ப்புப் போராட்டம்

கண்டியில் சிங்கலே அமைப்பு நடத்தியது

கொழும்பு, ஜூன் 7

கண்டி நகர மத்தியில் அமைந்துள்ள ஜும்ஆப் பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு கோரி, பள்ளிவாசல் முன்பாக நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பௌத்த கடும்போக்கு அமைப்பான சிங்கலே அமைப்பாலேயே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பள்ளிவாசலின் புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் பள்ளிவாசலின் 'மினரா' கட்டுமானப் பணிகள் நடைபெற்றால், கண்டி நகரில் அமைந்துள்ள பௌத்தர்களின் புனித தலமான தலதா மாளிகையை விட அது உயரமானதாக அமையும் எனத் தெரிவித்து கடும்போக்கு பௌத்த அமைப்புக்கள் பள்ளிவாசல் முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தலதா மாளிகையின் கௌரவத்தைக் கருத்தில் கொண்டு கண்டி புனித பூமி வளாகத்தில் அமைக்கப்படும் கட்டடங்கள் அனைத்தும் தலதா மாளிகையை விட உயரம் குறைவாகவே நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற பாரம்பரிய சட்டம் வழக்கில் உள்ள நிலையில் கடும் போக்கு முஸ்லிம்கள் சிலர் அதற்கு எதிராக இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுகின்றனர் என்று கவனவீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பள்ளிவாசலின் 'மினரா' கட்டப்பட்டாலும் அது தலதா மாளிகையை விட உயரமாக அமையாது என்று பள்ளிவாசல் நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கண்டி மாநகர சபையின் ஆணையாளரால், இந்தக் கட்டுமானப் பணிக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பிலான கடிதம் கிடைக்கப் பெற்ற பின்னரே, பள்ளிவாசல் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-ஜ-5)

தேயிலைக் கழிவுகளுடன் இரசாயனங்கள்

தேயிலைக் கழிவுகளுடன் பொட்டாசியம் பரமங்கனைட், கொண்டிஸ் மற்றும் கொப்பசல்பெட் என்பவற்றைக் கலந்து மோசடி வியாபாரிகள் விற்பனை செய்வது புதிய பரிசோதனைகளின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பு நகரின் சுவை ஆய்வாளர் ஆர்.எம். ஜி.பீ. ராஜநாயக்க தெரிவித்துள்ளதாவது– குறித்த தேயிலைக் கழிவுக் கடத்தல்களானது வியாபார நிலையங்களில் தேநீர் தயாரிப்போர் மற்றும் தேயிலையை எடை போடுவோர் என்பவர்களின் மூலமே அதிகமாக இடம் பெறுகின்றன– என்றார்.

(ற-ஜ-5)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி ஸ்ரீ ரஞ்ஜினி செல்வராஜா
(மல்லாகம்)
(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)
திதி: 07.06.2016

அம்மா எங்கள் உயிர் அம்மா
ஒருமுறை அழைத்தாலும் ஓடோடி வருவீர்கள் வேலையில் இருந்து
எத்தனை முறை அழைத்தும் ஏன் வரவில்லை இன்னும்
நிரந்தரமற்ற மனித வாழ்க்கையில் எது வேண்டுமானாலும்
நிகழலாம் என்பதை புரிந்து கொண்டோம் நாம் அன்று
ஆனால் நம் மேல் நீங்கள் கொண்ட அளவு கடந்த பாசத்தை
அளவிடவில்லை ஓர் அளவுகோல்
எங்களில் ஒருவராய் எப்போதும் எங்களுடனேயே
வாழ்ந்திருப்பாய் எங்கள் அன்புத் தாயே.....

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள்.

(ஊ.1744) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு விழா மலர் விவரங்கள் சேகரிப்பு

ஊர்காவற்றுறை நாரந்தனை கணேச வித்தியாசாலையின் நூற்றாண்டு விழா இந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் கொண்டாடப் படவுள்ளது. இதற்கு முன்னோடியாக நூற்றாண்டு விழா மலர் வெளிடப்படவுள்ளது. இந்த நூற்றாண்டு விழா மலரில் பாடசாலையின் வரலாறு மற்றும் பழைய மாணவர்கள் விவரங்களும் உள்ளடக்கப்படவுள்ளன. அதற்காகப் பழைய மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பாடசாலையில் கல்வி கற்றவர்கள் தமது விவரங்களை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அதிபர், நாரந்தனை கணேசா வித்தியாசாலை, ஊர்காவற்றுறை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ற-ஜ)

தேசிய

தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவின் நலம் விசாரிக்க வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மகிந்த ராஜபக்ச சென்றிருந்தார். இதன் போது ஊடகவியலாளர்கள், ஆயுதக் கிடங்கு தீ விபத்துச் சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்பினர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எனது ஆட்சிக் காலத்தில், கொஸ்கம சலாவ இராணுவ முகாமை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருந்தன.

அத்துடன் இது தேசிய பாதுகாப்புத் தொடர்பான அச்சுறுத்தல். ஆகவே உடனடியாக என்னால் கருத்துக் கூற முடியாது. சம்பவம் தொடர்பில் அரசு வெளிப்படையாக நடந்து கொள்ளவேண்டும். என்ன நடந்தது என்பது குறித்துப் பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-வ-5)

நெடுந்தீவில்

கடற்கரையில் நேற்று இனம்காண முடியாத வகையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதை மீனவர்கள் சிலர் கண்டுள்ளனர்.

இவ்வாறு கரை ஒதுங்கிய சடலம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக் கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் குறித்த சடலம் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் கூறினர். சடலம் நீண்ட நாள்களாகக் கடலில் இருந்து அழுகிய நிலையில் அதுகரையொதுங்கியுள்ளது. குறித்த சடலம் இந்திய மீனவர்களுடையதாகவோ, அல்லது இலங்கை மீனவர்களுடையதாகவோ இருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(த-வ-101-106)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

இராயப்பு பாவிலுப்பிள்ளை

பிறப்பு 24.08.1962

இறப்பு 08.05.2016

பண்பான கணவராக, பாசமிகு அப்பாவே! அன்போடு எமை வளர்த்து ஆளாக்கிய அப்பாவே!
அவனியில் நாம் உயர நீங்கள் கூறிய அறிவுரைகள் நித்தமும் எம் காதில் ஒலிக்கிறது அப்பாவே!
அன்பாய் வாழ்ந்த காலங்களை நீடிக்கவிடாமல் காலன் உங்களை அழைத்தானோ அப்பா
அன்புமுகம் மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவுகள் அப்பா!

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக புலோப்பளை புனித இராயப்பர் ஆலயத்தில் இன்று (07.06.2016) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளவும்.

புலோப்பளை கிழக்கு, பளை.

(J1903) (14,16)

மனைவி, பிள்ளைகள்.

30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 02 . 1925

உதிர்வு 10 . 06 . 1986

அமரர் தம்பு கதிரவேலு

(இளைப்பாறிய அதிபர் - யா/ கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

திதி: திருதியை (07.06.2016)

முப்பது ஆண்டுகள் கடந்தாலும் முடியவில்லை உங்கள் நினைவுகள்
எம்மனதில் என்றென்றும் நித்தியமாய் நிறைந்துள்ளது ஐயா!
உங்களது ஆத்மாவின் சாந்திக்காய்
எம் அன்புக் காணிக்கையை சமர்ப்பிக்கின்றோம்....

நிருவத்தம்பை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

(J/1920) (31,37)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நீங்கா நினைவுகளுடன்

முதலாம் ஆண்டு

யேமிஸ் பிரான்சிஸ் சேவியர்
(துரைசிங்கம்)

7 ஆம் ஆண்டு

திருமதி **ஞானர்த்தம்மா** (தங்கமணி)
பிரான்சிஸ் சேவியர்

1933.04.27 பிறப்பு 1942.03.27
2015.06.07 இறப்பு 2009.03.27

குடும்பத்தின் ஒளிச்சுடர்களே அன்பின் பிறப்பிடங்களே
இறந்தும் இறவாமல் எம் இதயங்களில் தெய்வச்சுடராய் வீற்றிருக்கும் எம் ஐயா, அம்மாவே !
ஆண்டுகள் ஆன போதும் ஆறவில்லை எம் துயரம்
இன்புற்றே இவ்வுலகில் இணையில்லா வாழ்வு வாழ்ந்து உயிருக்கு உயிராய் இருந்து எம்மைக் காத்து
நாம் உம்மை மறவாது இருக்க உம் நினைவுகளை எம்மிடம் விட்டுச் சென்ற எம் பெற்றோரே
காலங்கள் பல சென்றாலும் உம் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்

5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(J 1840) (14,17,18)

என்றும் உம் நினைவுடன் வாழும்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில் காணிகள் இல்லாது 14,000 குடும்பங்கள்

> யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவு மக்களுக்கும் காணி வழங்கும் அளவுக்கு, மக்கள் குடியிருக்கக் கூடிய அரச காணிகள் எதுவும் யாழ்.மாவட்டத்தில் இல்லை என்றும் அரச அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 ஆயிரம் குடும்பங்கள் காணி இல்லாது உள்ளன என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கான யோசனை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனினும் அது தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களால் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

யாழ். மாவட்டச் செயலகத்தால் மாவட்டத்தில் காணி அற்று இருப்போர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டன. அதனடிப்படையில் 14 ஆயிரம் குடும்பங்கள் வரையில் காணி அற்றவர்களாகப் பதிந்துள்ளனர்.

நெடுந்தீவில் 73 குடும்பங்களும், வேலணையில் 718 குடும்பங்களும், ஊர்காவற்றுறையில் 323 குடும்பங்களும், காரைநகரில் 349 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தில் 323 குடும்பங்களும், நல்லூரில் ஆயிரத்து 774 குடும்பங்களும், உடுவிலில் ஆயிரத்து 483 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் 763 குடும்பங்களும், சங்கானையில் 927 குடும்பங்களும், தெல்லிப்பழையில் 997 குடும்பங்களும், கோப்பாயில் 2 ஆயிரத்து 682 குடும்பங்களும், சாவகச்சேரியில் ஆயிரத்து 112 குடும்பங்களும், கரவெட்டியில் 917 குடும்பங்களும், பருதித்துறையில் 920 குடும்பங்களும், மருதங்கேணியில் 640 குடும்பங்களுடன் மொத்தமாக 14 ஆயிரத்து ஒரு குடும்பங்களுக்கு காணிகள் சொந்தமாக இல்லை என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவு மக்களுக்கும் காணி வழங்கும் அளவுக்கு, மக்கள் குடியிருக்கக் கூடிய அரச காணிகள் எதுவும் யாழ்.மாவட்டத்தில் இல்லை என்றும் அரச அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்த மக்களைக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே குடியமர்த்த முடியும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்கள் கொள்கை ரீதியான முடிவு எடுப்பதன் மூலமே இதனை நடைமுறைப்படுத்தலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்துக்கள் அரச அதிகரிகளினால் முன்வைக்கப்பட்ட போதும், ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்கள் இது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கவில்லை. (ஐ-5)

சட்ட விரோத மணல் ஏற்றிய சாரதி பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 7
சட்ட விரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் உழவு இயந்திரச் சாரதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

வரணியில் உள்ள காணி ஒன்றினுள் சட்டவிரோதமான முறையில் மண் அகழப்படுவதாகக் கிடைக்கபெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், அங்கு சென்ற பொலிஸார், உழவு இயந்திரச் சாரதியைக் கைது செய்துள்ளனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் அவர் அனுமதிப் பத்திரம் இன்றி மண் அகழ்ந்தமை தெரியவந்தது.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சாரதிக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை சட்ட விரோதமாக வயல் மண் அகழ்ந்த உழவு இயந்திரச் சாரதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை, கம்பர்மலைப்பகுதியில் வயல் வெளியில் மணல் அகழ்ந்தபோதே அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. கைதானவர் அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என பொறுப்பதிகாரி மேலும் கூறினர்.

பொலிஸாருக்குக் கிடைக்கபெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கம்பர்மலை பகுதிக்குச் சென்ற பொலிஸ்குழு, வயல்வெளியில் மண் அகழ்ந்த நபரிடம் மேற்கொண்ட விசாரணையில் அனுமதிப் பத்திரம் இன்றி அவர் இந்தச் சட்டவிரோத செயலில் ஈடுபட்டமை தெரிய வந்தது.

உழவு இயந்திரத்தைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற பொலிஸார், சந்தேக நபரான சாரதிக்கு எதிராகப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவித்தனர். (ற-ஐ-4,107)

டெங்குதொற்றுக்குள்ளாவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, ஜூன் 7
தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் பெய்த பெருமழையையடுத்து அங்கு டெங்குத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த 15 தினங்களில் 19 பேர் டெங்காலும், 3 பேர் உண்ணிக் காய்ச்சலாலும் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால், பிரதேசத்தின் பல இடங்களில் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும், டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி இருவர் டெங்குத்தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சல் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில், தீவிர சிகிச்சையளிக்கப்பட்டதுடன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அலுவலர்களால் டெங்குக் கட்டுப்பாட்டு புகையூட்டல் உட்பட பல்வேறு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் கடந்த நான்கு மாதங்களாக டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்த நிலையில் அண்மையில் பிரதேசத்தின் பல இடங்களில் பெய்த பெரு மழையால், ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நுளம்புகளின் அதிகரிப்புக் காரணமாக டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சல் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

கடந்த மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான இரு வாரங்களில் 17 பேர் டெங்குத் தொற்றாலும், 3 பேர் உண்ணிக் காய்ச்சலினாலும் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தியசாலை அறிக்கைப் பிரகாரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், நோயாளியின் இருப்பிடத்துக்குச் சென்று கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-9)

விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 7
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் தொடர்பாடலுக்கான பேச்சு ஆங்கிலக் குறுகிய கால கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மூன்று மாதங்களைக் கொண்டுள்ள இந்தக் கற்கை, நெறியானது பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல் கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும், ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும், மன்னார் கற்கை நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

இந்தக் கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் மேற்கூறிய கற்கை நிலையங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை முதல் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-11)

புகைத்தலுக்கு எதிராக யாழ். நகரில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7
சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் யாழ் மாநகர சுகாதாரப் பகுதியினரின் விழிப்புணர்வு நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றன.

குருநகர் கலாசார மண்டபத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கே. ராஜா தலைமையிலும் மற்றும் நகரின் ரிம்மர் மண்டபத்தில் பொதுச்சுகாதாரப்பரிசோதகர் ஆறுமுகதாசன் தலைமையிலும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம் பெற்றன.

பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் மற்றும் சமூக நிறுவனப் பிரதிநிதிகள் போன்றோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

புகைப்பதால் ஏற்படும் தீமைகள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் என்பவை குறித்தும் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் எடுத்துக் கூறப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் சுகாதார வைத்திய அதிகாரிகளான மருத்துவர் உமாசுதன், மருத்துவர் யசிதரன் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஐ-17)

மோதல் சம்பவத்தில் காயமடைந்த ஐவருக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 7
சிறுப்பிட்டியில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 5 பேரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி இரவு 7 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது. காயமடைந்த நபர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால், அந்த 5 பேருக்கும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை வழங்குமாறும், சிகிச்சை முடிவடைந்த பின்னர் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

தனிப்பட்ட பிரச்சினை வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்து கைகலப்பாக மாறியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கத்தியாலும், பொல்லாலும் அடித்துக் கொண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் எதிர்தரப்பில் ஒருவருமாக ஐவர் பெரும்காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அச்சுவேலிப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தனர். வழக்கின் தன்மையைக் கவனத்திற்கொண்ட நீதிவான் குறித்த நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ற-ஐ-4,107)

பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 7
ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீ இராஜமகாமாரி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன. (ற-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூ.3 லட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகள் சிக்கின

கிளிநொச்சி, ஜூன் 7

அனுமதிப்பத்திரங்கள் இன்றிச் சட்ட விரோதமான முறையில் யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்படவிருந்த சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. எந்தவிதமான அனுமதிப் பத்திரங்களும் இன்றி பாரவூர்தி ஒன்றின் மூலம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்படவிருந்த 10 முதிரை குற்றிகளே கைப்பற்றப் பட்டுள்ளன என்றும் அவற்றின் பெறுமதி சுமார் 3 லட்சம் எனவும் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. ராஜபக்ஸவின் தலமையின் கீழ் போக்குவரத்துப் பொலிஸார் இயக்கச்சியில் வைத்து வாகனத்திலிருந்த 10 முதிரைக் குற்றிகளைக் கைப்பற்றியதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் பளைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஐ-21,ரி3)

பொன்னாலை மேற்கு கிராமத்துக்கு விரைவில் குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வேள்ட்விசன் நிறுவன நிதிப் பங்களிப்பில் விரைவில் பொன்னாலை மேற்கு மீள்குடியமர்வுக் கிராமத்துக்கு நெல்லியான் கிணற்றில் இருந்து குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

வேள்ட்விசன் நிறுவனம் இந்தத் திட்டத்தை உடன் முன்னெடுப்பதற்காக 8.9 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கான பங்காளிநிறுவனங்களான வலி.மேற்குப் பிரதேச செயலகம், வலி.மேற்கு பிரதேச சபை, வேள்ட்விசன் ரிவோஸ் 111 நிறுவனம் ஆகியவை ஒருங்கிணைந்த அடிப்படையில் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றன.

வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி குணவதி சண்முகலிங்கம் இந்தத் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கானகேள்வி அறிவித்தலை அடுத்த வாரம் கோரவுள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் வலி.மேற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலி.மேற்குப்பிரதேசசெயலாளர் அ.சோதிநாதன் முன்வைத்த முன்மொழிவை, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுதலைவர் நடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மக்கள் முன்னிலையில் சமர்ப்பித்து ஏகமனதாக ஒப்புதலைப் பெற்றிருந்தார். (ற-ஐ-50)

சூழல் மாசடைந்த பிரதேசமாக மாறி வருகின்றது யாழ்ப்பாணம்

யாழ். அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாண மாவட்டம் இன்று நிலத்தாலும், நீராலும், வளியாலும் முற்றாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாக மாறி வருகின்றது.

எங்கு பார்த்தாலும், பொலித்தீன் யுகமாக உள்ளது. ஒவ்வொரு மனிதனும் இந்தப் பொலித்தீன் பாவனையில் இருந்து விடுபட வேண்டும்.

இங்கு முதற்கட்டமாக அனைத்து மக்களும் ஒருங்கிணைந்த வகையில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் மனித சமூகம் வாழ்வதற்கு ஏற்ற சூழல் தென்படும் - இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, பிரதேச செயலகங்களின் அனுசரணையுடன் வேள்ட்விசன் நிறுவனத்தின் வீதி நாடகம் மற்றும் வீதி வழியான நடைபவனி என்பவை மூலம் சுற்றாடல் தின விழிப்புணர்வு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அங்கு கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

யாழ்ப்பாண மாவட்டம் இன்று நிலத்தாலும், நீராலும், வளியாலும் முற்றாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாக மாறி வருகின்றது.

எங்கு பார்த்தாலும், பொலித்தீன் யுகமாக உள்ளது. ஒவ்வொரு மனிதனும் இந்தப் பொலித்தீன் பாவனையில் இருந்து விடுபட வேண்டும்.

இங்கு முதற்கட்டமாக அனைத்து மக்களும் ஒருங்கிணைந்த வகையில் பொலித்தீன் பாவனையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் மனித சமூகம் வாழ்வதற்கு ஏற்ற சூழல் தென்படும்.

இல்லாவிடில் சூழல் மாசுபாட்டுக்குள் மனித சமூகம் சென்று அழிவு நிச்சயம் ஏற்படும். எனவே பொலித்தீன் பாவனைக்கு முடிவு கட்டுவதற்கு ஒன்று திரள வேண்டும். அதனைவிட மேலானதாக ஒவ்வொரு நிறுவனமும், ஒவ்வொரு மனிதனும், தினமும் ஒரு மரத்தை நட்டு அபாயகரமான சூழலில் இருந்து தப்பிக்க முயல வேண்டும்.

வேள்ட்விசன் நிறுவனம் இந்த மாவட்டத்துக்கு பல்வேறுபட்ட உதவிகளை, நிதிப் பங்களிப்புக்களை, சூழல் சம்பந்தமான அக்கறைகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறாக ஒவ்வொரு சமூகமும், மனிதசமூகங்களும்ஒன்றிணைந்து மன ஒத்திசைவோடு காரியங்களை நிறைவேற்றினால் சூழல் தாக்கத்தில் இருந்து சமூகங்கள் காப்பாற்றப்படுவதோடு மக்களும் நிம்மதியுடன் வாழும் சூழல் ஏற்படும்.

மனிதனால் இன்று சூழல் மாசுபடுத்தப்படுவதாலேயே இயற்கை அழிவுகள், இடர்கள் ஏற்படுகின்றன. அதன் விளைவாக என்றுமில்லாத மண்சரிவு அபாயங்கள், அதிக மழை அதிக வெப்பம் கொண்ட பிரதேசமாகவும் இலங்கை மாறி வருகின்றது-என்றார்.

இந்த நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பிராந்திய முகாமையாளர் எந்திரி ஈ.ஜெகதீசன், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலர்களான ஏ.சோதிநாதன், திருமதி ஏ.சாந்தசீலன், சாவகச்சேரி முகாமையாளர் (வேள்ட்விசன்) ஜி.ரோசாரியோ ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஐ-50)

அத்துமீறி வீட்டுக்குள் புகுந்து குடும்பத்தினர் மீது தாக்குதல்

சாவகச்சேரி, ஜூன் 7

நள்ளிரவு வேளையில் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் ஒன்று அங்கிருந்த கணவன், மனைவி, ஒன்றரை வயதுக் குழந்தை ஆகியோர் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடி யுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு தனங்களப்பில் இடம்பெற்றது.

காயமடைந்த 28 வயதுக் கணவனும், 25 வயது மனைவியும், ஒன்றரை வயதுப் பெண் குழந்தையும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாவற்குளியில் உள்ளகடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்த 28 வயதுப்பெண் கத்திவெட்டுக்கு இலக்காகிக் கையில்காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவமும் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸார் குறித்த இரு சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-9)

பஸ்கள் மீது கல் வீசித் தாக்குதல்

சாவகச்சேரி, ஜூன் 7

தனியார் பஸ்கள் மற்றும் இ.போ.ச.பஸ்கள் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கல்வீச்சு இடம்பெற்றுள்ளது. 3 இ.போ.ச பஸ்களும், ஒரு தனியார் பஸ்ஸும் கல்வீச்சுக்கு இலக்காகிச் சேதமடைந்துள்ளன எனப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவற்குழி, சங்கத்தானை, மிருசுவில், மட்டுவில் ஆகிய இடங்களில் சென்ற பயணிகள் வாகனங்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் இ.போ.ச. சாரதிகளுக்கும், தனியார் வாகனச் சாரதிகளுக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோதல்களையடுத்து, பயணிகள் வாகனங்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல்கள் இரவு வேளைகளில் இடம்பெற்று வருகின்றன என்றும் தெய்வாதீனமாகப் பயணிகளுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

இலங்கையை கட்டி எழுப்பும் திட்டத்தில் குடாநாட்டிலும் 6 மாதிரிக் கிராமங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தால் அழகிய இலங்கையைக் கட்டி எழுப்பும் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 மாதிரிக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று மாவட்ட சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அழகிய இலங்கையை உருவாக்கும் திட்டம் ஒன்றைச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் மாவட்ட ரீதியாக மாதிரிக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

> “அழகிய இலங்கையை உருவாக்குவதற்கான செயற்றிட்டம் சம்பந்தமான கலந்துரையாடல்கள் ஏற்கனவே கொழும்பு, கேகாலை போன்ற பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.”

அந்த வகையில் யாழ். மாவட்டத்திலும் 6 சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு, அந்தச் சங்கங்களை உள்ளடக்கிய கிராமப்பகுதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அபிவிருத்திப் பணிகளுக்கான முழுமையான உதவிகளைச் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி வி.ஏ.கிரிவெற் தேனியா மேற்கொள்ளவுள்ளார்.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் காரை மத்தி ஜே.191 கிராம சேவகர் பிரிவும், வலி.மேற்கில் ஜே.163 அராலி கிழக்கு, தெல்லிப்பழையில் ஜே.226 வசந்தபுரம், தென்மராட்சியில் ஜே.320 இராமாவில், வடமராட்சி தெற்கு, மேற்கில் ஜே.380 அல்வாய் கிழக்கும், வலி.தெற்கில் ஜே.191 இணுவில் போன்ற கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கிய மாதிரிக் கிராமங்கள் இவற்றின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும்.

அழகிய இலங்கையை உருவாக்குவதற்கான செயற்றிட்டம் சம்பந்தமான கலந்துரையாடல்கள் ஏற்கனவே கொழும்பு, கேகாலை போன்ற பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

அடுத்ததாக யாழ்ப்பாணத்திலும் இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி கிரிவெற் தேனியா கலந்து கொள்ளவுள்ளார். - என்றார். (ற-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்காக சரவணபவன் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்கள் பாராட்டுக்குரியவை

மாவை. சேனாதிராசா எம்.பி. புகழாரம்

> வெளிநாடுகளில் தமிழர்களுடைய கல்வி குறையவில்லை, யாழ்ப்பாணக் கல்வி தான் குறைந்துள்ளது. என்றுமில்லாதவாறு தமிழ்ச்சமூகம் கல்வியில் வளர்ந்துள்ளது. ஆனால் எங்களுடைய பிரதேசத்தில் அது இல்லை.

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழ் அரசுகட்சியின்வரலாற்றிலே எமது இனத்தின், எதிர்கால சந்ததியினரின் கல்விக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்கள் பாராட்டுக்குரியவை – இவ்வாறு தமிழ் அரசு கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனா திராசா தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை தமிழ் அரசுக் கட்சிக் கிளையின் ஓர் ஆண்டு பூர்த்தி நிகழ்வும், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் அரசுக்கட்சியின் வரலாற்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், இந்த மாணவர்களை வரவேற்று வாழ்த்திப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்புகின்ற ஒரு தொண்டைச் செய்திருக்கின்றார். நான் அறிந்த வரையில் தந்தை செல்வா காலத்தில் வன்னிய சிங்கத்தினுடைய முயற்சியில் மலையகத்தில் முதல் மாணவர்களாகப் பேராசிரியர் சந்திரசேகரம் போன்றவர்கள் இவ்வாறான வாழ்த்துக்களைப் பெற்றுள்ளார்கள். அவர்களைப் படிக்க வைத்த வரலாற்றுச் சான்றுகள் எங்களுடைய கட்சிக்கு உள்ளது.

இந்தப் பணி மிகவும் தேவையான, உயர்ந்த ஒரு பணி. கட்சிக்காக அல்ல, எங்களுடைய இனத்துக்காக, எங்களுடைய எதிர்கால சந்ததியினரது கல்விக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் எடுத்திருக்கும் இந்த முயற்சியை நான் பாராட்டுகின்றேன். அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். – என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது–

கடந்த பல ஆண்டுகளாக இலங்கை அரசியலில் தலைவர்களாக இருந்தவர்கள் பலர் எங்களுடைய வடக்குப் பகுதியிலே உயர்ந்த பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள். தனியே நாங்கள் கல்வியிலே உயர்ந்தவர்கள் மட்டும் அல்ல. தமிழர்களுடைய தேசத்துக்கு அப்பாலும், சிங்கள தேசத்திலும் உயர்ந்த தலைவர்களாக இருந்தவர்கள். இந்த யாழ்ப்பாணக் கல்வித் துறைகளிலே, கல்விப் பீடங்களிலே கல்வி கற்றிருக்கின்றார்கள்.

இப்போது எங்களுடைய குரல் என்ன? எங்களுடைய பல்கலைக் கழகங்களிலே தமிழ் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து விட்டது என்பது தான். உலகத்தோடு ஒட்டிப்பார்க்கின்ற போது, இது மிகவும் வீழ்ச்சி அடைந்த ஒரு நிலை. வெளி நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இந்தியா உட்பட, வர்த்தகத் துறையில் மாத்திரம் 23 பாடங்கள் உள்ளன. எங்களுடைய பல்கலைக்கழகத்திலே இரண்டு துறைகள் மட்டும் தான் உள்ளன. எங்களுடைய கல்வியில் 60, 70 வீதம் நாங்கள் அறிவியல் துறைக்கு, தொழில்நுட்பத் துறைக்கு, வர்த்தகத் துறைக்கு தயார்ப்படுத்த வேண்டும். இது மிக முக்கியமானது.

எங்களுடைய கலைப்பட்டதாரி மாணவர்கள் எதோ அரசியல் நலனுக்காகத் தங்களுடைய கட்சி நலனுக்காகச் சம்பந்தம் இல்லாத துறைகளிலே பணி புரிகின்றனர். இதனால் அவர்கள் வளரப் போவதில்லை. ஒரு நாட்டினுடைய திட்டத்தில் கல்வியில் மாணவர்களை உருவாக்குகின்றபோது, அறிஞர்களை உருவாக்குகின்ற போது, அவர்கள் பல்கலைக்கழகத்துக்குப் பின்னரான சூழலில் அவர்கள் எந்தத் துறையை நோக்கிச் செல்லப் போகின்றார்கள் என்பதில் பல்கலைகழகங்களும், ஆட்சியும் ஒன்று பட்டு செயற்பட வேண்டும்.

கட்சிகளுக்கு அப்பால் இந்தக் கல்வித் துறையிலே நாங்கள் விழிப்புணர்வு அடைய வேண்டும். அப்படி இல்லாது விட்டால்தான் கேரளக் கஞ்சா, போதை, வித்தியாவுக்கு நடந்ததை போன்ற சம்பவங்கள் இடம் பெறும். மாணவர்கள் மத்தியில் இப்பொழுது அப்படிப்பட்ட சம்பவங்கள்தான் நிறைந்து வருகின்றன. அதில் இருந்து நாங்கள் விடுபட வேண்டும் – என்றார்.

நிகழ்வில் விருந்தினராக வருகை தந்த யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா வாழ்த்துச் செய்தி வழங்கும்போது தெரிவித்ததாவது–

வெளிநாடுகளில் தமிழர்களுடைய கல்வி குறையவில்லை. யாழ்ப்பாணக் கல்விதான் குறைந்துள்ளது. என்றுமில்லாதவாறு தமிழ்சமூகம் கல்வியில் வளர்ந்துள்ளது. ஆனால் எங்களுடைய பிரதேசத்தில் அது இல்லை.

அரசியலுக்கும் போகலாம். சன்னியாசியாகவும் போகலாம். விரும்பிய துறைகளுக்குச் செல்லலாம். முதலில் அறிவியல் தேவை. ஆகவே அறிவியலை வளர்த்தால் பின்னர் விரும்பியதைத் தெரிவு செய்யலாம். அரசியலுக்குள் கட்டாயம் போக வேண்டிய அவசியம் இல்லை.

எங்களுடைய பிரதேசங்களில் சிந்தனையாளர்கள்(திங் ராங்) இல்லை. உண்மையில் ஒபாமா அமெரிக்காவை நடத்தவில்லை. ஒபாமாவுக்குப் பின்னால் ஒரு பெரிய திங் ராங் உள்ளது. அதே போல் இந்தியாவிலும் அந்த திங் ராங் உள்ளது. அது மோடி வந்தால் என்ன, சோனியா இருந்தால் என்ன, அந்த திங் ராங் செயற்படும். இங்கு அது இல்லை. அதனாலேயே புலமைக்கும் அரசியலுக்கும் இடையில் இடைவெளிகள் உள்ளன –என்றார். (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச வேலையாலும் தீ பற்றியிருக்கலாம்

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 7

கொஸ்கம, சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடி விபத்துக்கு, நாச வேலை காரணமாக இருக்கக் கூடும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு செய்த பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சலாவ இராணுவ முகாமின் இரண்டு ஆயுதக் கிடங்குகளில் தீ வேகமாகப் பரவியுள்ளது. அதன் அருகே தீயணைப்பு வாகனங்கள் செல்ல முடியாதிருந்ததால், தீ பரவுவதைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருந்தது. எட்டு மணி நேரத்தின் பின்னரே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

நாம் உயிர்களைப் பாதுகாக்கவே முன்னுரிமை கொடுத்தோம். அதற்குப் பின்னரே எப்படி விபத்து ஏற்பட்டது, என்ன நடந்ததுஎன்றுஆராயவுள்ளோம். இந்த வெடிப்புச் சம்பவத்துக்கான காரணம் தொடர்பாக இப்போது எதுவும் கூற முடியாது. ஆனால் இதற்கு நாசவேலை காரணமாக இருந்திருக்கலாம். அதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது.

காரணத்தைக் கண்டறிய விசாரணைகளை ஆரம்பிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளேன்- என்றார். (ற-ஐ-5)

இரு ஆயுதக் கிடங்குகள் முற்றாக எரிந்து நாசம்

கொழும்பு, ஜூன் 7

கொழும்புக்குக் கிழக்காக, 36 கிலோமீற்றர்தொலைவில்உள்ள கொஸ்கம - சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட பெரிய வெடி விபத்தில் இரண்டு ஆயுதக் கிடங்குகள் முற்றாக நாசமாகியுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றைத் தரையிலிருந்து கண் காணிக்க முடியாமையால், வேவு விமானங்கள் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாவது குண்டு வெடிப்புச் சத்தம் கேட்ட தையடுத்து, ஆயுதக் கிடங்கு ஒன்று தீப்பற்றி எரியத் தொடங்கியது. அங்கிருந்த வெடிபொருள்கள் வெடித்துச் சிதறியதால், அருகில் இருந்த மற் றொரு ஆயுதக் கிடங்கிலும் வெடி விபத்து ஏற்பட்டது.

இங்கு கனரக ஆயுதங்களுக்கான வெடிபொருள்களே அதிகளவில் சேமிக்கப்பட்டிருந்ததால், பாதிப்புக்களும் இழப்புக்களும் அதிகமாக ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்திடம் உள்ள மிகப் பெரிய ஆயுதக் கிடங்குகளில், சலாவ முகாம் ஆயுதக் கிடங்கும் ஒன்றாகும்.

இந்த விபத்தை அடுத்து, ஏற்பட்ட தீயை அணைப் பதற்கு, தீயணைப்புப் படையினர் நெருங்க முடியாதிருந்தது. அதனால், தீ தானாகவே அணையும் வரை அவர்கள் காத்திருக்க நேரிட்டது.

இந்த வெடிவிபத்தால் ஏற்பட்ட நிலைமைகளைத் தரையில் இருந்து கண்காணிக்க முடியாதால், விமானப் படையின் ஒரு ஆளில்லா வேவு விமானம் மற்றும் பி-200 பீச் கிராப்ட் கண்காணிப்பு விமானம் ஆகியவை தொடர்ச்சியாகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ற-ஐ-5)

விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜூன் 7

இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ பரவல் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் குறித்துக் கவனம் செலுத்திய ஜனாதிபதி, முப்படையினரையும், ஆயத்த நிலையில் இருக்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நேற்று முன்தினம் இரவே ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ற-ஐ-5)

காரணத்தைக் கண்டறிய கால அவகாசம் தேவை

இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

கொஸ்கம, சலாவ இராணுவ முகாமில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட வெடி விபத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு, கால அவகாசம் தேவைப்படுகின்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற் றுக் கிழமை மாலை 5.47 மணி யளவில் சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தை அடுத்து, ஏற்பட்ட தீ, பலமணி நேரமாகத் தொடர்ந்து எரிந்து கொண் டிருந்தது. சுமார் 8 மணி நேரப் போராட்டத்தின் பின்னரே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. நேற்று அதிகாலையே, மீட்புப் பணிகளுக்கான அணிகள் முகாமை நெருங்கக் கூடியதாக இருந்தது.

இந்த விபத்துக்கான காரணத்தைக் கண்டறியவோ, விபத்தில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடவோ கால அவகாசம் தேவைப்படுகின்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.

வெடிப்புச் சிதறல்கள் விழுந்து கொண்டிருந்ததால் முன்னெச்சரிக்கையாகவே கொழும்பு அவிசாவளை வீதி மூடப்பட்டது என்றும், சுற்றுப் புறங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தீ பரவாமல் கட்டுப்படுத்தவும், பொதுமக்கள் வெளியேற்றப்பட்ட பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இராணுவம், கடற்படை, விமானப்படை, காவல் துறை என்பவை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர குறிப்பிட்டார். (ற-ஐ-5)

படங்கள் : சலவா இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட தீயினால் அங்கிருந்த ஆட்லறி உள்ளிட்ட வெடிபொருள்கள் நாலாபுறமும் வெடித்துச் சிதறின. இவை ஆயுதக் கிடங்கிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் சுற்றளவுப் பிரதேசத்தில் வீழ்ந்து வெடித்தன. அதனால் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்குற்ற விசாரணையை அரசு தாமதப்படுத்தவில்லை

இப்படிச் சொல்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 7

போர்க் குற்ற விசாரணையை அரசு தாமதப்படுத்தவில்லை. உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறைகளில் அரசு இழுத்தடிப்புச் செய்யவில்லை. இவ்வாறு தெரிவிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதன் ஆரம்பக் கட்ட நகர்வுகளில் வெற்றி பெற்றுள்ளோம். எனினும் எந்தத் தீர்வையும் உடனடியாகப் பெற்றுவிட முடியாது.

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நல்லாட்சி அரசு, கடந்த ஒரு வருட காலத்தில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளது. எமக்கு எதிராக விமர்சனங்கள் எழாமல் இல்லை. அதனையும் கவனத்தில் கொண்டே செயற்படுகின்றோம்.

போர்க்குற்ற விசாரணைகளை அரசு தாமதப்படுத்தவில்லை. போர்க்குற்ற விசாரணைகளை அரசு தாமதப்படுத்துவதாகக் கூறுவதையோ அல்லது உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறைகளில் அரசு இழுத்தடிப்புக்களைச் செய்கின்றது என்பதையோ ஏற்றுக்கொள்ள முடியாது. போர் முடிவுக்கு வந்த பின்னரும் முன்னைய அரசு 6 ஆண்டுகள் ஆட்சி செய்தது. தீர்வு தொடர்பில் அப்போது முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளுக்கும் இந்த ஒரு ஆண்டு காலத்தில் நாம் எடுத்த நகர்வுகளுக்கும் வித்தியாசம் உண்டு. நாம் உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறையின் ஆரம்பக்கட்ட நகர்வுகளில் வெற்றி கண்டுள்ளோம். தீர்வு மிக விரைவில் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புதான் ஏமாற்றத்தைக் கொடுக்கின்றது. எந்தத் தீர்வையும் உடனடியாகப் பெற்றுவிட முடியாது. எவ்வாறிருப்பினும், எமது ஆட்சியில் பிரச்சினைகளுக்கான தீர்வு உறுதிப்படுத்தப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு தான் மாறியுள்ளது. ஒரு சிலர் மாறியுள்ளனர் என்பதற்காகப் பொது வான நிலைப்பாடு மாறும் என்று கூற முடியாது. ஆட்சி மாற்றத்தின் போது நாம் முன்வைத்த வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று. எனவே அதிலிருந்து நாம் மாறமாட்டோம். புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையில் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்றால், அவர்கள் சார்பில் உப ஜனாதிபதி ஒருவரை நியமிப்பது என்ற கருத்து உறுதியான ஒன்றாக இருக்க முடியாது. எனினும் இது தொடர்பில் ஆராய முடியும். அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தக் கருத்துக்கள் உள்ளடகப்படுவதனால் இந்த விடயங்கள் தொடர்பில் சிந்திக்கலாம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எனினும் கடந்த காலத்தைப் போன்று எந்தச் சிக்கலும் இருக்காது என்று அரசு நம்புகின்றது - என்றார். (ற-ஐ-5)

அமைச்சர்கள் பிணக்கை தீர்ப்பது குறித்து ஆராய்வு

இன்று விசேட கூட்டம்

கொழும்பு, ஜூன் 7

இராஜாங்க அமைச்சர்களின் விசேட கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது. இராஜாங்க அமைச்சர்களின் விடயங்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கும், இராஜாங்க அமைச்சர்களுக்கும் இடையில்பல்வேறுமுரண்பாடுகள் காணப்படுகின்றன என்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகியிருந்தது.

சில அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுடன் இணைந்து செயற்படுவதில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அதேபோன்று சில இராஜாங்க அமைச்சர்கள் தமது பொறுப்புக்களைச் சரியான முறையில் செயற்படுத்தவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த விடயங்கள் குறித்து கலந்தாலோசிப்பதற்காகவே இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

எவ்வாறாயினும், இந்தக் கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர்களான ருவன் விஜேவர்தன, ஏ.எச்.எம்.பௌசி மற்றும் நிரோன் பெரேரா ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் விடயங்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிக்கையை உடனடியாகத் தருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். (ற-ஐ-5)

சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட தீயினால் அங்கிருந்த ஆட்லறி உள்ளிட்ட வெடிபொருள்கள் நாலாபுறமும் வெடித்துச் சிதறின. இவை ஆயுதக் கிடங்கிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் சுற்றளவுப் பிரதேசத்தில் வீழ்ந்து வெடித்தன. அதனால் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

காத்திருந்து குடல் வற்றிச் சாகும் கொக்கின் நிலைதானா தமிழருக்கு...?

● பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையில், வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறுவதை இலங்கை அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

● வெளிநாட்டு நீதிபதிகளை, விசாரணைப் பொறிமுறையில் அனுமதிக்காவிடினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச செய்தது போன்று, வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை அரசு ஏற்றுக்கொள்ளும்.

● போரின் இறுதிக் கட்டத்தில், நாற்பதாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர் என்று, ஐ.நா.சபை அதிகாரபூர்வமாக, அறிவிக்கவில்லை. கோடன் வைஸ் எழுதிய நூலை மட்டுமே, ஐ.நா. மேற்கோள் காட்டி இருந்தது. தருஷ்மன் அறிக்கையிலும் அதுவே சுட்டிக் காட்டப்பட்டது.

● நாட்டில் நிலையான நல்லிணக்கத்தை அடைவதற்கு, நாங்கள் உறுதி பூண்டுள்ளோம் என்பதைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்த வேண்டிய தேவை எமக்கு உள்ளது.

மேற்சொன்ன கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார், தொழிற்பயிற்சி மற்றும் அபிவிருத்தித் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க.

இவர், மகிந்த ராஜபக்ச அரசில், மனித உரிமைகள் அமைச்சராகப் பணி புரிந்தவர் என்பது, ஆழமாக ஊன்றிக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதனை நோக்கும்போது--

மைத்திரி-ரணில் அரசு, ஐ.நா. சபையின் காத்திரமான செயற்பாடு எதுவும் முகிழ்க்காமல் தடுக்கும் உள்ளார்ந்த உத்தியை, உள்ளாடும் கள்ளாடுமாக ஒன்றிணைந்து செயற்படுத்த முனையுமோ என்ற வினாவும் மேலெழுகிறது!

மறுபுறத்தில்--

பாதிக்கப்பட்ட மக்களது நம்பிக்கையைப் பெறும் விதத்திலான நீதிவிசாரணைப் பொறிமுறையையே இலங்கை (அரசு) செயற்படுத்தும்-- ஏற்படுத்தும்-- என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உறுதி அளித்துள்ள நிலையில்--

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை அரசு உருவாக்கும் என்றும், அனைத்துலக நாடுகள் - உரிய ஒத்துழைப்பை அதற்குத் தவறாது வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருப்பதும், ஆழ்ந்து அகன்று வெளிப்பட்டுள்ளது.

போர்க் குற்றவிசாரணை குறித்துத் தற்போது மக்களின் கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், பொதுமக்களது, குறிப்பாக, பாதிக்கப்பட்ட மக்களது கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உரிய, தேவையான சட்ட வரைவுகள் மூலம் அனைத்துலகப் பொறிமுறையை ஏற்படுத்த வகை செய்யப்படும் என்று விளம்பி உள்ளார்.

தனிமனிதர்கள், சமூகங்கள் மற்றும் தேசத்தவர் மீது இழைக்கப்பட்ட கடந்த காலக் குற்றங்களை ஏற்றுக்கொண்டு,

எதிர்காலத்தில் எந்தக் குழுவோ அன்றிச் சமூகமோ, தவறுகளை மீண்டும் மேற்கொள்ளாத நிலையை ஏற்படுத்தும் பொறிமுறைகளைக் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும்--என்றும் வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

சரி போகட்டும்; வெளிவிவகார அமைச்சர் ஆலாபரணமாகக் கூறும் இவற்றையெல்லாம் செயல்வடிவம் பெறவைக்க எத்தனை காலம் ஆகும்? நீண்ட காலத்துக்கு எதிர்பார்க்க வேண்டியதுதானா...? கடல் வற்றும் வற்றும் என்று காத்திருந்து குடல் வற்றிச் சாகும் கொக்கின் நிலைக்குத்தான் தமிழர் நிலை உந்தித் தள்ளப்படுமோ...?

படலையில் இருந்து சுடலை வரைக்கும் வற் வரியின் ஆதிக்கம்

கே.எஸ்.சிவஞானராஜா

நல்லாட்சி நடைபெறும் ஒரு நாட்டில் ஒளிவு மறைவின்றி, யாவும் வெளிப்படையாக எந்தவித ஊழலுமின்றி, இலஞ்சமுமின்றி, பாரபட்சமுமின்றி நிர்வாகம் சிறப்பாக இயங்குமாயின், மக்களுக்கு வரி ஒரு சுமையாக இருக்கவே முடியாது. அரசியல்வாதிகள் உல்லாசமாய் வாழ்வதற்கு அடித்தள மக்களின் வரிப்பணமா காணிக்கை! இது நியாயம் தானா?

உலக நாடுகளில் எதுவென்றாலும் சரி, வரி அறவீடுகளினாலேயே சரியாக ஓர் இராச்சியத்தை வளர்த்தெடுக்க முடியும் என்பதை எவருமே அறிவர். மக்களைச் சுரண்டுவதுதான் வரி என்று நாம் நினைப்பது ஒரு புறமிருக்க, நீதியானதொரு செயற்றிட்டத்தின் அடிப்படையில், மக்களைப் பாதிக்காத வகையில் வரி அறவிடப்படுமாயின், அது சமதர்ம நல்லாட்சி எனக் கூறப்படும். மக்களிடமிருந்து பெறப்படும் வரிகள் பெரும்பாலும் கல்வி, சுகாதாரம், போக்குவரவு, மருத்துவம், அபிவிருத்தி எனப் பற்பல நோக்கங்களுக்காகப் பாவிக்கப்படுகின்றன. நல்லாட்சி நடைபெறும் ஒரு நாட்டில் ஒளிவுமறைவின்றி, யாவும் வெளிப்படையாக எந்த வித ஊழலுமின்றி, இலஞ்சமுமின்றி, பாரபட்சமுமின்றி நிர்வாகம் சிறப்பாக இயங்குமாயின், மக்களுக்கு வரி ஒரு சுமையாக இருக்கவே முடியாது. அரசியல்வாதிகள் உல்லாசமாய் வாழ்வதற்கு அடித்தள மக்களின் வரிப் பணமா காணிக்கை? இது நியாயம்தானா?

ஏராளமான கறுப்புப் பணம்

எமது நாட்டில் ஏராளமான பணம், கறுப்புப் பணமாக வைக்கப்பட்டிருக்கிறது. இவை உள் நாட்டிலும்–வெளிநாட்டிலும் பதுக்கப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது பெரும்பாலும் உண்மையாகவே இருக்கும். காரணம், பெரும்பாலானோர் பேராசை மிக்கவர்களாகவே காணப்படுகின்றனர். பிரிட்டனில் சகலரதும் வருமானம் வங்கியூடாகப் பரிபாலனம் செய்யப்படுவதால், ஒவ்வொரு பிரசையின் வரவு – செலவுகளையும் வெளிப்படையாக அரசு பதிவு செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கான வரி எவ்வளவென்பதை அறிவுறுத்தும். அவர்கள் மறுவார்த்தையின்றி உரியவாறு கணக்கிலிருந்து கழிக்கச் சம்மதமளிப்பர். இங்கு அவ்வாறில்லை. எவரிடம் எவ்வளவு பணம், தங்கம், சொத்துக்கள் இருக்கிறது என்பது குறித்து சரியான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள இயலாதுள்ளது. சுவிஸ், பனாமா, ஆபிரிக்கா, லண்டன், சீனா ஆகிய நாடுகளில் இலங்கையின் முக்கிய புள்ளிகளால் பணம் பதுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி பகருகின்றன. எமது நாட்டின் தங்கத்தின் இருப்புக்கு இதுவரை விடையில்லை!

பனாமா

பனாமா, சுவிஸ் ஆகிய இரண்டு நாடுகளிலும்தான் உலகத்தின் கோடீஸ்வரர்கள் தத்தம் கறுப்புப் பணத்தை ஊரும் தெரிந்து கொள்ளாதபடி தேக்கி வைத்துள்ளார்கள். இலங்கையரும் தாம் இதில் எவருக்கும் சளைத்தவர்களல்லர் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். 65 இலங்கையர்களின் மிக அதிகமான பணம் பதுக்கப்பட்டிருப்பது ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசின் வரிக்கோப்பாடுகளுக்குள் அகப்படாமல், மொஸாக் பொன்சேகா நிறுவன ஆலோசனைக்கு அமைவாக இடம்பெற்ற இந்த முதலீடுகளை சட்டரீதியாக வெளிக்கொணர ஆவன செய்யப்பட்டுள்ளது.

இதற்குரிய பெறுமதி சேர் வரிகளும், ஏய்ப்பு வரிகளும் அதன் முதலுமாக அறவிடும் பொழுது நல்லதோர் படிப்பினை முன் மாதிரியாக அமையும். இவ்வாறு பெரும் முதலுக்குச் சொந்தக்காரரான முதலைகள் இன்னுமே தமது சொத்து விவரங்களை

வாசகர் திருமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட மறுத்தும், மறைத்தும் இருந்துவரும் நிலையில் சாதாரண, பாமர, நடுத்தர மக்களிடையே வரிகளைச் சுமத்துவது நியாயமுமல்ல, நீதியுமல்ல, தர்மமுமல்ல, தீர்வுமல்ல.

மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் மொசாக் பொன்சேகா சட்டநிறுவனம் இரகசியமாக வைத்திருந்த 1.15 கோடி ஆவணங்களில், 2.15 லட்சம், போலிநிறுவனங்கள் பற்றியவை. இதில் 143 அரசியல் தலைவர்களும் 14,153 பேர் தனிப்பட்டவர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர். இத்தனை பேரும் வரி ஏய்ப்பாளர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்களால் முதலிடப்பட்டுள்ள கறுப்புப் பணம், வெள்ளையாக மாற்றுவதற்கோ, பயங்கரவாதத்துக்கு உபகாரம் செய்வதற்கோ இடமளிக்காத வண்ணம் பேணப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதன் பொருட்டு ஐஸ்லாந்து பிரதமர் பதவி விலகியதாக ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

இரட்டை வரித்தடுப்புச் சலுகையைப் பயன்படுத்தி, ஒரு நாட்டின் வளத்தைத் தளம்பல் நிலையில் வைத்திருப்பது ஏற்புடையதல்ல. நாகரிமுமல்ல.

தாக்கம்

எது எப்படி இருந்தபோதிலும், பெரிதும் பாதிக்கப்படப்போவது சாதாரணமக்களே. சகல பொருள்களும் வரி அதிகரிப்பால் விலை உயர்ந்து விட்டன. ஏப்ரல் மாதம் உலர் உணவுப் பொருள்களுக்காக மட்டும் (13,600/=) பதின்மூவாயிரத்து அறுநூறு ரூபா கடைக்குச் செலுத்திய யான், மேமாதம் அதே பொருள்களை வாங்க அதே கடைக்கு (14,600/=) பதின்னான்காயிரத்து அறுநூறு ரூபாவுக்கு மேலே பணம் செலுத்தி யுள்ளேன். வற்வரி அதிகரிப்பினால் ஒரு சாதாரண குடும்பம் உலர் உணவுகளுக்காக ஆயிரம் ரூபாவை திடீரென அதிகமாகக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஏழைக் குடும்பங்களின் வாழ்வில் எவ்வளவு தூரம் இது பாதிப்பைக் கொண்டு வரும்?

போதிய அளவில் பணம் வேண்டும்

ஒவ்வொரு குடும்பமும் படலை திறக்கும்போதே பணமும் போதிய அளவு கொண்டுபோனால் தான் உயிருடன் இருக்கலாம். பாண் தொடக்கம் இரவு நேரப் பால், பழம் வரை அனைத்துப் பொருள்களும் வரியால் வரித்துப் பின்னப்பட்டுள்ளன. இனி எவ ருமே தப்பிவிட முடியாது. மின்சாரம், பெற்றோல் வாகனங்கள், மருந்துப் பொருள்கள், அழகு சாதனப் பொருள்கள், ஜவுளி வகைகள், பவுண், விவசாயப் பொருள்கள், கிருமிநாசினிகள், பால்மா வகைகள், தானிய வகைகள் என அனைத்துக்குமே வரி அறவிட ஆவன செய்வதைவிட வேறு மார்க்கம் அரசுக்குக் கிடைக்காதென நம்ப முடியும். முக்கியமாக சொகுசான பொருள்கள், தனி யார் வைத்தியசாலைகள், தனியார் பாடசாலைகள், தொலைத் தொடர்புக் கட்டணங்கள், தனியார் வர்த்தக நிலையங்கள் யாவுமே அதிகரிப்பு வரியால் மாட்டிக் கொள்ளும் போது ஏனைய பொருள்களுக்கான வற்வரிகள் தானாகவே பையப் பைய உயர அதிக வாய்ப் புண்டு மிக விரைவில்! சுய முயற்சி உற்பத்தியில் ஊக்குவிக்கப்பட்டாலொழிய இதில் வெல்ல வாய்ப் பில்லையே!!

கடந்த காலம்

திறமையற்ற முகாமைத்துவத்தாலும், ஊழல் மோசடிகளினாலும் சிறிலங்கன் விமான சேவையின் கடன் மட்டும் ரூபா 212 பில்லியன். உள்நாட்டு வெளிநாட்டுக் கடன் மட்டும் 1042.8 பில்லியன். கடனை மீளச்செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டது. 100 பில்லியன் நிதி மட்டுமே. இது மொத்தக் கடன் தொகையின் 10% ஆகும். ஆம் இந்தப் பெரிய கடன் சுமை எமது மக்களாலேயே கட்டி முடிக்கப்பட வேண்டியது எமது மக்களது தலைவிதியாகும். நாம் சுடலை போகும்வரை இந்தக் கடனைக் கட்டியே தீர வேண்டும். சுடலையோடு முடிந்தாலும் பரவாயில்லை. அதற்கப்பாலும் வரிகள் எம்மை சும்மா விடப்போவதில்லை. எது எப்படியோ படலைகளும் சுடலைகளும் உடலைக் கடலை அளவு வரிகளோடு வாட்டியே தீரும். இனிச் சித்திர புத்திர நாயனாரின்கணக்குவழக்குஎப்படியோ?

இப்படியும் வரி விதிக்கலாம்

சாராயம், சிகரட், பீடி, கள் என்பவற்றுக்கான வரிகளை இருமடங்காக உயர்த்தலாம். வாகன வீதி ஒழுங்குகளை மீறுபவர்களுக்காக அதியுச்ச தண்டனைப்பணத்தை விதிக்கலாம். இரவு 9 மணிக்கு மேலாக நடைபெறும் அத்தனை களியாட்ட கலை நிகழ்ச்சிகளுக்கும் வரி விதிக்க வேண்டும். உதாரணமாக பத்து லட்சம் ரூபா செலவழித்து ஒரு நிகழ்ச்சி நடைபெறுமாயின் பதினைந்து வீத வரியாக ஒன்றரை லட்சம் கட்டுமாறு ஏற்பாடு செய்யலாம் (இது நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லது)

வீதியிலே அசிங்கம் செய்யும் நாய்கள், துப்பும் மனிதர்கள், குடிபோதையாளர்கள், நடமாடும் வியாபாரிகள் போன்றோர்களுக்கு வரி அறவிடுதல் வேண்டும். அளவுக்கதிகமான சொத்துக்கள், வாகனங்கள் வைத்திருப்போர் வீடு, வளவு மற்றும் திருமணப் பொருத்து நர்கள் இவர்களையும் கருத்திற்கொள்வது நன்மை பயக்குமே. ஏழைகளின் வயிற்றிலடிக்காதீர்கள் என்பது தர்மத்தின் குரல். நடக்குமா?



> திறமையற்ற முகாமைத்துவத்தாலும், ஊழல் மோசடிகளினாலும், சிறிலங்கன் விமானசேவையின் கடன் மட்டும் ரூபா 212 பில்லியன். உள்நாட்டு வெளிநாட்டுக் கடன் மட்டும் 1042.8 பில்லியன்! கடனை மீளச்செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டவை 100 பில்லியன் நிதி மட்டுமே. இது மொத்தக் கடன் தொகையின் 10% ஆகும். ஆம் இந்தப் பெரிய கடன் சுமை எமது மக்களாலேயே கட்டி முடிக்கப்பட வேண்டியது எமது மக்களது தலைவிதியாகும்.

25 வருடங்களாக வேதனம் இன்றி வாடுகின்ற ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஊழியர்கள்

வடமாகாணத்தின் ஒரே ஒரு பெரிய தொழிற்சாலையாக இயங்கி இன்று செயலிழந்திருக்கும் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு, 25 வருடமாகியும் அவர்களுக்குரிய வேதனங்கள் எவையும் இன்றுவரை வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில், முல்லைத்தீவு - மாங்குளம் வீதியில் அமைந்துள்ள கூழாமுறிப்புக் கிராமத்தில் இந்த ஓட்டுத் தொழிற்சாலை அமைந்துள்ளது. 1958 ஆம் ஆண்டு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கத்தின் முயற்சியால் உருவாகியதே இந்தத் தொழிற்சாலை. அந்தக் காலகட்டத்தில் செக் நாட்டவரான 'இன்கோப்' என்னும் விஞ்ஞானியால் கூழாமுறிப்பு குளத்தில் மேற்கொள்ளப்பட்ட மண் ஆய்வின் பிரகாரம், செங்கல் தயாரிக்கலாம் என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் நிமித்தமே இந்தப் பிரதேசத்தில் ஒரு பெரிய ஓட்டுத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு செக் அரசு முன்வந்து, அவர்களின் நிதி உதவியுடன் இந்தத் தொழிற் சாலை உருவாக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலையானது, 1961 ஆம் ஆண்டு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் நா.சிவசிதம்பரத்தின் அழைப்பின் பேரில், கைத்தொழில் அமைச்சராக இருந்த பிலிப் குணவர்த்தனவால் திறந்து வைக்கப்பட்டு, பண்டார வன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை எனப் பெயர் சூட்டப்பட்டது.

இந்தப் பிரதேச மக்களுக்கு இந்தத் தொழிற்சாலையானது ஒரு பெரும் கொடையாகவே இருந்தது. இங்கு 200 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் 90 தொழிலாளர்கள் நிரந்தர சேவை அடிப்படையில் அமர்த்தப்பட்டார்கள். 24 மணி நேரமும் இயங்கி வந்த இந்தத் தொழிற்சாலையானது இந்தப் பிரதேச மக்களின் ஓடு, செங்கல் தேவையை நிறைவு செய்துததுடன், நின்று விடாது யாழ்ப்பாண மாவட்ட மக்களின் தேவையையும் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு வளர்ச்சியடைந்தது. உண்மையில் இந்தத் தொழிற்சாலைக்கு முகாமையாளராகக் கடமையாற்றியவர், வடமராட்சியைச் சேர்ந்த எல்.அருள் நாயகமே. அவரது நிர்வாகத் திறமையே இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் துணையாக இருந்தது.

1971 ஆம் ஆண்டு இந்தத் தொழிற்சாலை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, தொழிலாளர்கள் அனைவரும் மட்பாண்டக் கூட்டுத்தாபன ஊழியர்களாக உள்ளீர்க்கப்பட்டார்கள். வடமாகாணத்திலுள்ள ஏனைய தொழிற்சாலைகளான காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, லங்கா சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபனம் ஆகியவைகளுடன் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையையும் ஒப்பிடலாம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்தத் தொழிற்சாலையின் இயந்திரங்கள், கட்டடங்கள் அனைத்தும் சேதமாக்கப்பட்டன. அன்றிலிருந்து குறிப்பிட்ட இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது. தொழிலாளர்கள் அனைவரும் தொழிலின்றி நிர்க்கதியாக்கப்பட்டார்கள். குறிப்பிட்ட கூட்டுத்தாபனம் அவர்களின் வேதனத்தை வழங்க மறுத்து வருகின்றது. இன்று 25 வருடங்களாக அவர்கள் படும் கஷ்டங்கள், துயரங்கள், துன்பங்கள், எழுத்தில் வடிக்க இயலாதவை.

1990 காலம் ஆண்டு ஜூன் மாதம் இந்தத் தொழிற்சாலை மூடப்படும்போது 74 நிரந்தர ஊழியர்கள் கடமையாற்றினார்கள். இன்றுவரை அவர்களில் 22 பேர் வறுமை காரணமாகவும், நோய் காரணமாகவும், மனக்கவலை காரணமாகவும் இறந்து விட்டனர். இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வட மாகாணத்திலுள்ள ஏனைய தொழிற்சாலைகளான காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, லங்கா சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் ஊழியர்கள் [illegible] 1990 ஆம் ஆண்டிலிருந்து மாதாந்தம் வேதனங்கள் வழங்கப்பட்டு, இன்று நட்டஈடுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒரேயொரு தொழிற்சாலை ஊழியர்களுக்கு மட்டும் இன்றைக்கு 25 வருடங்களாக வேதனம் எதுவும் வழங்கப்படாமலேயே உள்ளது ஏன்? சம்பந்தப்பட்டவர்கள் பதில் சொல்லுவார்களா?

இது மாத்திரமல்ல வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்ட பாதிப்புக்கள் சம்பந்தமாக மதிப்பீட்டு அறிக்கை 2004ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்கள் ஒன்றியம் இலங்கைக்கான நோர்வே தூதரகத்துக்கு அனுப்பியிருந்தது.

அப்போதைய அந்த அறிக்கையில் கூட, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள காங்கேசன்துறை சிமெந்து தொழிற் சாலை, லங்கா சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், கிழக்கு வாழைச்சேனை காகித ஆலைக்கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்று அந்த அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை பற்றியோ, வேதனமின்றித் துன்பப்படும் அந்தத் தொழிலாளர்கள் நிலை பற்றியோ பிரஸ்தாபிக்க மனிதநேய அமைப்பு புறக்கணித்தது ஏன்? என்பது தெரியவில்லை. இன்று எமக்கென்று ஒரு வட மாகாண அரசு இருக்கின்றது. முதலமைச்சர் இருக்கிறார். முல்லைத்தீவு மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதைவிட மேலாக வன்னி மாவட்டத்திலேயே சம்பந்தப்பட்ட அமைச்சரான ரிஷாத் பதியுதீன் இருக்கிறார். எல்லோரும் இணைந்து இந்த நல்லாட்சி மூலம் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய சம்பள நிலுவைகளைப் பெற்றுக்கொடுக்க உதவ வேண்டும்.

வே.ம.இந்திரநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யூதக் குடும்பங்களைக் காத்த சுவீடன் பெண்மணி புனிதரானார்

வத்திக்கான் சிற்றி, ஜூன் 7
இரண்டாம் உலகப் போர் இடம்பெற்ற சமயத்தில் யூதக் குடும்பங்களைக் காப்பாற்றிய பெண்மணி ஒருவர் சுவீடன் நாட்டில் முதல் முறையாகப் புனிதராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
அறுநூறு வருடங்களில் சுவீடன் நாட்டின் முதல் துறவியும் இவராவார். எலிசபத் ஹிசல்ப்ளாட், என்னும் அவர் றோமன் கத்தோலிக்க கான் வெண்டின் தலைவியாக இருந்தார். அங்குதான் டசின் கணக்கான யூதர்களை மறைத்து வைத்து அவர்களைக் காப்பாற்றினார்.
அதேபோல் 17 ஆம் நூற்றாண்டில் ஏழைகள் மருத்துவ வசதி மற்றும் இருப்பிடங்களைப் பெறுவதற்கு உதவிய ஸ்டானிஸ்லாஸ் பப்சின்ஸ்கி என்ற போலாந்து நாட்டைச் சேர்ந்தவருக்கும் துறவி பட்டம் வழங்கியுள்ளார் பாப்பரசர் பிரான்ஸிஸ்.
இவர் கன்னி மாதாவின் வழிபாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆண்களுக்கான முதல் மதப் பிரிவை நிறுவியவராவார். (கு)

பலூஜா நகர் கடந்த பலர்

ஆபத்தான பயணத்தில் அ

பக்தாத், ஜூன் 7
ஈராக்கின் பலூஜா நகரில் இருந்து மக்கள் வெளியேறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அந்தப் பகுதியில் உள்ள ஆற்றைக் கடக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதன்போது 7 சிறுவர்கள் உட்படப் பலர் உயிரிழந்துள்ளனர்.
50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலூஜா நகரில் அகப்பட்டுள்ளதை அடுத்து, போரில் உயிரிழப்புகளைத் தவிர்க்க ஈராக் இராணுவம் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. அந்த நிலையில், பலூஜாவில் இருந்து பொது மக்கள் வெளியேறி வருகின்றனர். இந்த வெளியேற்ற முயற்சியில் பலர் உயிரிழந்துள்ளனர் என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.



ஆப்கான் ஷெல் தாக்குதலில் 2 ஊடகவியலாளர்கள் சாவு

காபூல், ஜூன் 7
ஆப்கானிஸ்தானில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் குழுவினரில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவ வாகனத்தில் தொடரணியாகச் சென்றபோது, அது ஷெல் தாக்குதலில் சிக்கியது. இத்தத் தாக்குதலில் டேவிட் கில்கே மற்றும் சபிகுல்லா தமன்னா ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர் என என்.ஆர்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் அவர்களுடன் பயணித்த, ஏனைய இருவரான, ரொம் பௌமன் மற்றும் மேனிக்கா எவஸ்ராடிவா தொடர் வாகன அணியில் சென்ற வேறு வாகனத்தில் பயணித்திருந்தனர். அவர்கள் காயம் ஏதும் இன்றி உயிர் தப்பினர்.
குறித்த செய்தி நிறுவனத்தின் 46 வருட சேவையில், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை இதுவே முதல் முறையாகும். கில்கே என்ற 50 வயதான புகைப்பட ஊடகவியலாளர், குறித்த செய்தி நிறுவனத்தில் 15 வருடங்களுக்கும் அதிகமாகப் பணியாற்றியுள்ளார். அமெரிக்க இரட்டை கோபுரத் தகர்ப்பில் ஆரம்பித்து, அதுபோன்ற பல இக்கட்டான பகுதிகளில் சென்று செய்தி சேகரித்து வந்தார். தற்போது, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கின் கள நிலவரங்களை அறிவித்து வந்த ஊடக வியலாளர் ஆவார். போர்ச் சூழலில் மக்களின் நிலமை, இராணுவத்தினரின் செயற்பாடுகள்

தொடர்பில் அவர் அதிக அக்கறை செலுத்தி வந்தார். தமான்னா ஆப்கானுக்குரிய ஊடகவியலாளர் ஆவார். ஆனால் என். ஆர்.பி. செய்தி நிறுவனத்தின் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
நேற்றுமுன்தினம் காலை மர்ஜா பகுதிக்குப் பயணித்தபோது இந்தத் தாக்குதல் இடம் பெற்றது. 3 வாரங்களாக ஆப்கானில் இருந்து பல விதமான செய்திகளைச் சேகரித்து வந்தனர். இதற்கிடையில் தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பிலான சேதங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. உயிரிழந்த ஊடகவியலாளர்கள் மிகவும் துணிந்தவர்கள், திறமைசாலிகள் என செய்தி நிறுவனம் புகழாரம் சூட்டியுள்ளது. மிகச் சிறந்த மனிதர்களை இழந்து விட்டோம் என வும் குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது. (த-ரி4)

புலிக் கோவிலில் இ 137 புலிகளும் விடு

வன விலங்குகளின் உடற்பாகங்களும் மீட்

பாங்கொக், ஜூன் 7
தாய்லாந்தில் புலிக்கோவிலில் இருந்த அனைத்துப் புலிகளும் விலங்கு அதிகாரிகளால் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.
கடந்த வாரத்தில் 100 புலிகள் வெளியேற்றப்பட்ட நிலையில், கடந்த சனிக் கிழமை மேலும் 37 புலிகள் வெளியேற்றப்பட்டுள்ளன. அந்தப் புலிகள் ஆரோக்கியமாக இருந்தன என விலங்கு நல அதிகாரிகள் தெரிவித்தனர்.
கடந்த ஒரு வார காலமாகப் புத்த விகாரை வளாகத்தில் இருந்த புலிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வந்துள்ளன.
தாய்லாந்தின் காஞ்சனாபுரி மாகாணத்தில் பௌத்த கோவில் அமைந்துள்ளது. அங்கு காட்டு விலங்குகள் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதன் பின்னர் இடம்பெற்ற சோதனையில் இறந்த புலிக்குட்டிகளின் உடல்கள் கைப்பற்றப்பட்டன. விலங்குகளைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 3 பௌத்த துறவிகள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் கடந்த வெள்ளிக் கிழமை அவர்கள் பிணையில்வெளிவந்தனர்.

அந்தக் கோவிலில் 40 இறந்த புலிக்குட்டிகளின் உடல்கள், 2 புலித் தோல்கள், 9 புலிகளின் பல் அடுக்குகள் என்பவை கைப்பற்றப்பட்டன. புலிக்கோவிலில் இருந்து இவ்வாறான பொருள்கள் கண்டெடுக்கப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
உலகின் அரிதான உயிரினங்களில் ஒன்றாகக் கருதப்படும் புலிகள், வன

அதிகா
பராமர்
நிலை
கைப்
ஆர்வ
ஏற்படு
பட்டவ
பால், 4
அல்ல
தண்ட
தெரிவி

உலகின் சிறந்த நாட

லண்டன், ஜூன் 7
உலகின் சிறந்த நாடாக சுவீடன் அறிவிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
இந்தப் பட்டியலில் 163 நாடுகள் சேர்க்கப்பட்டிருந்தன. ஐ.நா. மற்றும் உலக வங்கியின் 35 விதமான துறைகளில் இந்த நாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கலாசாரம், விஞ்ஞான வளர்ச்சி, சமாதானமும் பாதுகாப்பும், காலநிலை மாற்றம், சுகாதாரம் மற்றும் சமத்துவம் என்பவை பிரதான குறிகளாக ஆராயப்பட்டுள்ளன. முதல் 10 இடங்களில், சுவீடன், டென்மார்க்,

நெதர்லாந்
பின்லாந்து
திரியா மற்
கள் உள்ள
இந்தத் தர
இறுதி நாடா
பட்டியலில்
யும், இந்தி
பெற்றுக்
யில் பிரதா
பொதுமக்க
2014 ஆ
அயர்லாந்
தமை குறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...கரின் ஆற்றை ...ர் உயிரிழப்பு

...ல் அகதிகள்

மேற்கு பக்தாத்தில் அமைந்துள்ள அல்-அமரியா மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன. 18 பேர் உயிரிழந்தனர் எனவும், 7 சிறுவர்கள், 3 பெண்கள் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பலூஜாவில் இருந்து வெறியேறி வருகின்றன. ஆற்றைக் கடக்க மக்கள் மேற்கொண்டுள்ள முயற்சி மிகவும் ஆபத்தானது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக் படையினர் பலூஜா நகரை மீட்கும் போரை ஆரம்பித்து 2 வாரங்கள் ஆகிவிட்டன. இந்த நிலையில் அங்கு கடும் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

(த-ரி4)

...0 இருந்த ...விடுவிப்பு

...ம் மீட்பு

அதிகாரிகளால் பெரும் பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், இவ்வாறான பொருள்கள் கைப்பற்றப்பட்டமை விலங்கு நல ஆர்வலர்களிடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், 4 ஆண்டுகள் கடூழியச் சிறை அல்லது ஆயிரத்து 100 டொலர்கள் தண்டம் செலுத்தப்படநேரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...நாடாக சுவீடன்

...நெதர்லாந்து, இங்கிலாந்து, ஜேர்மனி, ...பின்லாந்து, கனடா, பிரான்ஸ், ஆஸ்...திரியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடு...கள் உள்ளன.

இந்தத் தரவரிசைப் பட்டியலில் லிபியா இறுதி நாடாகத் தெரிவாகியுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கை 85 ஆவது இடத்தையும், இந்தியா 70 ஆவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. இந்தத் தரவரிசையில் பிரதானமாகக் கணிக்கப்பட்டது பொதுமக்களின் நலன் ஆகும்.

2014 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் அயர்லாந்து முதலிடத்தை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)

மின்னல் தாக்கியதில்

ஜேர்மனியில் 80 பேர் காயம்

பேர்ளின், ஜூன் 7

ஜேர்மனியில் இடம்பெற்ற வருடாந்த றொக் இசைக் கச்சேரியில் மின்னல் தாக்கி 80 இற்கும் அதிகமானோர் காயமுற்றுள்ளனர். அவர்களில் 72 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இந்தச் சம்பவத்தில் எந்த உயிரிழப்புகளும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இசை நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இரு தினங்களாக இடம்பெற்று வந்த இந்த நிகழ்வின் மூன்றாவது நாளில் கடும் புயல் மழை தாக்கியது. இரவு 8 மணியளவில் மின்னல் தாக்கியது இடம்பெற்றது. உடனடியாகச் சம்பவ இடத்துக்குத் தீயணைப்புத் துறையினர் வரவழைக்கப்பட்டனர்.

நிகழ்ச்சி ஏற்பட்டாளர்கள் தெரிவிக்கையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில்

8 பேருக்கு மின்னலால் காயங்கள் ஏற்பட்டன. மின்னல் தாக்கத்தால் ஒன்றரை மணி நேரத்துக்கு நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் 92 ஆயிரம் இரசிகர்கள் கலந்து கொண்டனர்-என்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை புயல் தாக்கிய போதும் நிகழ்வு நிறுத்தப்படவில்லை. ஆனால் நேற்று முன்தினம், பிற்பகல் அளவில் மீண்டும் மின்னல் தாக்கம் அந்தப் பகுதியில் ஏற்பட்டதை அடுத்த நிகழ்ச்சி முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் கடந்த சில நாள்களாக மோசமான காலநிலை நிலவி வருகின்றது. அங்கு பெய்யும் புயல் மழையால், ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், போலாந்து பகுதிகளில் வெள்ளப் பெருக்குடன் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன. குறைந்தது 18 பேர் உயிரிழந்ததுடன், 11 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)

உருகும் நிலையில் ஆர்ட்டிக்கில் பனி

விஞ்ஞானிகள் எச்சரிக்கை

லண்டன், ஜூன் 7

ஆர்ட்டிக் பகுதியில் பனிக் கட்டிகள் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். 100 ஆயிரம் வருடங்களில் முதல் முறையாக இவ்வாறானதொரு நிகழ்வு ஏற்பட்டுள்ளது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். அமெரிக்காவின் பனித் தகவல் மையத்தின் செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம் இது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இந்த மாதத்தில் 11.1 மில்லியன் கன கிலோமீற்றர் பனிப்பாளம் கடலில் இருப்பதாகவும், கடந்த 30 வருடங்களுக்கு முன்பு 12.7 மில்லியன் கன கிலோமீற்றர் பனிப்பாளம் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1.5 மில்லியன் கன கிலோமீற்றர் அளவான, அதாவது ஐக்கிய இராச்சியத்தின் நிலப்பரப்புக்குச் சமனான அளவுப் பனிப்பாளம் திரவ நிலையை அடைந்துள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலை தொடருமாயின் ஆர்ட்டின் பனிப்பாளங்கள் முற்றாக அழிவதுடன் காலநிலையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

100 ஆயிரம் தொடக்கம் 120 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பனிப்பாளம் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டது. இதனைப் போன்று மீண்டும் ஏற்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது என்கின்றனர் விஞ்ஞானிகள். பனிப்பாளங்களின் அழிவால், திடீர் வெள்ளங்களும், சூறாவளிகளும் ஏற்பட்டுள்ளன. இத்துடன் சூழல் வெப்பநிலை முந்தைய வாசிப்புகளை விட அதிகரித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், கடல் மேற்பரப்பில் வெப்பநிலை வாசிப்பு பெறப்பட்டது. கடல் மேற்பரப்பில் தேங்கியுள்ள மெதேன் வாயுவின் வெப்பநிலை அதிகரித்ததோடு, சூழல் வெப்பநிலை 0.6 பாகையினால் அதிகரித்துள்ளது. உலகப் பனிப்பாளங்களின் அழிவால் பெரும் தாக்கங்களும், காலநிலைப் பிறள்வுகளும் ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். முன்னதாக இந்த வருடத்தின் ஒவ்வொரு மாதமும் பெறப்பட்ட வாசிப்புகள் சாதனைப் பதிவை ஏற்படுத்தும் அளவுக்கு வெப்பநிலை உயர்வைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)

ஜப்பான் காட்டில் காணாமற்போன...

7 வயதுச் சிறுவன் பாதுகாப்பாக மீட்...

டோக்கியோ, ஜூன். 7

ஜப்பானின் வடபகுதியில் பெற்றோரால் தண்டனைக்காக காட்டுப்பகுதில் விடப்பட்ட 7 வயதுச் சிறுவன் மீண்டும் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்.

அவன் கடந்த வெள்ளிக்கிழமை காலை இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறுவனைக் கண்ட பெற்றோர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். கிட்டத்தட்ட ஒரு வார காலமாகக் காணாமற்போன சிறுவன் இராணுவத்தினரின் பகுதியில், ஆரோக்கியமான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டான்.

காட்டுக்குள் அமைக்கப்பட்ட இராணுவத் தளத்துக்குச் சிறுவன் தற்செயலாகச் சென்றுள்ளான். பாதுகாப்புப் படையினருக்கு தனது பெயர் யமாட்டோ ரனூக்கா என்று அறிமுகப்படுத்தியுள்ளான் என இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். கண்டுபிடிக்கப்பட்ட சிறுவன் ஹெலி மூலம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டான். கடந்த சனிக்கிழமை பெற்றோர் சிறுவனின் அடாவடித் தனத்துக்காக அவனைக் காட்டுப் பகுதியில் விட்டுவிட்டுச் சென்றனர். பின்னர் திரும்பிவந்து

பார்த்தபோது அந்தப் ...யில் அவன் இருக்கவில்...பொலிஸாரின் உதவியுட... ஜப்பான் இராணுவத்தின... உதவியுடனும் தேடுதல் ...பிக்கப்பட்டது.

(த-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு முதல் இறப்பு வரை
பிறந்த எண்ணின் பலன்கள்
4

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது. பிறந்த எண் 4 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

(சாதகத்தின்படி)நவக்கிரகங்களின் (நைசிக பலம்) பலத்தில், இராகு பகவான் தான் பலவான் என்றாலும், எண் சாத்திரத்தில் நான்கு எண் அவ்வளவு வலிமை மிகுந்த எண்ணாகச் சொல்லப் படவில்லை. சூரியனின் எண்ணான1–ஆம்எண்ணைச்சார்ந்தே இதன் பலன்களும், நடைமுறைகளும், அதிர்ஷ்டங்களும் உள்ளன. மேலும் 1 ஆம் எண்ணுக்கு மிகவும் நட்புடையதாகவும் இந்த எண் விளங்குகிறது.

வெளிநாட்டு எண்கணித மேதைகள் இதை (4 எண்) யுரேனஸ் என்னும் கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதாகக் கூறுகிறார்கள். இவர்கள் வாய்ப்பேச்சில் இன்பம் காண்பவர்கள். நாவன்மை அதிகமுள்ள இவர்கள் வீட்டிலும், வீதியிலும், கோவில்களிலும், ஆற்றங்கரையிலும், கடற்கரையிலும் கையைஆட்டி, குரலை ஏற்றி, இறக்கி, உணர்ச்சியுடன் பேசி மக்கள் மனதைக் கவர் வார்கள். பல மணி நேரம் பேசும் இயல்பினர். ஒரு சனக் கூட்டம் எப்போதும் இவர்களைச் சுற்றியே நிற்கும். இவர்கள் இரகசியங்களைக் காப்பாற்றமாட்டார்கள். எந்த ஒரு விடயத்தையும், வேலையையும், அடுத்தவரிடம் சொல்லிப் புலம்பாது இருக்கமாட்டார்கள். இவர்களிடமிருந்தே திட்டத்தை அறிந்து கொண்ட இவர்களது நண்பர்கள் அந்தத் திட்டத்தை அவர்களே விரைந்து செயலாற்றி, வெற்றி பெற்று விடுவார்கள். எனவே இவர்கள் அதிர்ஷ்டமான வாழ்க்கை வாழ வேண்டுமானால் முதலில் நாகாக்க வேண்டும். மேலும் 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள், தங்களது நண்பர்களாலும், சுற்றத் தார்களாலும், மற்றும் நம்பிய வர்களாலும் செய்வினைகள் மற்றும் ஏவல் கோளாறுகளை இவர்களது வாழ்க்கையில் அனுபவிக்க நேரிடுகிறது. இதே யோகம் 2, 8 ஆகிய திகதிகளில் பிறந்த அன்பர்களுக்கும் உண்டு.

13 ஆம் எண்ணின் சில உண்மைகள்

வெளிநாட்டு மக்கள் (ஏன் எமது நாட்டவர்கள் கூட) 13 ஆம் எண்ணைக் கண்டு மிகவும் பயப்படுகிறார்கள். மேலும் 13 ஆம் எண்பெயரில்வரும்அன்பர்கள் தங்களது வாழ்க்கையில் பல ஜீவ மரணப் போராட்டங்களைச்சந்தித்துத்தான்ஆகவேண்டும். பெரும்பாலும் 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்த அன்பர்களும், நான்காம் எண்ணில் பெயர் அமைந்த அரச அதிகாரிகளும், ஊழியர்களும், அயராது உழைத்திட்ட போதிலும், ஏனோ மேலதி காரிகளால் வெறுக்கப்படுகிறார்கள். அடிக்கடி இவர்கள் வீண் பழிகளைச் சந்திக்கின்றார்கள். அடிக்கடி ஓடிக் கொண்டிருக்கும் வாகனங்களுக்குத் தவிர, மனிதனின் வாழ்க்கைக்கு இந்த 13 எண் ஏற்றதல்ல. அதுமட்டுமல்ல 22 என்ற எண்ணும், 13 ஐப் போன்றே பயப்பட வேண்டியதுதான். 22 ஆம் திகதியில் பிறந்தவர்கள் அல்லது பெயர் எண் உள்ளவர்களில் பலர் திடீரெனத் தாழ்ந்து விடுவார்கள்.

பிறரால் வஞ்சிக்கப்படுவார்கள். பல அன்பர்கள் அடுத்துக் கெடுக்கப்பட்டுள்ளனர். இவை அனைத்தையும் இவர்களிடம் அன்பு பாராட்டியவர்களே செய்து விடுவார்கள் என்பது வேதனையான விடயம். இந்த எண்ணின் தொடர்புடையவர்களின் வாழ்க்கையானது எவ்வளவு வேகமாக உயர்கிறதோ, அதே வேகத்தில் திடீரெனத் தாழ்ந்து விடும் என்பதையும் மறக்கக் கூடாது.

மேலும் இந்தக் கிரகத்தின் ஆதிக்கத்திலுள்ள அன்பர்களுக்கு அடிக்கடி இட மாற்றம் ஏற்படும். 13, 22 எண்ணில் பிறந்தவர்கள் சுதந்திரப் பிரியர்கள். எவருக்கும் கட்டுப்பட்டு வாழ விரும்பாதவர்கள். இவர்கள் தங்களது மேலதிகாரிகள், முதலாளிகளின் ஆலோசனைக்குக் கட்டுப்பட விரும்பமாட்டார்கள்.

ரோசஉணர்வும், தன்மானஉணர்வும் மிகுந்த இவர்கள், அடுத்தவர்களுக்கு அடிமையாகஇருந்துமுன்னேறுவதை விட அந்த வேலையை விட்டு விலகி ஏதாவது செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று எதிர்த்து நிற்பார்கள். எனவேதான் இவர்களுக்குப் பல பிரச்சினைகளும், முன்னேற்றத்தடைகளும், தொழிலில் உண்டாகின்றன. தங்களது மேலதிகாரிகள், முதலாளிகள் போன்றோர்களை அனுசரித்துச் சென்றால் இவர்களும் மிகுந்த முன்னேற்றம் பெறலாம்.

(தொடரும்)

விதியின் வீதியில்... மனிதர்களின் பயணம்...

சாம் ரமேஸ்குமார்

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் முற்பிறவியில் செய்த நன்மை தீமைகளின் தொகுப்பாகவே இறைவனால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுப்பையே மனிதர்கள் விதி என்கின்றார்கள்.

மனிதர்களுடைய பாவ புண்ணியங்களே காலப்போக்கில் விளைவுகளாக மாற்றமடைந்து ஒவ்வொரு பிறவியிலும் அழுத்தத்தைக் கொடுத்து இன்பமாகவும் துன்பமாகவும் பரிணமிக்கின்றன. இதற்கு முழுப்பொறுப்பு மனிதனே ஆவான், இறைவனல்லன்.

அறியாமையெனும்பெரும்மாயையில்அகப்பட்டுள்ள மனிதர்கள் தங்கள் தீயசெயல்களின் விளைவுகளை உணராது தங்களைத் தண்டிப்பது இறைவனெனத் தவறுதலாக எண்ணி விடுகின் றார்கள். இறைவன் ஒருபோதும் மனிதர்களைத் தண் டிப்பது கிடையாது. அப்படித் தண்டித்தால் மாபெரும் கருணையாளனாக இறைவன் ஒருபோதும் இருக்க முடியாது.

மனிதர்கள் தமக்குத்தாமே நண்பனாகவும் பகைவனாகவும் இருக்கின்றார்கள் என்று உரைக்கின்றது கீதை. மனிதர்கள் செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாமலிருப்பதும், செய்யக்கூடாத செயல்களை செய்யத் துணிவதும் செயல்களினுடைய வினைப் பயனின் உச்ச விளைவுகளைத்தான் தரும். இதுவே வீரியமான மனித விதியாகும்.

விதியினுடைய வலுவான வலிமையை மகாபாரதம் மிகத்தெளிவாக உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

அஸ்தினாபுரத்திலிருந்து பாண்டவர்களுக்கு விதுரர் மூலமாகத் தகவல் வருகின்றது திருதராட்டினனின் கட்டளை சூதாட வாருங்கள் என்று. அப்போது அகமகிழ்ந்த தருமர் தன் சகோதரர்களிடம் அபிப்பிராயம் கேட்கின்றான். அதற்கு இளையவனான சகாதேவன் அண்ணா! எம்மை அழைத்தப் போக எவரெல்லாம் வந்துள்ளார்கள் என்று கேட்டான். விதுரர் மட்டுமே வந்துள்ளார் என்றான் தருமர். இல்லை அண்ணா! விதுரரோடு துணையாக இன்னொருவரும் வந்துள்ளார். வாசலில் சென்று பாருங்கள் என விடை பகர்ந்தான் சகாதேவன்.

தருமருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. வாசலில் எவரும் இல்லாததைக் கண்டு வியந்து சகாதேவனிடம் முகக்குறிப்பால் வினாவியபோது அண்ணா! வெளியே வாசலில் நிற்பவர் எவரென்று எம் கண்களுக்குப் புலப்படாது. ஆனால் அவரது ஆற்றலோ அளப்பரியது. அவரது பெயர்தான் விதி என சகாதேவன் ஆழமாகக் கூறியபோது தருமர் கொஞ்சம் அதிர்ந்தே போனார்.

அண்ணா! சூதாட்டத்தை மூலதனமாக வைத்து ஒரு பெரிய நிகழ்வை நிகழ்த்த விதி தீர்மானித்துவிட்டது. அந்த நிகழ்வு எதுவென்று எமக்கும் தெரிந்திருந்தாலும், நாம் ஐவரும் அரசரின் கட்டளையை ஏற்றுப் போவதே சிறப்பான செயலாகும் என சகாதேவன் கூற, பாண்டவர்கள் இந்திரப் பிரஸ்தத்திலிருந்து அஸ்தினாபுரம் நோக்கிப் பயணித்தார்கள். அதன் பின்பு விளைந்த அதர்மத்தின் செயல்களே மகாபாரதமாக வடிவெடுத்தது.

தமதுதன் சாயலான பாண்டவர்களையே விதி தன் விளைவுகளால் ஆட்கொண்டது என்றால், தர்மமே என்னவென்று தெரியாத சாதாரண பாமர மக்களை விதி எப்படியெல்லாம் ஆக்கிரமிக்கும் என்பதை நாம் இயல்பாகவே புரிந்து கொள்ள முடியும்.

எவராலும் விதியின் சக்தியை வெல்ல இயலாது. அதன் வலுவை ஓரளவாவது குறைக்க இயலும். இறை பிரார்த்தனை, இறை சாதனை மூலமே இதை நிகழ்த்த முடியும். பரீட்சையென்றால் எல்லாவற்றுக்கும் மார்க்கமொன்று இருக்கத்தான் செய்கின்றது. அந்த மார்க்கத்தில் ஒன்றே இறை மார்க்கமாகும்.

இதைத்தான் பகவான் சத்தியசாயி பாபா உதாரணமாக மனிதர்களுடைய கர்ம வினையின் கனதியானது ஆயிரம் ரூபாவுக்குரிய சில்லறைகளாக இருந்தால், அதைச் சுமப்பதற்கு இறைவன் தன் பக்தர்களுக்கு எளிதாக ஆயிரம் ரூபா நோட்டாக அதை மாற்றிக் கொடுக்கின்றான். கர்மவினையின் கனதிதான் குறைகின்றதே தவிர, ஒருபோதும் கர்மவினை குறையாது என்கிறார்.

விதியின் வீதியில் உலகில் பிறந்த அனைத்து மனிதர்களும் பயணித்தே ஆக வேண்டும். இதுவே இறைவன் படைப்பின் தர்ம நியதியாகும்.

எதிர்காலத்தில் மனிதர்கள் தமது விதியை மாற்ற வேண்டுமென்றால் தமது செயல்களை இப்போதிருந்தே மாற்ற வேண்டும். மன எண்ணங்களையும், செயல்களையும் தர்மத்தை நோக்கி மாற்றுகின்ற போது மனித வாழ்வானது விதியின் வலிமையைக் குறைத்து, மனிதனை இறைவனை நோக்கி நகர்த்திச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவு அகற்றலில் சவால் திணறும் யாழ். மாநகர சபை

வி.பி.குமார்

2015 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஜப்பானின் சென்டாய் மற்றும் மியாகி ஆகிய இடங்களில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின்ஆபத்து தணிப்பு தொடர்பான மூன்றாவது உலக மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட "பேரிடர் ஆபத்தைத் தணிப்பதற்கான சென்டாய் கட்டமைப்பு 2015-2030" என்ற சர்வதேச இலக்குக்கு அமைவாகவும், 2015 ஆம் ஆண்டு கார்த்திகை 30 ஆம் திகதி தொடக்கம் மார்கழி 12 ஆம் திகதி வரை பரிஸில் இடம்பெற்ற காலநிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கால நிலை மாற்றம் தொடர்பாக உருவாக்கப்பட்ட சர்வதேச இலக்குக்கு அமைவாகவும், இதனைஏற்றுக்கொண்ட இலங்கையின் தேசிய கொள்கைகளுக் கமைவாகவும், யாழ். மாவட்டத்துக்கான சமூக நட்புறவுடன் கூடிய செயலாற்றுகை மற்றும் அடைவுக் கட்டமைப்பு யாழ். மாவட்டத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான நீரோட்டத்தில் பங்கு தாரர்களின் உறுதி மிக்க உத்தமமான பங்களிப்பினூடாக மீட்சித்திறன் கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புதல் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

பல்பரிமாண கலாசார விடயங்களான பண்பாட்டுடன்கூடிய உவந்தளிப்பு, பாதுகாப்பு, கணக்களிதகைமை, புத்தாக்கம், ஆக்கத்திறன், பேச்சுவார்த்தை, விழுமியம் பேணல், நெகிழ்ச்சிப்போக்கு, ஏற்றுக்கொள்ளல் சிறப்பு நட்புறவு, புத்திக் கூர்மை போன்றவற்றை விருத்தி செய்து பங்குதாரர்களான அரச, அரசசார்பற்ற, தனியார் மற்றும் மக்கள் போன்ற பல்வேறு தரப்பினரின் பங்களிப்பை உள் வாங்கி இதனூடாகப் பேண்தகு நிலைமையை விருத்திசெய்து அதனூடாக மீட்சித்திறன் கொண்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக இந்தச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனது பிரதான எட்டுத் தூண்களாவன சூழல் தொகுதியைப் பாதுகாத்தலும் முகாமைப்படுத்தலும், கல்வி விருத்தியும் அறிவு விருத்தியும், விழுமியம் சார் அபிவிருத்தியும் செயன்முறையும், வேலைவாய்ப்பை உருவாக்கலும் ஈடுபடுத்தலும், முயற்சியாண்மையும் அபிவிருத்தியும், பொருளாதார அபிவிருத்தியும் சந்தர்ப்பங்களை உருவாக்கலும், பொழுதுபோக்கு வசதிகளை விருத்தி செய்தல், அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல் ஆகியவற்றில் முதலாவதான சூழல் தொகுதியைப் பாதுகாத்தலும் முகாமைப்படுத்தலும் என்ற தூணின் அடிப்படையில், நகரத்தின் பேண்தகு அபிவிருத்தியிலும் நகரமக்களின் ஆரோக்கிய வாழ்க்கையிலும் செல்வாக்குச் செலுத்தும் திண்மக் கழிவுகளை, பங்குதாரர் பங்களிப் பினூடாகச் சூழலுக்குப் பாதுகாப்பாக அகற்றுவதற்கு யாழ். மாவட்டச் செயலகத்தின் அனுசரணையுடனும், யாழ்ப்பாண மாநகர சபையின் ஒத்துழைப்புடனும் உலக சுற்றாடல் தினம் ஜூன் 5, 2016 ஐ நினைவு கூர்ந்தது.

திண்மக் கழிவுகள் எனப்படுபவை, மக்கள் தங்கள் அன்றாடச் செயற்பாடுகள் மூலம் பயன்படுத்திய பின்னர் சூழலுக்கு வெளியேற்ற எனத் தீர்மானிக்கப்பட்ட பொருள்களாகும். இதனுள் சமையலறைக் கழிவுகள், உணவுக் கழிவுகள், சேதனக்கழிவுகள், பிளாஸ்ரிக் என்பவை உள்ளடங்கும்.

அதிகரித்து வரும் சனத்தொகைப் பெருக்கமும், உலகமயமாக்கல் போக்கும் இதன் விளைவாக அதிக உற்பத்தி, அதிக நுகர்வு போன்றவையும் பெருமளவான கழிவுகள் உருவாகக் காரணமாகின்றன. இவ்வாறு உருவாகி வரும் கழிவுகள் நிலம், நீர், வளி என்பவற்றை மாசு படுத்துவதுடன், மனித உடல்நலத்துக்கும் பங்கம் விளைவிக்கும் ஒன்றாக மாறிவருகின்றன. திண்மக்கழிவுகளைக் கையாள்வதில் நாடுகளும் பல அரசுகளும் பலசெயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இதேபோன்று இலங்கையும் உள்ளூராட்சி நிறுவனங்களினூடாகவும், சுற்றாடல் அதிகாரசபையின் ஊடாகவும் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஆயினும் செயற்றிட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படும் இலக்கு என்பது வெற்றியடையாத ஒன்றாகவே உள்ளது. உற்பத்தியாளர் மட்டத்திலும் நுகர்வோர் மட்டத்திலும் மாற்றம் ஏற்படும்வரை, திண்மக் கழிவுகளை முகாமைப்படுத்துவது இயலாத காரியமாகும்.

யாழ்ப்பாணத்தில் கழிவு உற்பத்தியும் நுகர்வு வடிவமும் எவ்வாறு காலத்துக்குக் காலம் மாறி வருகின்றன என்பதை நோக்குகின்றபோது, 1995 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் மக்கள் இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்து வந்தனர். அக் காலத்தில் தமக்குத்தேவையான உணவுப் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்திருந்தனர். விவசாய உற்பத்தி நடவடிக்கையின்போது வெளியேற்றப்படும் கழிவுகள் வெவ்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்தக் காலத்தில் நுகர்வு வரையறுக்கப்பட்டிருந்ததால் கழிவுகளின் உற்பத்தி மிகவும் குறைவாகவே காணப்பட்டது. தொழிநுட்ப முன் னேற்றம் வளர்ச்சியடையாத காலம், உலக மயமாக்கல் போக்குகளுக்கு யாழ். மாவட்டம் உட்படாத காலம், அளவுக்கு அதிகமாக தேவையற்ற நுகர்வுகளை நுகர்வதற்கு வாய்ப்புக்கள் உருவாகாத காலம். இதுவே கழிவுகள் அக்காலத்தில் ஒரு பிரச்சினையாகக் கருதப்படாமல் இருந்தமைக்கான காரணமாகும். இதனைத் தொடர்ந்து இந்த மாவட்டம் இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் இந்த மாவட்டத்துக்கும் வெளிமாவட்டத்துக்கும் இடையிலான சகல தொடர்புகளும் கடற் பயணத்தினூடாகவே மேற்கொள்ளப்பட்டன.

அதாவது 1996 இலிருந்து 2002 வரையான காலப்பகுதியில் போரும் இடப்பெயர்வும் அடிக்கடி இடம் பெற்றதனால் அடிப்படைத் தேவை குறித்தே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. வர்த்தகச் செயற்பாடுகள் கடற் போக்குவரத்தை நம்பியிருந்தமையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொருள்கள் கொண்டுவரப்பட்டன. இதனால் நுகர்வு என்பதும் மட்டுப்படுத்தப்பட்டே இருந்தது. இதனால் கழிவு உருவாகும் வீதம் வரையறுக்கப்பட்டிருந்தது.

> யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவுகளின் தொகை அதிகரிக்க அவற்றைக் கொட்டுவதற்காகக் காக்கை வெளி பிரதேசம் இலக்குக் கொள்ளப்பட்டு இன்று வரை தொடர்ச்சியாகக் கொட்டப்பட்டு வருகின்றது. உண்மையில் யாழ்ப்பாண மாநகர சபை, கழிவகற்றலை மேற்கொள்வதில் பெரிய சவால்களை எதிர் நோக்கிவருகின்றது.

2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இம் மாவட்டத்துக்கும் வெளிமாவட்டத்துக்கும் இடையில் தரைவழிப்போக்குவரத்து மீள ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் காலத்தில் கொழும்பிலிருந்து பொருள்கள் இங்கே தருவிக்கப்பட்டன. இந்தக் காலம் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கான திருப்புமுனைக் காலமெனக் கொள்ளலாம். அதாவது 2002 லிருந்து 2005 வரை அதிகமாகப் புது வீடுகள் கட்டப்பட்டன. தொலைக்காட்சிப் பெட்டி குளிர்சாதானப் பெட்டி, கிறைண்டர் உள்ளிட்ட பொருள்கள் அதிகமாக மக்களால் நுகரப்பட்டன. தொலைக்காட்சிப்பாவனை மக்களின் பொழுதுபோக்குக்கு அத்திபாரமிட்டது. மக்கள் இதற்கு அடிமையாகவே, வேலைகள் மற்றும் குடும்பக் கவனம், கோயிலுக்குச் செல்லுதல் இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளல், உணவு தயாரித்தல், பிள்ளைகளின் பாதுகாப்பு என்பவை தொடர்பில் கவனம் செலுத்துதல் குறைவடைந்தது. அத்தகைய தன்மை சோம்பேறித்தனத்துக்கு விதிட்டது. அத்துடன் ஆடம்பரப் பொருள்களின் நுகர் வுக்கும் நுகர்வு ரீதியில் மக்கள் அடிமைப் பட்டுச் செல்வதற்கும் இயற்கையான வாழ்க்கையிலிருந்து மக்கள் விடுபடவும் வழிவகுத்தது. இந்தக் காலத்தில் பொலித்தீன் பாவனை சற்று அதிகரிக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் கடைகளில் பொருள்கள் வாங்கும்போது கடதாசி சுருள்களில் சுற்றி பொருள்கள் வழங்கப்பட்டன. இந்தக் கடதாசிப் பொருள்கள் மூலம் சுற்றி வழங்கப்படும் பொருள்கள் பெரிய போத்தல்களில் இடப்பட்டு பின்னர் அந்தக் கடதாசி அடுப்பு எரிப்பதற்குப் பயன்படுத்தப்படும். அரிசி மா உள்ளிட்ட பொருள்கள் வீட்டிலிருந்து கொண்டு செல்லப்படும் சீலைப்பை மற்றும் தடித்த கடதாசிப் பைகளில் வாங்கப்படும்.

ஒவ்வொரு பொருள்களுக்கும் ஒவ்வொருபை வீட்டிலிருந்து கொண்டு செல்லப்படும். இதைப் பெரும்பாலும் சங்கக் கடைகளில் காண முடிந்தது. இங்கு இந்தப் பைகள் தொடர்ச்சியாக பொருள்கள் வாங்குவதற்காகப் பயன்படுத்தப்படுவதனால் தேவையற்ற பொலித்தீன் பைகள் வீட்டில் சேர்வது தவிர்க்கப்பட்டது. பொருள்கள் சேவைகளின் கிடைப்பனவு விருத்தியடையவும் மக்கள் ஆடம்பரத்துக்குப் பழக்கப்படவும் பொருள்கள் வாங்குவதற்கென நேரம் இன்மையால் போகிற இடங்களில் பொருள்களை நுகரத் தொடங்கினர். அதாவது நுகர்வுப் பழக்கம் மாற்றமடைய கடதாசிச் சுருள், தடித்த கடதாசிப் பைகள் என்பனவற்றின் பயன்பாடு தவிர்க்கப்பட்டு சொப்பிங் பையின் பாவனை அதிகரித்தது.

சிறிய நடுத்தர மற்றும் பெரிய பைகள் பாவனைக்கு வர பழைய முறை தவிர்க்கப்பட்டது. ஆயினும் இன்றும் பழைய நடைமுறையை நாம் சங்கக் கடைகளில் காணலாம். இன்று வீட்டுப் பாவனைப் பொருள்களிலிருந்து உணவு மற்றும் ஏனைய பொருள்கள் வரை எல்லா வற்றுக்கும் சொப்பிங் பை பயன்படுத்தப்படுவதனால் வீடுகளில் இவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதேபோல கல்வி நிலையங்களிலும், அரச அலுவலகங்களிலும் அக்காலங்களில் உருவாக்கப்பட்ட கழிவுகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அவை இலகுவில் அகற்றக் கூடியதாக இருந்தன. 2006 ஆம் ஆண்டு மீண்டும் ஏ-9 கண்டி வீதி மூடப்பட்டது. தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள், அதாவது 2009 வரை கடற் பயணத்தினூடாகவே பொருள்கள் கொண்டுவரப்பட்டன. இதனால் பொருள்களின் நுகர்வு மீண்டும் வரையறுக்கப் பட்டிருந்தது. 1998இல் இருந்து 2009 வரையான காலங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களில் தேர்தல்கள் இடம் பெற்று ஆட்சியமைக்கப்பட்டாலும், இந்த நிறுவனங்களுக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி வரையறுக்கப்பட்டிருந் தது. இதனால் கழிவகற்றல் செயற்பாடும் வரையறுக்கப்பட்டிருந்தது.

இந்தக் காலத்தில் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்க அவற்றைக் கொட்டுவதற்காக காக்கை வெளிப் பிரதேசம் இலக்குக் கொள்ளப்பட்டு இன்று வரை தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருகின்றது. உண்மையில் யாழ்ப்பாண மாநகரசபை கழிவகற்றலை மேற்கொள்வதில் பெரிய சவால்களை எதிர்நோக்கிவருகின்றது.

கட்டுரையாளர்,
ஒரு சுற்றுச் சூழலியல் ஆய்வாளராவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிகாரம்

காலத்தைக் காட்டும் கடிகாரம் – எம்
கடமையை உணர்த்தும் அது நாளும்!
சீலமாய் நேரம் எடுத்துரைத்து – நாம்
சீக்கிரம் எழுந்திட மணியடிக்கும்

வட்டமாய்ச் சுற்றிடும் இருவீரர் – தினம்
வந்துமே நேரத்தைக் காட்டிடுவர்!
கட்டிய கையில் இருந்தபடி – ஓடும்
காலத்தைச் சொல்லி உதவிடுவர்!

சோம்பலில் உறங்கும் மனிதர்களை – மிகச்
சுருக்காக விழித்திட வைத்திடுவர் – உடன்
கூம்பிய இரவின் அளவறிய
கூப்பிட்டு நம்மை எச்சரிப்பர்

அழகிய நிறங்களில் இருந்திடுவர் – நம்
ஆவலைத் தூண்டி மகிழ்ந்திடுவர்
நேரம் பேணிட எமக்கெல்லாம் – அவர்
தினமும் நினைவு படுத்திடுவர்!

அறிவுத்திறனும், உடற்பலமும்

ஒரு முதலாளி, தனக்குச் சொந்தமான பரந்த இடம் முழுவதிலும் தென்னங்கன்றுகளை நட வேண்டும் என்று முடிவு செய்தார். தென்னங் கன்றுகளை நடுவதற்குக் குழிகள் வெட்ட வேண்டிய வேலையை ரங்கன் என்பவனிடம் ஒப்படைத்தார்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நன்றாக உழைத்து நிறையச் சம்பாதித்துவிட வேண்டும் என்று நினைத்தான் ரங்கன். ஏனென்றால், அவன் தனது மகளின் திருமணத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் காசு சேர்த்து வந்தான். இன்னமும் போது மான அளவு பணம் சேர வில்லை.

ரங்கன், முதல் நாளில் இருபது தென்னங் கன்றுகளை நடுவதற்கு குழிகள் தோண்டினான். அவன் உழைப்பைக் கண்டு முதலாளி அவனை மிகவும் பாராட் டினார். பிறகு, ஒவ்வொரு நாளும் அவன் தோண்டுகிற குழிகளின் எண்ணிக்கை குறைந்து வரத் தொடங்கியது. நாற்பதாம் நாளில் அவன், காலையிலிருந்து மாலை வரை எவ்வளவோ முயன்றும் இரண்டு குழிகள்தான் தோண்ட முடிந்தது. இதனால் ரங்கன் மிகவும் ஏமாற்றமடைந்தான்.

முதல் நாளின்போது இருபது குழிகள் தோண்டியவன் நாற்பதாம் நாளில் இரண்டு குழிகள் தோண்டுகிறானே, இவனுக்கு என்ன ஆயிற்று? என்று முதலாளியும் குழம்பினார். அவர் ரங்கனின் மண்வெட்டியை வாங்கிப் பரிசோதித்துப் பார்த்தார். மண்வெட்டியின் முனை கூர் மழுங்கியிருந் தது. அவர் ரங்கனிடம் கேட்டார்:

"நீ உன் ஆயுதத்தைக் கூர்தீட்டி நன்றாக வைத்துக் கொண்டால் என்ன?" இதற்கு ரங்கன் சொன்னான்:

"இதற்கெல்லாம் எனக்குக் கொஞ்சம்கூட நேரமே இல்லை ஐயா! நான், நாள் முழுவதும் சிறிதும் ஓய்வெடுக்காமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன். நிறைய வேலை செய்து நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டுமே!"

அப்போது முதலாளி: "ரங்கா, இந்த மண்வெட்டியைப் போலத்தான் நாமும். எம் அறிவுத்தி றனும், உடற் பலமும் மழுங்கிவிட்டால் நம்மால் எதுவுமே செய்யமுடியாது. எமக்கு எவ்வளவோ கடமைகள் இருக்கலாம். நிறைய உழைக்க வேண்டி வரலாம். ஆயினும் எம் உடலையும், ம னதையும், அறிவையும் எப்போதும் பேணிக் கூர்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் எம்மால் நிறையச் சாதிக்க முடியும். எம் இலக்கை விரைவில் அடைய முடியும்!" என்று சொன்னார்.

வரலாற்றில் இன்றைய தினம்

1654 - பதினான்காம் லூயிஸ், பிரான்ஸின் அரசராக முடி சூடிக் கொண்டார்.

1832 - ஐரிஷ் குடியேற்ற வாசிகளால் லோவர் கனடாவுக்குக் கொண்டுவரப்பட்ட ஏசியன் கொலராவால் கியூபெக் மாகா ணத்தில் 6000 பேர் சாவடைந்தார்கள்.

1862 - அமெரிக்காவும், ஐக்கிய ராச்சியமும் அடிமை வர்த்தகத்தை நசுக்குவதற்கு உடன்பட்டன.

1863 - மெக்ஸிக்கோ மீதான பிரான்சின் தலையீட்டின்போது மெக்ஸிகோ நகர் பிரான்ஸ் படைகளால் கைப் பற்றப்பட்டது.

1866 - 1500 பேனியன் கொள்ளையர்கள் கியூபெக் ஆர்மன்ட் மற்றும் பிஹலி பேர்க்ஸ் பகுதியில் கொள்ளை மற் றும் களவுகளில் ஈடுபட்டபோது திரும்பவும் அமெரிக்காவுக்கு விரட்டப்பட்டனர்.

1893 - தனது முதலாவது சட்ட மறுப்புச் செயற்பாட்டில் மோக னதாஸ் காந்தி (மகாத்மா காந்தி) ஈடுபட்டார்.

1905 - சுவீடனுடனான தனது ஐக்கியத்தை நோர்வே நாடாளுமன்றம் நீக்கியது. அதே ஆண்டில் அது தொடர் பான மக்கள் கருத்துக்கணிப்பில் அது உறுதி செய் யப்பட்டது.

1917 - முதலாம் உலகப் போர்: கூட்டுப்படைகளால் ஜேர்மன் மெஸ் ஸைன்ஸில் பதுங்குகுழிகளில் மேற்கொள்ளப் பட்ட அமோனல் கண்ணிகள் வெடிக்க வைக்கப்பட்டதில் 10,000 ஜேர்மன் துருப்புக்கள் கொல்லப்பட்டனர்.

1938 - இரண்டாம் சீன - ஜப்பான் போர்: சீன தேசிய அரசு ஜப்பானியப் படைகளைத் தடுத்து நிறுத்த மஞ்சள் நதி வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியதில் 500,000 தொடக்கம் 900,000 வரையான குடிமக்கள் இறந்தனர்.

1942 - இரண்டாம் உலகப் போர்; அலாஸ்காவுக்கு அப் பால் அமெரிக்கத் தீவுகளான அட்டு மற்றும் கிஸ்கா தீவுகளை ஜப்பானிய அரச படைகள் ஆக்கிரமித்தன.

1944 - இரண்டாம் உலகப் போர்; 350 கிறட்டன் யூதர்களையும் 250 கிறட்டன் ஆதரவாளர்களையும் ஏற்றிச் சென்ற டானீ நீராவிக் கப்பல் சன்ரோறினி எனும் இடத்துக்கு அப்பால் மூழ்கியதில் ஒருவரும் தப்பிப் பிழைக்க வில்லை.

1967 - ஜெருசலேமினுள் இஸ்ரேல் படைகள் நுழைந்தன.

1975 - உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் தொடக்கி வைக்கப்பட்டது.

1977 - இரண்டாம் எலிசபெத் மகாராணியின் வெள்ளி விழா நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் 500 மில்லியன் மக்கள் பார்த்தனர்.

1981 - ஈராக்கின் அணு உலையை 'ஒபேரா' நடவடிக்கையின் போது இஸ்ரேலிய விமானப்படை அழித்தது.

1990 - ஓர்லான்டோ புளோரிடாவில் யூனிவேர்சல் ஸ்ரூடியோ புளோரிடி திறந்து வைக்கப்பட்டது.

1992 - தடுப்புக் காவலில் உள்ளோர் உயர்நீதி மன்றுக்கு மனுச் செய்யலாம் என இலங்கை ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

2000 - இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் எல்லை யாக புளூலைன் ஐக்கிய நாடுகள் சபையால் நிர்ணயம் செய்யப்பட்டது.

2004 - பனை அபிவிருத்தி தொடர்பான ஆய்வில் யாழ்.பல் கலைக்கழகம் ஈடுபடாதது துரதிர்ஷ்ட வசமானதென செய்தியாளர் சந்திப்பில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சிவதாசன் குற்றச்சாட்டு.

2004 - பி.பி.ஸி. செய்தியாளர் ஒருவர் சவூதியில் சுட்டுக்கொலை; மற்றொரு செய்தியாளருக்குக் காயம்.

2013 - சீனாவில் பஸ் ஒன்று தீப்பிடித்ததில் 47 பேர் உயி ரிழந்தனர். மேலும் 34 பேர் காயமடைந்தனர்.

வர்ணம் தீட்டுவோம் வாங்க....



பொன்மொழிகள்

1.நல்ல வாழ்க்கை நடத்துவதற்கு நல்ல பண்புகளை முறையாகப் பெற்றிருக்கவேண்டும்.
– வில்லியம் பிளேக்.

2. எக்கணமும் சுறுசுறுப்பாக இருப்பவர்களிடம் திறமைகள் தாமே வந்து ஒட்டிக்கொள்ளும். தங்களுக்குச் சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் மட்டுமே நிலையான புகழை ஈட்ட முடியும்.
– ஹெரால்ட்.

3. செயற்படும்போது அதற்குத் தேவையான சக்தி கிடைக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அந்த நினைவில் உங்களுடைய சிந்தனையையும் செயலினையும் ஒருமுகப்படுத்துங்கள். வெற்றி நிச்சயம் உண்டு.
– எம்.ஆர். காப்மேயர்.

4. உலகில் எப்படி வாழ்வது என்பதையாவது தெரிந்துகொள்ளும் அளவுக்கு உன்னை நீயே அறிந்து கொள்; அதுவே வாழ்க்கையில் நீ அடையத்தக்க பெரும் பேறு.
– ஜேம்ஸ் டக்ஸில்.

5. உன் மேல் அன்பு செலுத்துகிறவர்களை நேசி. உன் மீது கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி.
– அன்னை தெரேசா.

6. ஒருமுறை குத்திய அனுபவம் காடளவு எச்சரிக்கைக்குச் சமம்.
– வோயாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு சமயத்தவர்களும் ஆசிபெற்ற மார்க்கண்டு சுவாமிகள்

ந.சண்முகராசா

ஈழநாடு செய்த தவப்பயனாக அவதரித்த சித்தர் பரம்பரையில் கடையிற் சுவாமிகளுக்கு அடுத்த படியாகக் கருதப்படுபவர் செல்லப்பா சுவாமிகள். இவரைத் தேரடிச் சுவாமிகள் என்றும் அழைப்பர். செல்லப்பா சுவாமிகளின் சீடராக யோகர் சுவாமிகள் விளங்கினார். இவரது முதன்மைச் சீடராக மார்க்கண்டு சுவாமிகள் இருந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே பிரான்பற்று எனும் ஊரில் விளம்பி வருடம் தைத்திங்கள் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை (29.01.1899) பூர நட்சத்திரத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் சரவணமுத்து. தாயார் பெயர் சின்னக்குட்டி அம்மையார், மார்க்கண்டு சுவாமிகளுக்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர். சுவாமிகள் ஆரம்பக் கல்வியை பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும், வடலியடைப்பு சைவ வித்தியாலயத்திலும் கற்றுப் பின்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் கற்று, கேம்பிறிஜ் சீனியர் தேர்வில் சித்தியடைந்ததுடன், அவரது பாடசாலைப் படிப்பு முற்றுப்பெற்றது.



மார்க்கண்டு சுவாமிகள் தனது ஊரில் அமைந்துள்ள முருக மூர்த்தி ஆலயத்தில் சிவத்தொண்டுகள் செய்து திருமுறைப் பாடல்களைப் பாடிப் பிரார்த்தனைகளில் ஈடுபடுவார். இந்தக் காலப்பகுதியில் சுவாமிகளுக்கு தியத்தலாவை நிலஅளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் தொழில் கிடைத்தது. நேரத்துக்கு அலுவலகத்துக்குச் செல்லுதல், அன்றாட வேலைகளை அன்றன்றே செய்தல், செவ்வனே செய்தல் ஆகிய தொழில் சீர்த்துவம் தொடக்கத்திலேயே அவரிடம் தெரியலாயிற்று. சத்தியம், சாந்தம், இன்முகம், பரோபகாரம் எனும் பண்புகளால் ஒரு நல்லவராக மற்றையோரால் மதிக்கப்பட்டார். சுவாமி பணத்தைப் பெரிதாக மதிக்கமாட்டார். உத்தியோக உயர்வுகளையும் பெரிதாக மதியாது பிரம்மச்சாரிய விரதத்தின் பெருமை பெரிது எனும் திடசித்தம் வாய்ந்தவர். விடுமுறை நாள்களில் தனது சொந்த ஊரான பிரான்பற்றுக்கு வருகைதந்து பெற்றோரைப் பேணினார். சகோதரிகளின் திருமணச் சடங்கை நிறைவேற்றினார். கோயில் திருப்பணி, பாடசாலை மற்றும் வாசிகசாலை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார். மறுபக்கத்தில் உத்தியோகம் உட்பட சகலவற்றையும் இறைவனை அடைவதற்காக உபயோகிக்கும் உறுதியையும் உடையவர் ஆனார். காலையிலும், மாலையிலும் தியானம் செய்தல் வேண்டும் என்ற ஒழுங்கைத் தவறாது மேற்கொண்டார். இந்தக் காலப்பகுதியில் தான் யோகர் சுவாமிகளின் தொடர்பு மார்க்கண்டு சுவாமிகளுக்குக் கிடைத்தது. தெய்வ சித்தம் எந்தவித சிவத்தொண்டுக்காக அவரைத் தோற்றுவித்ததோ, அந்தத் தொண்டை நிறைவு செய்வதற்குரிய பயிற்சிகள் அவருக்குக் கிடைத்தன. குருநாதரான யோகர் சுவாமிகள், தனது சீடரான மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆன்மிகப் பயணம் தொடர்பானவற்றைத் தாயினும் இனிய பரிவுடன் சொல்லாலும், செயலாலும் இடையிடையே திருமுகங்கள் மூலமாகவும் உணர்த்திய பின்னர் அவரைச் சுயமாக இயங்கவிட்டார்.

மார்க்கண்டு சுவாமிகள் தியத்தலாவையில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு மாநகரில் சிறிது காலம் தொழில் புரிந்தார். இந்தக் காலப் பகுதியில் கல்விமான்கள் நடத்திய சைவசித்தாந்த வகுப்புக்களுக்கும் சென்று வந்தார். சுவாமிகள் தமது 50 ஆவது வயதில் தனது உத்தியோகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு கொழும்பில் இருந்து நேரடியாகக் கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் குடிகொண்டிருந்த கொட்டிலை வந்தடைந்தார். குருநாதரான யோகர்சுவாமிகள் அவரை ஏற்று வண்ணார்பண்ணையில் ஒரு வீட்டில் தங்க வைத்தார். பின்னர் கைதடி ஊரில் ஆசிரியர் விசுவலிங்கம் வீட்டில் அமைந்திருந்த குடிசையில்1950ஆம் ஆண்டு மார்கழி மாதம் 29 ஆம் திகதி மார்க்கண்டு சுவாமிகளைத் தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமிகளும் அந்த ஆச்சிரமத்தில் தங்கியிருந்து உயர்ஞான சாதனையில் ஈடுபட்டார். சில வேளைகளில் யாழ்ப்பாணத்திலுள்ள சிவதொண்டன் நிலையத்துக்கும் சென்று வருவார்.

யோகர்சுவாமிகள் சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சாந்த சுவாமிகள்) சில காலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்க வைத்து இராம்ஸ போதத்துக்கு அருளுரைவழங்குமாறு கூறினார். சோல்பரிப் பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகள் மீது ஒரு மகனைப்போல அன்பு செலுத்தி, எந்த வித வசதிகளையும் எதிர்பாராது ஒரு தொண்டனாகவும் தோழனாகவும் இருந்து சாதனையில் ஈடுபட்டார். அமெரிக்கத் துறவியான சுப்பிரமுனிய சுவாமி, ஜேர்மன் சுவாமி, ஆஸ்திரேலிய பன்றிக்குட்டி சுவாமிகள் உட்பட பல சமயத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்கண்டுசுவாமிகளிடம் அருளாசிபெற்று வந்தார்கள். சில பௌத்த துறவிகள்கூட மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்க அடிக்கடி வருவார்கள்.

மார்க்கண்டு சுவாமிகள் தமது இறுதிக் காலத்தை உணர்ந்து தம்முடன் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்திடம் அவரது உறவினரைப் பார்க்க இங்கிலாந்து செல்லுமாறு கூறினார். அதன்படி அவரும் இங்கிலாந்து சென்றார். மார்க்கண்டு சுவாமிகள் தனது இறுதி நாள்களில் குளிப்பு முழுக்கு முதலியவற்றைக் கைவிட்டதோடு உணவையும் சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சி அடைந்து இருந்தபோது மருத்துவர் யோகு பசுபதி பார்வையிட வந்தபோது தமக்கு எந்தவித வருத்தமும் இல்லை எனக் கூறிப் பார்வையிட அனுமதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகள் இவ்வாறு இருந்து இரத்தாசி வருடம் வைகாசி மாதம் பதினாறாம் நாள் செவ்வாய்க்கிழமை (29.05.1984) நண்பகல் 12 மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் சிவன் திருவடி சேர்ந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அவரது உடன்பிறந்த சகோதரியின் பேரனால் மார்க்கண்டு சுவாமிகள் சபை அமைக்கப்பட்டுள்ளது. சபை அமைந்துள்ள காணியில் மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆலயம் அமைக்கப்பட்டு அடியார்கள் வழிபட்டு வருகின்றார்கள்.

மார்க்கண்டு சுவாமி சபையால் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் இலவசமாக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். சபையால் மார்க்கண்டு சுவாமிகள் இந்து அற நெறிப்பாடசாலையும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் சமூகப் பணிகள், சமயப்பணிகள், கலாசாரப் பணிகள் போன்ற பல பணிகள் சபையால் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது.

மார்க்கண்டு சுவாமிகள் சபை,
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

அபாயம் சொன்னவனிடமே உபாயம் கேட்கலாமா...? அவதானம் வேண்டும்..!

அபாயம் சொன்னவனே உபாயமும் சொல்வான் என்ற நம்பிக்கையுடன் தமிழர்கள் வரும் காலங்களை அவதானத்தோடு எதிர்கொள்ளவேண்டும்; எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். வஞ்சகமனத்தானின் உபாயமும், அபாயம் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அதனை முறியடிக்கும் இராஜதந்திரம் எனும் ஆயுதத்தைப் பிரயோகிக்கும் வலுவை நாம் அதிகம் கொண்டிருக்கவேண்டும், வலுப்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லாது போனால் உபாயங்களை நம்பியிருந்தே அழிவைச் சந்திக்க நேரிடும். இதனைத் தமிழர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

குளக்கரையோரமாக வயதான கொக்கு ஒன்று ஒற்றைக் காலில் விசனத்துடன் நின்றிருந்தது. அலைகளின் இடையே மேலெழுந்து துள்ளிக் குதித்திருந்த மீன்களில் ஒன்றுக்கு, வழக்கத்திற்கு மாறான கொக்கின் செயல் நிலைகளில் சந்தேகம் வந்தது. எம்மைச் சும்மா விடாதே இந்தக் கொக்கு, ஆனாலும் இன்று செயலற்று நிற்கின்றதே. என்னவாக இருக்கும், அதுனிடமே கேட்டால் என்ன என்ற எண்ணத்தோடு கொக்கின் முன் வந்து நின்றது. "என்ன கொக்காரே..! உமது ஆகாரத்தைக் கொத்தாமல் சும்மா நிற்கின்றீர்..?" என்றது. "நான் மீனைக்கொத்தி இரையாக்குபவன்தான். ஆனால் இன்று எனக்கு மனசு சரி இல்லை" என்றது கொக்கு. "மனசு சரி இல்லையா.. ஏன்..?" என்றது மீன். "அதை ஏன் கேட்கிறாய்.." என்று கூறி விடயத்தைத் தவிர்க்கப் பார்த்தது கொக்கு. "இருக்கட்டும் சொல்லுங்களேன்" என்றது மீன். "சொன்னால் உனக்குத் திக் என்றாகும்" என்றது கொக்கு. மீனுக்கு நெஞ்சம் படபடத்தது. "சொன்னால் தானே தெரியும்" என்றது மீன். "வற்புறுத்திக் கேட்பதாலே சொல்கிறேன்.." "கரை வலை கொண்டு மீனவன் ஒருவன் வருகிறான்" என்றது கொக்கு. பதறிப்போன மீன் உள்ளே சென்றது. சில நிமிடங்கள் தாமதமாக ஒன்று சேர்ந்து வந்த பல மீன்கள் அலைமீது துள்ளிக் குதித்தன. ஒன்றாக இணைந்தபடி "கொக்காரே! நீர்தான் எங்களையெல்லாம் இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றவேண்டும் எனக் கெஞ்சிக் கேட்டன. அபாயம் சொன்னவனே, உபாயமும் சொல் வான் என்ற நம்பிக்கையின்வழி அவை இந்த உதவியைக் கேட்டன.

"நான் என்ன செய்வேன்? மீனவனோடு சண்டை போட முடியாது. வயதானவன் நான். வேண்டுமென்றால் உங்கள் அனைவரையும் இந்தக் குளத்திலிருந்து வேறொரு குளத்திற்கு இடம் மாற்றுகிறேன். இந்தத் தள்ளாத வயதில் உதவி புரிந்ததற்காக பரோபகாரி என்ற பெயரையாவது நான் பெற்றுக் கொள்வேன். நீங்களும் பிழைத்துக் கொள்வீர்கள்" என்றது கொக்கு.

மீன்கள் எல்லாம் தத்தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கொக்கின் பேச்சை நம்பின. ஒருமித்த குரலில். "அபாயத்தை அறிந்து சொன்ன நீங்களே உபாயத்தையும் தெரிந்து சொல்கிறீர்கள்; அப்படியே செய்யுங்கள்" என்றன மீன்கள்.

கொக்காருக்கு கசக்குமா இந்தக் காரியம்..? நடைக்கு ஒவ்வொன்றாக மீன்களைக் கௌவிக் கொண்டு சென்றது. சில மீன்களைத் தின்றது, ஏனைய மீன்களைப் பாறையில் உலர வைத்தது. இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் குளத்திலிருந்த நண்டு ஒன்றும் கவனித்துக்கொண்டது. மீன்களைப் போன்று வேறு குளத்திற்குச் செல்ல ஆசை பிறந்தது. "ஓ! ஜீவ காருண்யனே..! என்னையும் காத்தருள வேண்டும்" எனக் கெஞ்சியது நண்டு. ஏற்றுக் கொண்ட கொக்கும் நண்டைக் கௌவிக்கொண்டு பறந்தது.

இந்த சந்தர்ப்பத்தில் போகும் பாதையில் மீன்களின் முள்ளுடல்கள் ஆங்காங்கே சிதறி இருப்பதைக் கண்டு கொண்டது நண்டு. பதைபதைத்துப் போன நண்டு, கொக்கின் வஞ்சகத்தைச் சட்டென்று புரிந்துகொண்டது. வைரத்தை வைரத்தால் அறுப்பதுபோல் மூளை வேலை செய்தது. தப்பிக்க உபாயம் ஒன்றைக் கண்டு கொண்டது. "கொக்காரே..! என்மேல் இரக்கம் கொண்டு அழைத்துச் செல்வதற்கு நன்றி. என் உறவினர்கள் பலரும் ஆபத்திலிருப்பதை மறந்து விட்டேன். அவர்களையும் காப்பாற்றவேண்டும். என்னை மீண்டும் அழைத்துச் செல். அவைகளைக் காண்பிக்கிறேன்" என்றது நண்டு. அப்படியா..! அதிர்ஷ்டம் என்றால் இப்படித்தான் வரவேண்டும்; என்பாடு யோகம்தான் என்று பெருமிதம் கொண்டது கொக்கு. மீண்டும் நண்டைக் கௌவிக்கொண்டு குளத்தை நோக்கிப் பறந்தது. அதுவரை மௌனமாக இருந்த நண்டு தன் கொடுக்கை ஆயுதமாக்கியது. கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக்கியும் விட்டது. குளத்து நீரில் பாய்ந்து உயிர் பிழைத்தும் கொண்டது. அபாயம் சொன்னவனிடமே உபாயம் கேட்ட மீன்கள் செத் தன. வஞ்சகமனத்தானின் உபாயமும் அபாயமே என்றறிந்து கொக்கைக் கொன்றுவிட்ட நண்டு பிழைத்தது..!

தமிழர்களுக்குத் தீர்வு வேண்டுமென்ற கருத்துக்களின் முடிவிடை நல்லிணக்கப் பொறிமுறை என்ற உபாயங்கள் தொடர்பில் அமர்வுகளின் போது மட்டும் பேசி அசலாக அல்ல, நிழலாக ஊசலாடித் திரிகின்றனர்.

ஆக, உபாயங்களில் உள்ள அபாயங்களைப் புரிந்து நடக்க வேண்டியது தமிழர்கள் அனைவரதும் கடமை. மடமைத்தனமாக இருந்து விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்: கஷ்டமான சூழ்நிலையைத் திறம்படச் சமாளிப்பீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கக் கூடுதல் பணிபுரிவீர்கள். வருமானம் சீராக இருக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

இடபம்: சிலரது பேச்சு உங்களைச் சங்கடப் படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கடின உழைப்புத் தேவைப்படும். நிலுவைப் பணம் கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

மிதுனம்: நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கத் தேவையான பணியை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த இலாபம் வரும். அரசியல்வாதிகளுக்கு பதவி பெற அனுகூலம் உண்டாகும்.

கடகம்: சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை மாறும். இலாபம் சீராகும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கலாம். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

சிங்கம்: பலரும் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

கன்னி: புதிய செயல்களில் உத்திகள் உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். நிலுவைப்பணம் கிடைக்கும். நண்பர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

துலாம்: திட்டமிட்ட செயலை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்கள் குடும்பச் செலவுக்காகக் கடன் வாங்குவர். உடல்நலனில் அக்கறை தேவை.

விருச்சிகம்: செயலில் புதிய நெருக்கடி உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான மாற்றம் உண்டாகும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து செல்வது நல்லது.

தனுசு: மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூலம் உண்டாகும். ஆதாயம் பன்மடங்கு உயரும். வழக்கு விவகாரத்தில் சாதகத் தீர்வு உண்டாகும்.

மகரம்: சிறு செயலிலும் முழு அளவில் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். கூடுதல் மூலதனம் செய்து இலாபம் காண்பீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.

கும்பம்: சங்கடமான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். சீரான ஓய்வு உடல் நலனைப் பாதுகாக்கும்.

மீனம்: மாறுபட்ட சூழலை சமாளிக்க திணறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படலாம். இலாபம் சுமார். பெண்கள் குழந்தைகளின் பிடிவாதம் கண்டு வருந்துவர். ஆரோக்கியம் பலம் பெறும்.

பெண் குழந்தை எளிதில் கிடைக்கக் கூடியது
எளிதில் உதாசீனப் படுத்தப்பட்டு விடும்!!!

யாரோ ஒருவருக்காக கவலைப்படுவதற்கு முன்பு நினைத்துப் பாருங்கள் உங்கள் உடன் இருக்கும் உறவுகளை.

எதிர்பார்த்த அனைத்தையும், ஏமாற்றாமல் தருவது!... 'கனவுகள்' மட்டுமே

ஆசிரியர்: அமெரிக்கா எங்கே உள்ளது?
மாணவன்: தெரியாது சார்!
ஆசிரியர்: மேசைக்கு மேல் ஏறி நில்லுடா..!
மாணவன்: ஏறி நின்றால் தெரியுமா சார்?

விஜயின் 60ஆவது படம்

"தெறி" படத்தையடுத்து விஜய் தனது 60 ஆவது படத்தில் நடித்து வருகிறார். "அழகிய தமிழ் மகன்" பட இயக்குநர் பரதன் இந்தப் படத்தை இயக்கி வருகிறார். படத்துக்கு இன்னும் பெயர் வைக்கப்படவில்லை. சென்னையில் படப்பிடிப்பு முடிந்து, அடுத்த கட்டப் படப்பிடிப்பு ஐதராபாத்தில் நடக்கிறது. சமீபகாலமாக விஜய் நடிக்கும் படங்களுக்கு பெயர் வைப்பதற்கு நீண்ட ஆலோசனை மேற்கொள்ளப் படுகிறது.

படப்பிடிப்பு முடிந்த பிறகே பெயர் தெரிவு செய்யப்படுகிறது. முதலிலேயே பெயர் வைத்தால் அது தங்களுக்குச் சொந்தம் என்று சிலர் சர்ச்சையைக் கிளப்புவதுதான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இதற்கிடையில் விஜய் படத்துக்கு வெவ்வேறு தலைப்புக்களுடன் தகவல்கள் இணையத்தளங்களில் உலா வருவது வழக்கமாகி வருகிறது. விஜய் நடிக்கும் 60ஆவது படத்துக்கு எம்.ஜி.ஆர். நடித்த "எங்க வீட்டு பிள்ளை" தலைப்பு வைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது. இதற்கு படக் குழு மறுப்புத் தெரிவித்துள்ளது. "எங்க வீட்டுப் பிள்ளை படத்துக்கும் விஜய்யின் 60 ஆவது படத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், "படத்தின் பெயர் விஜய் பிறந்த நாளில் வெளியாகும்" என்றும் தெரிவித்துள்ளனர்.

சுடோக்கு எண் விளையாட்டு

	5			8			3	
1	6				5		7	4
			9				6	
	4			7		1		2
5		1		6			4	
	7				8		1	
4	1		7				2	3
	3			1			9	

நேற்றைய சுடோக்கின் விடை

4	2	8	5	7	3	6	9	1
7	1	5	9	6	4	3	2	8
3	6	9	1	8	2	4	7	5
5	3	2	4	9	8	7	1	6
8	4	6	7	5	1	9	3	2
9	7	1	2	3	6	5	8	4
6	5	3	8	2	7	1	4	9
2	9	4	3	1	5	8	6	7
1	8	7	6	4	9	2	5	3

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்)

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக் கலவை

தேவையானவை

அப்பிள் - பாதி
துருவிய தேங்காய் - ஒரு கரண்டி
சீனி - ஒரு கரண்டி
வாழைப்பழம் - ஒன்று
கெட்டித் தயிர் - ஒரு கோப்பை
உலர்திராட்சை - ஒரு கரண்டி
பாதாம் - முந்திரி துருவல் - ஒரு கரண்டி
நறுக்கிய பேரீச்சை - ஒரு கரண்டி

செய்முறை

அப்பிளைத் தோல் சீவி வெட்டிக் கொள்ளவும். வாழைப்பழத்தை வட்டமாக நறுக்கவும். கடைந்த கெட்டித் தயிரில் சீனி சேர்த்து, கொடுக்கப்பட்டுள்ள மற்ற அனைத்து பொருள்களையும் சேர்த்துக் கலக்கினால்... மிகச் சுவையான பழப் பச்சடியைத் தயாரிக்கலாம்.

நாளை

வைகாசி-26
புதன்கிழமை - 08.06.2016
திதி: சதுர்த்தி பி.இ.03.45 வரை
நட்சத்திரம்: பூரநட்சத்திரம் மு.ப.11.37 வரை
ராகுகாலம்: 11.52-01.22 வரை
சுபநேரம்: 04.22-05.52 வரை
சதுர்த்தி விரதம்

நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

	மாட்டுமாணம்	மடுவன்	கிளிஞ்சல்	கொழும்புத்துறை	மருதங்கேணி	காரைநகர்	பருத்தித்துறை
இறால்	600	700	600	800	800	1000	800
நண்டு	250	400	300	450	400	300	800
கணவாய்	600	600	500	500	400	800	–
பாரை	550	600	500	600	500	600	–
சுறா	500	700	600	800	1000	–	–
சீலா	300	500	400	500	500	300	–
விளை	650	600	400	500	500	700	450
முரல்	300	400	350	400	400	300	400
கும்பிளா	400	400	300	450	500	500	–
கிளாக்கன்	800	1000	–	–	600	600	–
ஓரா	400	400	–	–	450	–	400
திரளி	300	300	200	200	400	200	400
நகரை	250	300	–	250	400	250	380
சூடை	150	200	100	200	200	150	–
ஒட்டி	300	300	150	250	350	250	–
திருக்கை	150	400	200	400	400	300	220
மதனம்	150	300	180	300	400	–	300
கொய்	100	200	60	80	100	100	–
பாலை	400	300	250	350	400	300	–
வாழை	100	200	200	400	300	–	–

அட்டகாசமான வீட்டுக் குறிப்புகள்

- அந்துப்பூச்சி வராமலிருக்க நெல் மூடையைச் சுற்றிலும், அதன் இடுக்குகளிலும் புங்கை இலை, நொச்சி இலை, வேப்பம் இலைகளைப் பறித்துப் போட்டு வைக்கவும்.
- பயறு வகைகளைச் சிறிது தேங்காய் எண்ணெய் சேர்த்து கிளறி வைப்பதால் அவை பல நாள்கள் வரை புழுத்துப் போகாமல் இருக்கும்.
- புளியை நீண்ட நாள்கள் வைத்துக்கொள்ள, பானையில் போட்டு வைக்கவும். பானையின் அடியில், புளியைப் போட்டு அதன் மேல் கொஞ்சம் உப்பைத் தூவினால் புளி கெடாமல் இருப்பதோடு, காய்ந்து போகாமலும் இருக்கும்.
- மாங்காய், எலுமிச்சம்பழம் போன்றவற்றை நீண்ட நாள்கள் பாதுகாக்க வேண்டுமாயின் நறுக்கி, வெயிலில் காய வைத்து வற்றல் போல் உலர்த்திக் கொள்ளவும். பின் எப்போது ஊறுகாய் வேண்டுமோ அப்போது வெந்நீரில் ஊற வைத்து ஊறுகாய் மாதிரி உபயோகிக்கலாம்.
- தேங்காய் எண்ணெய்யில் சுத்தமான உப்புக் கல்லைப் போட்டு வைத்தால், பல நாள்கள் கெடாமல் இருக்கும்.
- தோசைக்கு, இட்லிக்கு ஆட்டும்போது ஒரு வெண்டைக்காய் சேர்த்து ஆட்டினால் தோசை, இட்லி மிருதுவாக இருக்கும்.
- சோறு மிஞ்சி விட்டால், ஒரு பாத்திரத்தில் வெந்நீர் வைத்து, ஆவியில் சூடு பண்ணலாம். சோறு கொதிக்கும்போது மிஞ்சிய சோத்தையும் சேர்த்துப் போட்டு வேக வைக்கலாம்.
- காய்ந்து போன ரொட்டித் துண்டுகளை இட்லி பாத்திரத்தில் ஆவியில் அவித்தால் புதியது போலாகிவிடும்.
- போளி தட்டும் வாழை இலையின் பின்பக்கமாகத் தட்டினால் இலை சுருங்காமல் போளி நன்றாக வரும்.
- கொதிக்கும் பாலில் உடனே உறை ஊற்ற வேண்டுமாயின் ஒரு துண்டு வாழைப்பட்டையை நறுக்கிப் போட்டு மோர் ஊற்றவும். குளிர் நேரத்தில் தயிர் உறையாது. மின்சார அடுப்பில் பாத்திரத்தை வைத்தால் தயிர் விரைவில் உறைந்து விடும்.
- தீய்ந்த பாலில் சூடு ஆறமுன்னர் மிளகைத் தட்டிப் போட்டால் பாலின் ருசி மாறாமல் இருக்கும்.
- உப்புத்தூளை வறுத்து உபயோகித்தால், முட்டைக்குப் போட்டு சாப்பிட்டவுடனே யாக இருக்கும்.

நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

	பருத்தித்துறை	சாவகச்சேரி	கரவெட்டி	பொன்னாலை	அராலி	அரியாலை	கொழும்புத்துறை	பண்டிப்பு
முள்ளங்கி	–	–	120	160	120	–	40	80
கத்தரி	200	100	220	240	200–250	200	100	180
கரட்	180	160	160–300	220	240	250	100	140
மரவள்ளி	60	60	60	160	60	80	40	50
பயிற்றை	200	240	140	200	180	240	150	160
பாகல்	170	240	250	280	220	120	120	160
கருணைக்கிழங்கு	120	100	140	160	100	–	60	80
பெ.வெங்காயம்	80	80	80	80	80	100	75	80
சி.வெங்காயம்	140	140	160	160	150–180	200	100	140
பூசணி	50	50	60	60	70–80	60	15	80
தக்காளி	200	170	200	180	180–200	240	140	160
வாழைக்காய்	60	50	60	60	50–60	80	35	40
கீரை	40	50	50	20	40	40	25	50
பொன்னாங்காணி	40	40	30	350	30	–	20	12
பச்சை மிளகாய்	400	450	700	600	500–600	600	400	550
புடோல்	100	80	100	120	100–120	120	30	100
கோவா	140	160	180	160	160–180	240	90	140
வெண்டி	120	120	150	140	120–140	160	50	60
போஞ்சி	300	280	240	280	200–240	300	–	240
லீக்ஸ்	200	100	200	240	200–220	240	100	180
தேங்காய்	400	20	40	30–40	30–35	40	15–30	30
உருளைக்கிழங்கு	120	120	120	120	110–120	100	75	120
தேசிக்காய்	300	250	300	250	200	200	350	200
வல்லாரை	15	20	10	15	10–15	20	10	15
கறிமிளகாய்	200	240	220	240	250–300	240	–	200
இராசவள்ளி	160	170	200	160	–	–	110	120
முருங்கைக்காய்	400	130	200	180	200–240	200	150	200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலிங்கோ லைப்பின் ஆயுட்காப்புறுதி நிதி 28 வருடங்களில் 70 பில்லியனை தாண்டியது

சிலிங்கோ லைப், அதன் ஆயுட்காப்புறுதிநிதி 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாத முடிவில் 70 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது என்று அறிவித்துள்ளது. உள்ளூர் ஆயுட் காப்புறுதி நிறுவனம் ஒன்று 28 வருடகாலத்தில் இத்தகைய சாதனையை நிலைநாட்டியமை இதுவே முதற் தடவையாகும்.

நாட்டின் ஆயுட் காப்புறுதிச் சந்தை முன்னோடியான சிலிங்கோ லைப் இது பற்றித் தெரிவிக்கையில், 4 மாதங்களில் அதன் ஆயுட் காப்புறுதி நிதி 2.75 பில்லியன் ரூபாவால் அதிகரித்தமை, இவ்வளவு துரித கதியில் நிதி 70 பில்லியன் ரூபாவைத் தாண்டுவதற்கு உதவியது என்று தெரிவித்துள்ளது.



ஒரு ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் நிதிப் பலத்துக்கு அதன் ஆயுட்காப்புறுதி நிதியின் தொகை இன்றியமையாததாகும் என்று சிலிங்கோ லைப் முகாமைப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன் தெரிவித்தார்.

நிறுவனத்தின் மொத்தச் சொத்தும், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 4.3 சதவீதத்தினால் அதிகரித்து, இவ்வாண்டு ஏப்ரல் மாதமுடிவில் 83.6 பில்லியன் ரூபாவாக வளர்ந்துள்ளது என்றும், முதலீட்டுத் திட்டம் நான்கு மாதங்களில் 2.57 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது என்றும் சிலிங்கோ லைப் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தின் சந்தா வருமானத்தினால் பிரதிநிதித்துவப்பட்டபடி எமது முதலீடுகளின் தரம் எப்பொழுதும் எமது செயற்பாட்டுச் சக்தியை வலுப்படுத்தி வருகிறது என்று தெரிவித்த ரெங்கநாதன், 2016ஆம் ஆண்டுமுதல் நான்கு மாதங்களில் முதலீட்டு வருமானம் 2.49 பில்லியனைக் கடந்துள்ளது என்றும் கூறினார்.

30-04-2016இல் நிறுவனத்தின் முதலீட்டுத் திட்டம் அரசாங்க பிணையங்கள் (62 சதவீதம்), அனுமதிப்பத்திரம் பெற்ற தனியார் வங்கிகள் (7 சதவீதம்), அரசவங்கிகள் (1 சதவீதம்), காணி சொத்துக்கள் (8 சதவீதம்), கம்பனி கடன்கள் (21 சதவீதம்) ஏனைய முதலீடுகள் (1சதவீதம்) ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த முதலீடுகள் 2000ஆம்ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி தொழில் சட்ட பிரமாணங்களுக்கு அமைவாகவும் இலங்கை காப்புறுதிச் சபையின் ஒழுங்கு முறையான கண்காணிப்புக்கு உட்பட்டதாகவும் அமைந்துள்ளன.

1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட சிலிங்கோ லைப் 2004ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 12 வருடங்கள் இலங்கையின் ஆயுட் காப்புறுதித் துறையில் சந்தை முன்னோடியாக விளங்கி வருவதுடன், நிறுவனம் சுமார் ஒரு மில்லியன் செயலூக்க ஆயுட் காப்பீடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. உற்பத்திஆய்வு, அபிவிருத்தி, வாடிக்கையாளர் சேவை, தொழில்சார் விருத்தி, நிறுவன சமூக பொறுப்புணர்வுத் திட்டம் ஆகியவற்றில் அதன் பணிக்காக உள்ளூர் காப்புறுதித் துறையில் பல புதுமைத் திட்டங்களை கொண்டுவந்தது என்றும் பாராட்டப்பட்டுள்ளது. (தி)

ஐ.ஐ.எச்.எஸ். இடமிருந்து ஏராளமான வாய்ப்புகள்

சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற சிறப்புமிக்க மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புக்கள் பலவற்றை இலங்கை மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஐ.ஐ.எச்.எஸ் (International Institute of Health Sciences) நிறுவனம் நடவடிக்கை எடுத் துள்ளது.

IIHS
INTERNATIONAL INSTITUTE OF HEALTH SCIENCES

தாதியியல், இயல் மருத்துவம், உயிரியல் மருத்துவ விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய பாடத் துறைகளில் டிப்ளோமாவிலிருந்து பட்டப்பின்படிப்புவரை கல்வி கற்கும் வாய்ப்பை ஐ.ஐ.எச்.எஸ் நிறுவனம் எமது நாட்டு மாணவர்களுக்கு வழங்குகின்றது.

ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, மலேசியா போன்ற நாடுகளில் உள்ள உலக அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடத்தப்படுகின்ற மேற்படி பாடநெறிகளை இலங்கையிலும் மேற்குறிப்பிட்ட நாடுகளிலும் பூர்த்தி செய்ய முடியுமென்பதோடு, தான் விரும்பும் நாட்டில் தொழில் புரிவதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

சாதாரண தரப் பரீட்சையைத் தொடர்ந்து ஐ.ஐ.எச்.எஸ் நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கக்கூடிய இந்தப் பயணத்தில் உங்களுக்கு சுமார் 26 வயதில் பட்டப் பின் படிப்பை முடிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும். ஐ.ஐ.எச்.எஸ் நிறுவனத்துடன் இணைந்து பாடநெறிகளை மேற்கொள்வதற்கு சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தி (C) பெற்றிருக்க வேண்டுமென்பதோடு, அவ்வாறில்லாத மாணவர்களுக்கு ஐ.ஐ.எச்.எஸ் அறிமுகப்படுத்துகின்ற சிறப்பு அடிப்படை பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் மேற்படி பாடநெறிகளைக் கற்கின்ற வாய்ப்பைப் பெற முடியும்.

அதி சிறந்த ஆசிரியர் குழாமொன்றின் சேவையை வழங்கும் ஐ.ஐ.எச்.எஸ் நிறுவனம் மாணவர்களுக்கு உரிய முறையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வாய்ப்பையும் பாடங்களுடன் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றது. (தி)

வங்கிகளின் லீசிங் விதிமுறையில் மாற்றம்

வணிகம்

2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்த வங்கிகளுக்கு வாகன லீசிங் வசதியை வழங்க முடியாது எனும் பிரேரணையில் மாற்றத்தை ஏற்படுத்த இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாக சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வங்கிகளுக்கு வாகனங்கள் கொள்வனவுக்காக 5 மில்லியன் ரூபாவுக்கு உயர்ந்த தொகையை லீசிங் ஆக வழங்கமுடியும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வங்கிகளுக்கு லீசிங் சேவையை வழங்க முடியாது என 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் இந்தப் புதிய பிரேரணையின் பிரகாரம் நிதிசார் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு 5 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த தொகையை லீசிங் கொடுப்பனவாகவும் 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை வங்கிகளும் வழங்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்



டுவிட்டரை முந்தியஸ்னப்சட்

நண்பர்களுடனும், குடும்பத்தவர்களுடனும் இலகுவாக உரையாடல்களை மேற்கொள்ள உதவும் சமூக வலைத்தளச் சேவையான ஸ்னப்சட், பிரபல வலைத்தளமான டுவிட்டர் சேவையை முந்தி புதிய ஒரு சாதனை படைத்துள்ளது.

2006ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட டுவிட்டர் சேவை, 140 மில்லியன் நாளாந்த செயற்பாட்டு பயனர்களை கொண்டு செயற்பட்டு வருகின்றது. எனினும், ஸ்னப்சட் சேவையானது தற்பொழுது 150 மில்லியன் நாளாந்த செயற்பாட்டுப் பயனர்களை எட்டியுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் ஸ்னப்சட் 110 மில்லியன் நாளாந்த செயற்பாட்டு பயனர்களை கொண்டிருந்த நிலையில், ஆறு மாத குறுகிய காலப்பகுதியில் 150 மில்லியன் எனும் இலக்கை எட்டியுள்ளது.

அறிமுகம் செய்து நான்கு வருடங்களே ஆன நிலையில், ஸ்னப்சட் சேவை இந்த அளவுக்கு விரிவடைந்துள்ளமை, மக்கள் அதன்மீது கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

Microsoft

facebook

மைக்ரோசொப்ட் பேஸ்புக் கூட்டு முயற்சி

தொழில்நுட்ப உலகில் முன்னணியில் திகழும் மைக்ரோசொப்ட் நிறுவனமும், பேஸ்புக் நிறுவனமும் இணைந்து பெரும் இணைய வலையமைப்பு ஒன்றை உருவாக்கக் திட்டமிட்டுள்ளன.

இதன்படி அட்லாண்டிக் சமுத்திரத்தின் ஊடாக சுமார் 4 ஆயிரம் மைல் நீளம் கொண்ட வலையமைப்பை உருவாக்கவுள்ளன.

இந்த வலையமைப்பானது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் முகமாக உருவாக்கப்படவுள்ளது.

இதன் மூலம் 160 ரிபிபிஎஸ் (Tbps) எனும் வேகத்தில் தரவுகளைக் கடத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வலையமைப்பு உருவாக்கம் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவு செய்யப்படக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்துக்காக சுமார் 200 மில்லியன் டொலர் வரை முதலீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

போர்க்குற்ற

அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் முன்னெடுக்கவில்லை.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் கலப்பு நீதிமன்றத்தை இலங்கையில் நிறுவவேண்டும். அதுவே, போர்க்குற்ற விசாரணையின் அடித்தளமாகும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கையின் இணை அனுசரணையுடன் போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் தீர்மானம் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்டது. அன்று முதல் ஐ.நா. இலங்கைக்கு மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் அழுத்தம் கொடுப்பதை நிறுத்தியுள்ளது. இது நீதியைத் தாமதப்படுத்தும்.

எனவே, போர்க்குற்ற விசாரணையை நடத்தவும், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கவும் முதலில் கலப்பு நீதி மன்றம் நிறுவப்படவேண்டும். அதற்கு இலங்கை அரசுக்கு ஐ.நா. கடும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று 6 சிவில் அமைப்புகள் பப்லோ டி கிரீப்பிடம் வலியுறுத்தின - என்றார்.

இலங்கை அரசும், ஐ.நா.வும் நல்லிணக்கப் பொறிமுறைக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. போர்க்குற்ற விசாரணை தொடர்பில் அக்கறை காட்டவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் போர்க்குற்ற விசாரணையின் ஊடாகவே தீர்வு வரும் என்று நம்புகின்றனர் என்றும் இதன்போது ஐ.நா. விசேட அறிக்கையாளரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த அமர்வில், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கை எதிர்வரும் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே, ஐ.நா. விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரீப் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

மனிதப்

தெரிவித்துள்ளனர். மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி வழக்கு, மனித புதைகுழிக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிணறு தொடர்பான வழக்கு ஆகிய இரண்டு வழக்குகளும் மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

மனிதப் புதைகுழி எனச் சந்தேகிக்கும் இடத்தில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மனித எலும்புக்கூடுகள் என்று சந்தேகிக்கப்படுகின்றன. அந்த எலும்புக்கூடுகளைப் பரிசோதனை செய்வதற்கென காணாமற்போனவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணிகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 3 நிறுவனங்களின் பெயர்களைப் பரிந்துரைத்திருந்தனர்.

ஆனால் அந்த நிறுவனங்களில் ஒன்றுக்கேனும் பரிசோதனைக்கு அனுப்பக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முற்படவில்லை. அந்த நிறுவனங்களை நிராகரித்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர், புதிதாகத் தாம் கண்டறிந்ததாகத் தெரிவித்து அமெரிக்காவில் உள்ள நிறுவனம் ஒன்றைக் குறிப்பிட்டு அங்கு அனுப்புவதே சிறந்தது என்று நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அந்த நிறுவனத்தில் பரிசோதனை செய்வதற்காக எலும்புக்கூடுகளை அங்கு அனுப்புவதற்கான அனுமதியையும் நீதிமன்றிடம் நேற்றுக் கோரினர்.

எனினும் அவர்கள் பரிந்துரைத்துள்ள நிறுவனம் தொடர்பில் தாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டதாக காணாமற்போனவர்களின் குடும்ப உறவுகள் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பரிந்துரைத்துள்ள அமெரிக்க நிறுவனம் ஒரு சிறந்த நிறுவனம் அல்ல. குறித்த நிறுவனம் எவ்வாறு பரிசோதனைகளை மேற்கொள்ளுகின்றது என்பது குறித்து மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

நாம் அறிந்த வகையில், மாத்தறை புதைகுழியின் வழக்கு விடயத்தில் எலும்புக்கூடுகள் ஆய்வு செய்யப்பட்டபோதும், குறித்த அமெரிக்க நிறுவனமே பரிசோதனையை மேற்கொண்டிருந்தது. அங்கு கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் மிருகத்தின் எலும்புக்கூடுகள் என்ற தகவலை அந்த நிறுவனம் வெளியிட்டிருந்தது. அதன் அடிப்படையில் காணாமற்போனவர்கள் சார்பில் இந்த அமெரிக்க நிறுவனத்தில் நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் இந்த விடயம் குறித்து நாம் எதிர்ப்பைத் தெரிவித்தோம்.

எனவே காணாமற்போனவர்கள் சார்பாக, எங்களால் முன்வைக்கப்பட்டிருந்த மூன்று நிறுவனங்களிடமும் தொடர்பை ஏற்படுத்தி, அவற்றின் அறிக்கையினை அடுத்த தவணைக்கு நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதாக மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தோம் என சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் குறிப்பிட்டார்.

இருதரப்பு கருத்துக்களையும் பரிசீலித்த நீதிவான், இந்த வழக்கை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி விசாரணைக்காக ஒத்திவைத்தார்.

இந்த நிலையில் மனிதப் புதைகுழிக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிணறு தொடர்பான வழக்கும் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது சட்ட வைத்திய நிபுணர் வைத்தியரட்ன, மனிதப் புதைகுழி அகழ்வது தொடர்பான ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்படுவதாகவும், குறித்த ஒழுங்கு விதிகள் சுகாதார அமைச்சிடம் இருந்து நீதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டு அனுமதி பெற்ற பின், நீதி மன்றத்தின் அனுமதியோடு, கிணற்றின் அகழ்வு பணியை மேற்கொள்ளலாம் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தார். இதனையே நேற்றும் சட்ட வைத்திய அதிகாரி மன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் குறித்த நடவடிக்கைகள் இன்னும் நிறைவடையாத நிலையில், குறித்த வழக்கு விசாரணைகளும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-வ-4,56)

வவுனியா

வீதம் நிதியுதவி வழங்க முன் வந்துள்ளது. இதன்பிரகாரம் குறித்த பௌத்த விகாரைகளுக்கான தேவைகள் தொடர்பில் பிரதேச செயலகங்களின் பரிந்துரைகளுக்கு அமைய சீன அரசின் நிதி எதிர்வரும் 10 ஆம் திகதி கையளிக்கப்படுமென வவுனியா மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (த-வ -101)

மரண அறிவித்தல்கள்

தோற்றம்: - 11.07.1937 மறைவு: - 04.06.2016

குமாரசாமி சிவகுருநாதபிள்ளை

(இளைப்பாறிய CWE முகாமையாளர்)

குருவீதி, காங்கேசன் துறையைச் சேர்ந்த குமாரசாமி சிவகுருநாதபிள்ளை அவர்கள் கடந்த (04.06.2016) சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-பார்வதிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், விமலநாயகியின் (ரதி) அன்புக் கணவரும், அகிலசுதன் (கனடா), சிவசுதன் (லண்டன்), அச்சுதன் (கனடா), சுரநுதா (கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அஜித்தா, துஷாந்தி ஆகியோரின் மாமனும், சுவாதிக், யனவிகா, அமிர்தா ஆகியோரின் அப்பப்பாவும், காலஞ்சென்ற பொன்னம்மா, இராசமணி, சிவசுப்பிரமணியம், அன்ன லட்சுமி, கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் சகோதரரும், வள்ளிநாயகி இராமலிங்கம், தில்லைநாயகி குணநாயகம், கோகுலநாயகி சிவசுப்பிரமணியம், அகிலாண்டநாயகி - ஜெயபாலன், நவநீதன் -சியாமா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.06.2016) புதன்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் (09.06.2016) வியாழக்கிழமை பி.ப. 04.00 மணியளவில் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
011 2738492

இல. 11 1/1A, கெம்பல் பிளேஸ்,
தெகிவளை.

சின்னவன் சுப்பிரமணியம்



VCC மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், இல.12 யமுனா வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சின்னவன் சுப்பிரமணியம் நேற்று (06.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் - மருதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமணி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மணிராஜா (Java civil Engineering Construction), சுகிதா, சசிகலா, ரேவதி, கண்ணபிரான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாயினி (ஆசிரியர், நாயன்மார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), காந்தரூபன், ஈஸ்வரன், சிவரூபன், துசித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வத், ஆஷிகா, அபிஷாந், பவித், ஜஸ்மினா, நதீரா, நவீன், நகீத், சாய்சரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 728 3600

மரண அறிவித்தல்கள்

கார்த்திகேசு கந்தசாமி

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி, தச்சந்தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தசாமி நேற்று (06.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.06, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(j/1961)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

சின்னத்தம்பி ஆனந்தகுமாரசாமி

(உரிமையாளர் இந்திரா ஸ்ரோஸ் வெளிமடை, மாங்குளம்)



பிறப்பு : 24.04.1940 இறப்பு: 05.06.2016

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் மாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆனந்தகுமாரசாமி (பெரியராசா) 05.06.2016 ஞாயிற்று கிழமை காலமானார்.

அன்னார் சித்தன் கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இரத்தினம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அரியரத்தினம் - புக நேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிரியாசக்தி, அருந்தவநாதன் மற்றும் கமலாதேவி, தில்லைநாயகி, தேவகாரணி, சிவசுப்பிரமணியம், சண்முகநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் ராமநாதன், பிறைசேர் அழகனார், சக்திதாசன், விபுலாதேவி, அருந்ததி ஆகியோரின் மைத்துனரும் கிருஷ்ணதாசன், குமாரதாசன், ஸ்ரீபத்மதாசன், சிவதாசன், நளாயினி , ஸ்ரீ சண்முகதாசன் ஆகி யோரின் மைத்துனரும் தேவகி, பேர்லின், ஸ்கந்தபூசணி, சுபத்திரா, அருணகிரி, சாமினி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லக்சுமி வாசா சித்தன் கேணி இல்லத்தில் நாளை (08.06.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''லக்சுமி வாசா''
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்

திருமதி புனிதவதி கணநாதன்

இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி கணநாதன் நேற்று (06.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - கண்ணகை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தில்லையம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற கணநாதனின் அன்பு மனைவியும், ஜெயசோதி, காலஞ்சென்ற முத்துராஜம் ஆகியோரின் சகோதரியும், நித்தியானந்தன் (சுவிஸ்), சுதர்சனா (கனடா),கோபிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சகிலா (சுவிஸ்), வசந்தன் (கனடா), சிவகீர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், அபிஷேக், யுஜன், கஜிந், வினோஜன், ஆரணி, வேழினி, மகிழினி, மகிழ்வேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில்மேற்கு,
இணுவில்.
(j/1953)
(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.
077 990 1608

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கிராமசேவகராக கடமையாற்றும் **திரு. செல்வன்குமார்** அவர்களின் அன்புத் தந்தையார்

காசிப்பிள்ளை கந்தசாமி

அவர்களின் மறைவுச் செய்தி எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
நலன்புரி சங்க அங்கத்தவர்கள் அனைவரும்
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை

துயர் பகிர்கின்றோம்

எமது சங்கத்தின் அங்கத்தவரான
திரு. சு. மணிராஜா
(Java Engineering Construction) அவர்களின் தந்தை

சின்னவன் சுப்பிரமணியம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம்
வடமாகாணம்,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 . 02 . 1947
விண்ணில் 31 . 05 . 2014

திருமதி கமலாதேவி பரராஜசிங்கம்

ஈராண்டு கடந்தாலும் உன் ஞாபகம் எங்களை
வாட்டுதம்மா
நீ இல்லா இவ்வுலகில் நாங்கள் எங்கு செல்வோமம்மா
தாய் என்ற சொல்லுக்கு தனித்துவம் பெற்றாயம்மா

உங்கள் பிரிவால் துயருறும்
மகன்: சுபேந்திரன்
மகள்: சர்மிளா
வைமன் வீதி, நல்லூர்.

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.05.2016 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை

அமரர் ஆறுமுகம் தம்பு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி நிகழ்வுகள் 06.06.2016 திங்கட்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (08.06.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி. **குடும்பத்தினர்.**

தரைமட்டமானது

பலியானதுடன் 47 பேர் படு காயமடைந்துள்ளனர். சம்பவ இடத்தை அண்மித்த பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பாதுகாப்பான 5 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதக்கிடங்கிலிருந்து கனரக வெடிபொருள்கள் நாலாபுறமும் சிதறி விழுந்ததால் 50 வீடுகள் முழுமையாகவும், 20 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

எனினும், விபத்துக்கான காரணம் குறித்தோ, விபத்தில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடவோ கால அவகாசம் தேவைப்படுகின்றது என்று மேற்கு படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார். தீ விபத்தில் முகாமுக்குள் எவரும் உயிரிழக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஜனாதிபதி தலைமையில் நேற்று அவசரமாகக் கூட்டப்பட்ட தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலும் இது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும் பிரதேச மக்களுக்கு வெளியில் இருந்து பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் கொண்டுவந்து வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த வெடி விபத்தால் நேற்று மூடப்பட்ட பாடசாலைகளுள் சில பாடசாலைகள் இன்று திறக்கப்படவுள்ளன.

நேற்றுப் பிற்பகல் வரை, ஒரு கிலோ மீற்றராக வரையறுக்கப்பட்டிருந்த அபாய வலயம் மாலையில் 500 மீற்றராகக் குறைக்கப்பட்டது. மூடப்பட்ட வீதிகள் இன்று மாலைக்குள் மீண்டும் வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-வ-5)

கடற்பாறையில்

றுக்களாக்கப்பட்ட நிலையில் குறித்த கஞ்சாவை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் குறித்த கஞ்சாவை மீட்டிருந்தனர். பின்னர் அதனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கரையிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் மிதந்து வந்த குறித்த பொதி கடலினுள் காணப்பட்ட பாறை ஒன்றில் சிக்கிய நிலையில் காணப்பட்டுள்ளது. கடற்படையினர் அந்தப் பொதியைக் கண்டு பிரித்துப் பார்த்தபோது, அதனுள் கஞ்சா போதைப் பொருள் இருந்தமை கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் அதனைப் பொறுப்பெடுத்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் குறித்த பொதியை மீட்டபோதும், ஏனைய படகோ எதுவித பொருள்களும் மீட்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(த-வ-4,109,108, 26)

கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத் தராகக் கடமையாற்றும் எமது சங்க அங்கத்தவர்.

திருமதி புவனேஸ்வரி லோகநாதன் அவர்களின் கணவர்

சத்திலிங்கம் லோகநாதன்

அவர்களின் மறைவை யொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி
யாழ். அரசினர் பொது வைத்தியசாலை. **கூட்டுறவுச் சங்கம்.**

41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 18.12.1932
மறைவு 28.04.2016

அமரர்
சின்னட்டி மார்க்கண்டு
(மயிலிட்டி)

திதி: சித்திரை மாத அபரபக்க ஷஷ்டி

கடந்த 28.04.2016 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வம் அமரர் சின்னட்டி மார்க்கண்டு அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.06.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"அட்சய பவனம்"
ஆனைக்குட்டி மதவடி வீதி,
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1947 . 06 . 12
மறைவு 2015 . 05 . 20

அமரர் செல்வி தனபாக்கியவதி (தனம் ரீச்சர்)
கந்தையா

திதி : திருதியை

அன்பு மொழிபேசி அரவணைத்து எமைக்காத்து
பண்புடனே நாங்கள் பார்தனில் விளங்க
சேவைதனை மேலெனவே எண்ணிச்சிறப்புடனே பணிகள் பல புரிந்து
பாலருக்கறிவூட்டும் பணியாலே இவ்வுலகில்
பலரும் வாழ வழிகாட்டிய உத்தமியே!
நேசமொடு சிந்தையதாய் தங்களின் பாச
நினைவூற்றுக்களைச் சிந்தையில் நினைந்து
வாழுங்காலமெலாம் மனதில் நினைவிருத்தி - உங்கள்
ஆத்ம சாந்திக்காய் ஆராதிக்கின்றோம்

பிற்றப்பவர் வீதி,
உசன், மிருசுவில்.

மீளாத்துயருடன்....
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஸ்கமவில்

தெரிவித்தார். சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தையடுத்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று குறித்த பகுதியைப் பார்வையிடச் சென்றிருந்தார். இதன்போது அவிசாவளை செயலகப் பிரிவுக்குட்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்புடன் பேச்சு நடத்திய பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்தினை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பவம் இடம்பெற்றதையடுத்து நானும் ஜனாதிபதியும் கலந்துரையாடி சில முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளோம். வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதையடுத்து இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள வீடுகள் மற்றும் கடைகள் என்பன சேதமாகியுள்ளன.

சிறிதளவில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு உரிய பண உதவிகளையும், முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பது எனவும் தீர்மானித்துள்ளோம். அதற்கான நிதி ஒதுக்கீடுகளை அரசு உடனடியாக மேற்கொள்வுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கும் வகையில் அரசு சகல உதவிகளையும் மேற்கொள்ளும். ஏற்பட்ட சேத விவரங்களும், பொது மக்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேத விவரமும் இதுவரை கணக்கிடப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகள் சில தினங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேபோல உணவு, மருத்துவ மற்றும் அடிப்படை வசதிகளை எமது பாதுகாப்புத் தரப்பினூடாக உடனடியாக மேற்கொள்வதற்கும் நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். எவ்வாறிருப்பினும் மக்களின் பாதுகாப்பில் நாம் அதிக அக்கறை கொண்டிருப்பதனால், நிலைமைகள் வழமைக்குத் திரும்பும் வரையில் அநாவசியமான செயற்பாடுகளை மக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

மேலும் மக்கள், எமது முப்படைகளுக்கும் பூரண ஒத்துழைப்புகளை வழங்கி செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (த-வ-5)

ஆயுதக்

பொருள்கள் களஞ்சியப் படுத்தல் தொடர்பிலான விசேட வெளிநாட்டு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்பு முறைப்படி செய்யப்பட்ட ஒன்றென கூறப்படுகின்றமை மற்றும் நேரில் பார்த்தவர்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே, இந்தத் தகவலை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

சிறிய ஆயுதக் களஞ்சிய அறையிலிருந்து பெரிய ஆயுதக் களஞ்சிய அறை வரை வெடிப்பு பரவிச்சென்றமை இதற்கான காரணம் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் வெடிபொருள்கள் களஞ்சியப்படுத்தல் தொடர்பிலான விசேட வெளிநாட்டு நிபுணர்கள் தெரிவித்துள்ளதாவது:-

பெரிய அளவிலான ஆயுதக் கிடங்குகள் நிலத்துக்கு அடியிலேயே உள்ளன. ஆயுதக் கிடங்கில் இறுதிப் பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டுள்ள கருவி ஒன்று வெடித்தால் மாத்திரமே, இவ்வாறான மிகப்பெரிய வெடிப்பு ஒன்று ஏற்படும்.

போராட்டம் ஒன்றின்போது ஆயுதக் கிடங்கு எதிரியின் கைக்கு செல்லும் நிலை ஏற்பட்டால், தப்பிச் செல்வதற்கு முன்னர் அது எதிரியின் கைக்குச் செல்ல இடமளிக்காமல் அனைத்தையும் வெடிக்க வைக்க அவ்வாறான முறை கையாளப்படும்.

சலாவ ஆயுதக் கிடங்கு இந்த முறையில் தீ பிடித்து அழிந்துள்ளது என்ற அடிப்படையில், எதிரியின் கையில் கிடைப்பதற்குப் பதிலாக, அழிக்கும் முறையில் செயற்படுத்தப்பட்டுள்ளதெனச் சந்தேகம் எழுந்துள்ளது.

நீண்ட காலமாக முழுமையான பாதுகாப்புடன் இருந்த ஆயுதக் கிடங்கு வெடித்துள்ளமை முழுமையான சூழ்ச்சிக்கமைய மேற்கொள்ளப்பட்டது என்பது வெளிநாட்டு நிபுணர்களின் கருத்தாக உள்ளன.

இதேவேளை, இந்த வெடிப்பினால் கனரக ஆயுதங்கள் பாதுகாக்கப்பட்ட இரு களஞ்சியசாலைகள் முற்றாக அழிந்துள்ளன. மேலும் சில கிடங்குகள் பாதிப்படைந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

பாதுகாப்புப்

பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.-

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளபோதும், ஆயுத களஞ்சியத்திலிருந்து தொடர்ந்து வெடிப்புச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இராணுவ முகாமை சுற்றிக் காணப்படும் பிரதேசத்தில் விழுந்து கிடக்கின்ற ஆயுதங்களையும், ஆயுதங்களின் பாகங்களையும் அகற்றி துப்புரவு செய்வதற்கு 96 மணிநேரம் இராணுவத்தினரால் கோரப்பட்டுள்ளது.

96 மணி நேரத்தின் பின்னரே இராணுவ முகாமை சுற்றியுள்ள பிரதேசங்களைப் பாதுகாப்பான பிரதேசமாக அறிவிக்க முடியும்.

வீடுகளுக்குள்ளும் வெளியிலும் ஆயுத களஞ்சியத்திலிருந்து சிதறிய ஆயுதங்களின் துண்டுகளும் பாகங்களும் வந்து வீழ்ந்துள்ளன. சில ஆயுதங்கள் முழுமையாக விழுந்து காணப்படுகின்றன. எனவே 96 மணித்தியாலத்திற்கு பின்னரே பிரதேசத்தில் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை உறுதிப்படுத்திக் கூறமுடியும் - என்றார்

இதேவேளை, கொழும்பு அவிசாவளை பிரதான வீதி போக்குவரத்து மீண்டும் வழமைக்கு திரும்ப 48 மணி நேரமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

ஆயுதக்

பொது எதிரணியின் தலைவராகச் செயற்படும் தினேஷ் குணவர்த்தன இது பற்றி அரசிடம் வினாக்களைத் தொடுக்கவுள்ளார். இந்தச் சம்பவத்தில் எத்தனை பேர் உயிரிழந்தனர்? எத்தனை வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டது? எதனால் இப்படியொரு விபத்து ஏற்பட்டது? என்பது உட்பட மேலும் பல விடயங்கள் குறித்து இதன்போது வினவப்படும், என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்தார். (த-வ-5)

41ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 . 08 . 1948 | உதிர்வு 28 . 04 . 2016

அமரர் ஞானப்பிரகாசம் சரஸ்வதி (தேவி)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
இருந்த அன்புத் தாயே
பாசம் நிறைந்த உங்கள் முகம் காண
கவலையுடன் தேடுகிறோம்.

கடந்த 28.04.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி ஞா. சரஸ்வதி அவர்களது அந்தியேட்டி கிரியைகள் இன்று (07.06.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஐந்து வேம்படி, தாவடி, கொக்குவில். குடும்பத்தினர்.
077 284 6901

மரண அறிவித்தல்

தோற்றம்: 14.01.1931 மறைவு: 06.06.2016

சிதம்பரப்பிள்ளை குழந்தைவேலுஐயா

(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம்)

வெற்றிகாடு, கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சி. குழந்தைவேலு ஐயா நேற்று (06.06.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், பராசக்தி, தங்கம்மா, அம்பிகை, மாணிக்கராசா (களஞ்சியப் பொறுப்பாளர், உடுப்பிட்டி ப. நோ. கூட்டுறவுச் சங் கம்), தேவகி, மஞ்சுளா, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனும், சண்முகசுந்தரம், வரதராஜா, சுமனேஸ்வரி (ஆசிரியை, யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), சண்முகதாஸ் ஆகியோரின் அன்பு மாமனும், தையல் நாயகி யின் அன்புச் சகோதரனும், சிவகௌரி (சிறுவர் நீதிவான் நீதிமன்றம், முகாமைதுவ உதவி யாளர்), சிவகுமார், அபிராமி, லோகிதன், ராக்சன், லோசிகா, சொரூபன் (LB FINA NCE PLC) ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோளங்கன் பூவரசம் திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
வெற்றிக்காடு, கரணவாய் தெற்கு, கரவெட்டி.
077 941 9544

(c 2135) (10,17)

மரண அறிவித்தல்

திருமதி அன்னம்மா கார்த்திகேசு

தோற்றம் 25 . 07 . 1930 | மறைவு 05 . 06 . 2016

நவிண்டில், கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா கார்த்திகேசு 05.06.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பர் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் சரஸ்வதி, தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜகுலேந்திரன் (மலேசியா), செல்வராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயராணி, துலேந்திரன் (ஜேர்மனி), உஷாராணி, ஞானேந்திரன், கால்ஞ்சென்ற குணேந்திரன், பரமேந்திரன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரோயினி, தியாகராசா, பவி, ராஜேஸ்வரி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
செல்வராணி (தேவி -மகள்)
ஜேர்மனி.

நவிண்டில்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(N/66)
(11,17)
077 663 9995

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

மரண அறிவித்தல்

பிறப்பு: 7.1.1964 இறப்பு: 5.6.2016

இசக்கி ஆச்சாரி பாக்கியராஜா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இசக்கி ஆச்சாரி பாக்கியராஜா 5.6.2016 ஞாயிற்றுக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இசக்கி ஆச்சாரி மற்றும் பிச்சம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சுந்தரம் மற்றும் பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், நிரோஜ் (யாழ்.மத்திய கல்லூரி 2013) ஜோதினி (வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி G.C.E A/L 2016) துபாகரன் (யாழ். மத்திய கல்லூரி G.C.E A/L 2018) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகம்மா, கிருஷ்ணசாமி, கந்தசாமி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற நாகநந்தினி ஆகியோரின் அருமைச் சகோதரனும், பிறேமாவதி, லலிதா, புஸ்பா, தவராசா, வசந்தராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(7.6.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

20/1, கலைப்புலவர் வீதி, குடும்பத்தினர்.
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(J/1974) (10,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி, நெடுந்தீவு தங்கத்தை தமதாக்கின

யாழ்ப்பாணம், ஜூன் 7
பிரதேச செயலக தெரிவு அணிகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் குண்டு எறிதலில் ஆண்கள் பிரிவில் கரவெட்டி பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் நெடுந்தீவு பிரதேச செயலக அணியும் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளன.
ஆண்கள் பிரிவில் கரவெட்டி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ஆர். நிமலேந்திரா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். வெள்ளிப்பதக்கத்தை தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை சேர்ந்த ஈ.ரதீஸ்வரனும், வெண்கலப்பதக்கத்தை சாவகச்சேரி பிரதேச செயலக அணியை சேர்ந்த ஆர்.நிசாந்தனும் கைப்பற்றினர்.
பெண்கள் பிரிவில் தங்கப் பதக்கத்தை நெடுந்தீவு பிரதேச செயலக அணியைச் சேர்ந்த கருணகலாதேவி கைப்பற்றினார். இரண்டாமிடத்தை நல்லூர் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த கே.சர்மிளாவும், மூன்றாமிடத்தை சங்கானை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த எஸ்.ஜீவமலரும் தமதாக்கினர். (ம-422)

மன்னார் மாந்தை சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 7
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் மாந்தை பிரதேச செயலக அணியும் சம்பியனாகின.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை பிரதேச செயலக அணி மோதியது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை பிரதேச செயலக அணி மோதியது. இதில் மாந்தை பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



ஆஸியின் ஆட்டத்தில் திணறியது மே.தீவுகள்

ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளை ஊதித்தள்ளியது ஆஸ்திரேலியா. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. சுழலுக்கு சாதகமான ஆடுகளம். எனவே முதலில் களத்தடுப்பு என்பது சரியானதுதான். முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே பிளெச்சரை பவிலியனுக்கு அனுப்பினார் ஸ்ராக். சாள்ஸ் ஓர் முனையில் சிறிது நேரம் தாக்குப்பிடித்தாலும் பிராவோ, ரம்டின், சாமுவேல்ஸ் பதின்ம ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்பினர். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் வாணவேடிக்கை காட்டிய பொலார்ட் இந்த ஆட்டத்தில் ஓர் ஓட்டத்தைத்தானும் பெறவில்லை. பொலார்டை அனுப்பியவர் லையன். லையனுடன் இணைந்து சாம்பாவும் தீவுகளை திணறடித்தார். தீவுகளின் தலைவரான கோல்டர், ரி-20 உலகக்கிண்ண நாயகன் பிரீத்வைட், நரைன் மூவரும் சாம்பாவிடம் சிக்க, 116 ஓட்டங்களில் ஓய்ந்தது மேற்கிந்தியத் தீவுகள். பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன், சாம்பா இருவரும் தலா 3 இலக்குக ளையும், ஸ்ராக் 2 இலக்குகளையும், மார்ஷ், மக்ஸ்வெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கியது ஆஸ்திரேலியா. பதட்டமில்லாத ஆட்டத்தை வெளிப்படுத்தினார் வோர்ணர். பின்ஞ், கவாயா இருவரும் தீவுகளுக்கு சிக்கலை ஏற்படுத்தக்கூடிய வகையில் செயற்பட்டனர். பின்ஞ் 19 ஓட்டங்களுடனும், கவாயா 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தாலும் இலக்கு 117 ஓட்டங்கள் என்பதால் ஆஸியின் வெற்றி ஆணி அடித்ததைப்போன்று இருந்தது. அரைச்சதம் கடந்தார் வோர்ணர். முடிவில் 6 இலக்குகளால் தீவுகளை வீழ்த்தியது ஆஸி. பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக நரைன் 2 இலக்குகளையும், பென், கோல்டர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆஸிக்கு போனஸ்

117 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 146 பந்துகள் மீதமிருக்க இந்த இலக்கை எட்டியதன் மூலம் அந்த அணிக்கு, வெற்றிக்கு கிடைக்கும் புள்ளியை விட மேலதிகமாக ஒரு புள்ளி கிடைத்துள்ளது.

இலங்கையை அச்சுறுத்தும் ஸ்ராக்

காலில் சத்திர சிகிச்சை மேற்கொண்டு கடந்த ஆறுமாத காலமாக ஓய்விலிருந்தார் ஸ்ராக். நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரில் அவரது பெயர் சேர்க்கப்பட்டாலும் அவர் களமிறங்குவாரா என்பதில் சந்தேகம் நிலவியது. அவ்வாறு களமிறங்கினாலும் அவரது வேகம் நிலைத்திருக்குமா என்று கேள்வியெழுப்பப்பட்டது. ஆனால் தனது மீள்வருகையை அசத்தலாக நிரூபித்துள்ளார் ஸ்ராக். ஆஸி அடுத்ததாக இலங்கைக்கு வரவுள்ள நிலையில் ஸ்ராக்கின் வருகை நிச்சயம் இலங்கைக்கு சவாலாக அமையும்.

சுழலையும் பலப்படுத்தியுள்ள ஆஸி.

ஆஸ்திரேலியாவின் பலம் வேகப்பந்து வீச்சும், துடுப்பாட்டமுமாகவே கருதப்பட்டது. சுழல்பந்துவீச்சு என்பது ஆஸிக்கு எட்டாக் கனியாகவே இருந்து வந்தது. வோர்ணின் ஓய்வுடன் சுழல் ஆதிக்கம் உள்ள ஆடுகளங்களில் ஆஸியை வீழ்த்திவிட முடியும் என்ற மனப்பதிவு இருந்துவந்த நிலையில், தற்போது அதை மாற்றியுள்ளது ஆஸி. லையன், சாம்பா என இரு சுழல் வீரர்களை அணியில் இணைத்துக் கொண்டதன் மூலம் அது தனது பலத்தை இன்னும் இரட்டிப்பாக்கியுள்ளது. (ம)

நீளம் பாய்தல் போட்டியில் உடுவில், கரவெட்டி தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
பிரதேச செயலக தெரிவு அணிகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் நீளம் பாய்தலில் ஆண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் கரவெட்டி பிரதேச செயலக அணியும் தங்கப் பதக்கம் வென்றன.
ஆண்கள் பிரிவில், உடுவில் அணியை சேர்ந்த வி.ஜஸ்மினன் தங்கப்பதக்கத்தை வென்றார். வெள்ளிப்பதக்கத்தை பருத்தித்துறை பிரதேச செயலக அணியை சேர்ந்த ஆர்.விதுசனும், வெண்கலப் பதக்கத்தை எஸ்.ஏனோக்ராஜும் தமதாக்கினர்
பெண்கள் பிரிவில் கரவெட்டி பிரதேச செயலக அணியை சேர்ந்த எஸ்.ஆரணி தங்கம் வென்றார். உடுவில் பிரதேச செயலக அணியை சேர்ந்த மானசிதா வெள்ளிப்பதக்கத்தையும், தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை சேர்ந்த வி.சாத்வீகா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-422)

கொக்குவில் ஏ.பி. அணி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 7
கிருஸ்ரார் வி.கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் ஏ.பி. அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
கிருஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் ஏ.பி. அணியை எதிர்த்து தெல்லிப்பழை கலையொளி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஏ.பி. அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் கலையொளி அணியின் சார்பில் ரகுமான் 2 இலக்குகளையும், நேதீசன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை கலைஒளி அணி 4.4 பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்ததையடுத்து கொக்குவில் ஏ.பி. அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

நெடுந்தீவு, சண்டிலிப்பாய் தங்கம் 10ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில்

யாழ்ப்பாணம், ஜூன் 7
பிரதேச செயலக தெரிவு அணிகளுக்கிடையிலான 10ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் ஆண்கள் பிரிவில் நெடுந்தீவு பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் தங்கத்தை தமதாக்கியுள்ளன.
ஆண்கள் பிரிவில் நெடுந்தீவு பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர். லஜீகரன் தங்கப்பதக்கத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த எஸ்.சோபிதன் வெள்ளிப்பதக்கத்தையும், ஆர்.கண்ணன் வெண்கலத்தையும் வென்றனர்.
பெண்கள் பிரிவில் தங்கப்பதக்கத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த ரி.மஞ்சுவும், வெள்ளிப்பதக்கத்தை தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை சேர்ந்த ஐ.பியூலாவும் பெற்றனர். (ம-422)

யாழ். நிலா, புனித லோறன்சியார் அணிகளுக்கு இடையிலான நட்புரீதியிலான துடுப்பாட்டத் தொடரில் புனித லோறன்சியார் அணி வெற்றிபெற்றது. (ம-21)

ஊர்காவற்றுறை தங்கம் வென்றது

பிரதேச செயலக தெரிவு அணிகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் உயரம் பாய்தலில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் தங்கம் வென்றது.
ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் கே.தனுசன் தங்கப் பதக்கத்தையும் இரண்டாமிடத்தை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜனனீதன், மூன்றாமிடத்தை நல்லூர் பிரதேச செயலக அணியை சேர்ந்த கே.சதீசன் ஆகியோர் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணங்களை அள்ளியது மன்னார் பிரதேச செயலகம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் மன்னார் பிரதேச செயலக அணிகள் சம்பியனாகின. மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை பிரதேச செயலக அணி மோதியது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டான் பிரதேச செயலக அணி மோதியது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 15:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
(ம-23)

மாகாணமட்ட ஹொக்கி நாளை ஆரம்பமாகிறது

கரணவாய், ஜூன் 7
மாகாண மட்ட ஹொக்கித் தொடர் நாளைமுதல் இரண்டு தினங்கள் வரை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
நாளைய ஆட்டங்களில் 19 வயது ஆண்கள் பிரிவில் வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரியும், மகாஜனக் கல்லூரியை எதிர்த்து யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதவுள்ளன.
19 வயது பெண்கள் பிரிவில் வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தை எதிர்த்து குளமங்கால் ஆர்.சி.ரி.எம். பாடசாலையும், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதவுள்ளன. (ம-108)

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்றார் ஜோகோவிக்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் ஜோகோவிக் கிண்ணம் வென்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம் கிரான்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அத்தனை கிண்ணங்களையும் வென்றவர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.
பரிஸ் நகரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார் முர்ரே. சர்வதேசத் தரப்படுத்தலில் ஜோகோவிக் முதலிடத்தில் உள்ளவர். முர்ரே இரண்டாம் இடத்தில் உள்ளவர். முதலிரு வீரர்களுக்கும் இடையே இந்த ஆட்டம் நடைபெற்றதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. இதனால் அடுத்த நான்கு செற்களில் மூன்றில் வெற்றி பெறவேண்டும் என்ற இக்கட்டான நிலை ஜோகோவிக்குக்கு ஏற்பட்டது. இரண்டாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், மூன்றாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், நான்காவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் கைப்பற்றிக் கிண்ணம் வென்றார் ஜோகோவிக். இந்த வெற்றியின் மூலம் பிரான்ஸ் கிண்ணத்தை ஒருதடவையேனும் வெல்லாதவர் என்ற விமர்சனத்துக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். தவிர சர்வதேச அந்தஸ்துப் பெற்ற அனைத்துவிதமான கிண்ணங்களையும் வென்றவர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார். (ம)

இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 7
மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் மடு பிரதேச செயலக மைதானத்திலும் அடம்பன் பிரதேச சபை மைதானத்திலும் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டத்தில் அல்பதா அணியை எதிர்த்து ஏசியன் அணி மோதவுள்ளது.
(ம-23)

கிறீன்பீல்ட் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 7
மன்னார் மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிறீன்பீல்ட் அணி சம்பியனானது.
மன்னார் புனித சவேரியார் தேசிய பாடசாலை மைதானத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கீறீன்பீல்ட் அணியை எதிர்த்து அல்பதா அணி மோதியது. இதில் கீறீன்பீல்ட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

அமெரிக்காவைத் தகர்த்தது கொலம்பியா சொந்த மண்ணில் சுருண்ட சோகக்கதை

அமெரிக்காவில் நடைபெற்று வரும் கோபா அமெரிக்கக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் அமெரிக்காவுக்கு அதிர்ச்சியளித்தது கொலம்பியா.
ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே கொலம்பியா ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. 16ஆவது நிமிடத்தில் செபஸ்டியன் பெரஸ் முதல் கோலைப் பதிவுசெய்து அமெரிக்காவுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தினார். பதில் கோலைப் பதிவு செய்ய பலமுறை அமெரிக்கா முயற்சி செய்த போதிலும் எதுவும் பயனளிக்காத நிலையில் முதல்பாதி முடிவுக்கு வந்தது.
அமெரிக்காவில் வைத்து அந்த அணியையே வீழ்த்தும் முனைப்பில் கொலம்பியா. பதிலடி கொடுக்கும் முனைப்பில் அமெரிக்கா. இரண்டாம் பாதி ஆரம்பமானது. 53ஆவது நிமிடத்தில் ரொட்ரிக்கஸ் கொலம்பியாவின் இரண்டாவது கோலைப் பதிவு செய்ய அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. மேலதிக மாற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது கொலம்பியா.
(ம)

டயமன்ஸ், யங்ஹென்றிஸ் முன்னேற்றம் கண்டுள்ளன

கரணவாய், ஜூன் 7
இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.
இமையாணன் மத்தியின் மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியும் இளவாலை சென்.லூட்ஸ் அணியும் மோதின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 16ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸின் சார்பாக முதல் கோல் பதிவானது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் யங் ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் அணியும் வதிரி டயமன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பும் இழுபறியாக நீடித்த போதிலும் முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றபெற்றது வதிரி டயமன்ஸ்.
(ம-108)

நவஜீவன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 7
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது.
நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.
சிறந்த கோல் காப்பாளராக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் ரஜீவன் தெரிவானார். சிறந்த வீரனாக நவஜீவன்ஸ் அணியின் உதயசங்கர் தெரிவானார். தொடராட்ட நாயகனாக பலாலி விண்மீன் அணியின் அமலதாசன் தெரிவானார். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.
(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகுவேயை ஊதித்தள்ளியது மெக்சிக்கோ

தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையே நடைபெற்றுவரும் கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மெக்சிக்கோ அணி வெற்றி பெற்றுள்ளது.

ஆட்டத்தின் நாலாவது நிமிடத்தில் மெக்ஸிகோ அணியின் அல்வாரோ முதல் கோலைப் பதிவுசெய்தார். 70 நிமிடங்கள் கடந்த பிற்பாடும் பதில் கோல் பதிவாகவில்லை. 74ஆவது நிமிடத்தில் உருகுவேயின் சார்பாக முதல் கோல் பதிவானது. ஆட்டம் சமநிலையில் முடிவடைய அதிக வாய்ப்புக்கள் உள்ளதாக கருதப்பட்டாலும் 85 ஆவது மற்றும் 92 ஆவது நிமிடங்களில் மெக்சிக்கோவின் சார்பாக அடுத்தடுத்து அசத்தல் கோல்கள் பதிவாக முடிவில் அந்த அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

சரிவில் இருந்து பலம் பெறுவேன் செரீனா வில்லியம்ஸின் சபதம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் கிண்ணத்தை தவறவிட்ட பின்னர், முயற்சியைக் கைவிடப்போவதில்லை என்றும் சரிவில் இருந்து மீண்டு வருவதில் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார் செரீனா வில்லியம்ஸ்.

சர்வதேச அந்தஸ்து பெற்ற கிண்ணங்களைக் கைப்பற்றிய பட்டிலில் 21கிண்ணங்களுடன் மூன்றாவது இடத்திலுள்ள செரீனா வில்லியம்ஸ் 22 கிண்ணங்களுடன் 2ஆவது இடத்தில் உள்ள ஸ்டெபி கிராப்பின் சாதனையை சமச்செய்ய போராடி வருகிறார். ஆஸ்திரேலியத் தொடரினதும் பிரான்ஸ் தொடரினதும் இறுதியாட்டத்தில் தோல்வியடைந்தமையால் அவரது இந்தச் சாதனை முற்றுப்புள்ளியில்லாமல் நீண்டு வருகிறது. இந்த நிலையிலேயே செரீனா தனது முயற்சியைக் கைவிடப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

செரீனா மேலும் தெரிவிக்கையில் – முகுருசாவுக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் நான் நிறைய தவறுகளைச் செய்தேன். நான் இன்னும் சிறப்பாக விளையாடியிருக்க வேண்டும். இறுதி ஆட்டத்தில் வெல்வதற்கான முழு ஆற்றலையும் நான் செயற்படுத்தவில்லை. ஆனால் அவர் செயல்படுத்தினார். அதனால் அவர் வெற்றி பெற்றார். முகுருசாவின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இந்த தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றை தீர்க்க முயல்வேன். அதிக கிரான்ட்ஸ்லாம் கிண்ணங்களைக் கைப்பற்றிய வரிசையில் சாதனையை நிலைநாட்டுவேன். முயற்சியைக் கைவிடேன். என்றார்.

(ம)

இங்கிலாந்துத் தொடர் பாகிஸ்தானுக்கு பரீட்சை

–யூசுப்

பாகிஸ்தான் அணி இங்கிலாந்து சென்று நான்கு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ள நிலையில் இந்தத் தொடர் பாகிஸ்தான் அணிக்கான பரீட்சையாக இருக்கும் என்று அந்த அணியின் முன்னாள் தலைவரான யூசுப் தெரிவித்துள்ளார்.

யூசுப் மேலும் தெரிவிக்கையில் – எனக்கு ஒரு கவலை என்னவெனில், பாகிஸ்தான் அணி சில வருடங்களாக தங்கள் சொந்த மைதானமாக கருதப்படும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் மைதானங்களிலேயே விளையாடி விட்டது. இருப்பினும் டெஸ்ட் தரவரிசையில் ஆஸ்திரேலியா, இந்தியாவிற்கு அடுத்தபடியாக 3ஆவது இடத்தில் இருக்கிறது. இதை அப்படியே தக்கவைத்துக் கொள்ள கடினமான பாதையில் அவர்கள் பயணிக்க வேண்டும்.

இங்கிலாந்து மற்றும் அரபு இராச்சியம் ஆகியவற்றுக்கு இடையிலான சூழ்நிலை முற்றிலும் வேறுபாடானது. இங்கிலாந்து சூழ்நிலை பாகிஸ்தானுக்கு சவாலாக அமையும். அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் மேலும் சவால் தருவார்கள். மொத்தத்தில் பாகிஸ்தானின் இங்கிலாந்துப் பயணம் ஓர் நல்ல பரீட்சையாக அமையும் – என்றார். (ம)

மொகமட் அலியின் சாவுக்கு புளொய்ட் மெவதர் இரங்கல்

குத்துச்சண்டையின் முடிசூடா மன்னனாக இருந்த மொகமட் அலி கடந்த சனிக்கிழமை தனது 74ஆவது வயதில் சாவடைந்தார். இவரது மறைவுக்கு குத்துச்சண்டையின் நிகழ்கால வாரிசாக கணிக்கப்படும் மெவதர் இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

மெவதர் தனது இரங்கல் குறிப்பில் – குத்துச் சண்டை இன்று உலகம் முழுதும் பரவியுள்ளது என்றால் அது மொகமட் அலியால்தான். இதில் சிறிதேனும் ஐயமில்லை. அவர்தான் குத்துச்சண்டையில் தலைமகன். இந்த உலகம் தற்பொழுது அந்த மனிதரை இழந்துள்ளது. இது அலியின் குடும்பத்தவருக்கோ அல்லது குத்துச்சண்டை வீரர்களுக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ சோகமான செய்தியல்ல. ஒட்டுமொத்த உலகுக்கும் சோகமான செய்தியே. அவரின் அசாத்திய திற

இந்திய அணியின் தலைவர் யார்? கொந்தளித்து வெளியேறிய யுவி

மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களுக்கான ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவராக கோக்லி நியமிக்கப்படவுள்ளாரா என்ற கேள்விக்கு பதிலளிக்காது கோபமாக வெளியேறியுள்ளார் யுவராஜ். கோக்லி, ஏழைக் குழந்தைகளுக்காக அறக்கட்டளை ஒன்றை நடத்தத்திட்டமிட்டிருந்தார். இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யுவராஜ், டோனி, ரோகித், தவான் என இந்திய அணியின் வீரர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கும் சினிமா நட்சத்திரங் களுக்கும் இடையே காட்சி கால்பந்தாட்டம் ஒன்றும் நடை பெற்றது. நிகழ்வுகளுக்கு முன்பாக நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் யுவராஜும் கலந்து கொண்டார். அதில் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களுக்கான ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவராககோக்லிநியமிக்கப்படவுள்ளாரா? என்று அவரிடம் கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த யுவராஜ், இது கிரிக்கெட்டைக் குறித்து பேசும் இடமல்ல. மாறாக அறக்கட்டளை தொடர்பாகவும் சமூக நலச்சேவை தொடர்பாகவும் பேசும் இடம் என்று தெரிவித்து விட்டு அங்கிருந்து சென்றாராம்.

(ம)

★ வெற்றித் தேர்வு ★
Proven Memory Techniques
தரம் 6 - 10 வரையான மாணவர்களிற்கு
நிரூபிக்கப்பட்ட ஞாபக நுட்பங்கள்
பயிற்றுவிக்கப்பட உள்ளன. பாடசாலை ஒன்றில் இருந்து தொலைபேசி மூலம் முற்பதிவு செய்யும் முதற் 10 பேருக்கு மாத்திரம் வாய்ப்பு. ஏனையோர் காத்திருப்புப் பட்டியலில் இணைக்கப்படுவர்.
இடம்: இணுவில் அலிசன் வளாகம்
காலம்: 11/6/2016 (சனி) மாலை 5.00
பயிற்றுனர்: Dr. ந. பிரபு MBBS (SL)
0779866409 - 0212216966
Suvadi for Educational Excellence
(A registered non-profit since 2009)

பணிநிலை வெற்றிடம்
1. சிட்டை எழுதுநர் (ஆண்/பெண்)
2. சாரதி (சாரதி அனுமதிப்பத்திரம் A D அவசியம்)
3. விற்பனையாளர்கள் (ஆண்கள்)
முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
(06.06.2016 - 09.06.2016 முற்பகல் 10.00 - 12.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்)
செல்வா எலக்ரிக்கல்ஸ்
இல.21, பலாலி வீதி,
திருநெல்வேலி.
077 764 2771
(J 1940)(13.18)

SAAMSON
Experts in English Training
ஒன்றே மாதங்களில்
SPOKEN ENGLISH
ஷாம்சனிடம் பழகுங்கள்!
"குழந்தைகள் பேசப்பழகுவதை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஷாம்சனின் இப்பயிற்சியின்மூலம், வயதுவேறுபாடின்றி எவரும் ஒன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!"
சனி,ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 11.06.2016
பிரிவு1: 08.00-10.00 பிரிவு3: 01.00-03.00
பிரிவு2: 10.00-12.00 பிரிவு4: 03.00-05.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்!
பயிற்சிநெறிமுடிவில் டிப்ளோமா சான்றிதழ்.
ஷாம்சன் ஆசிரியரின் வாரநாள் வகுப்புகள் : 09.06.2016
பிரிவு 1: காலை-10.00 - 12.00 மாலை
SAAMSON
Experts in English Training
278, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 320 3313
077 1570 486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.